# 2

## நேர்மையான தேசத்தை நோக்கி

### நேர்மைத் திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான செயலமர்வுத் தொடர்



# வள கையேடு



අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்றுநாள் செயலமர்வு

## நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேடு



CIABOC

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

# நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்றுநாள் செயலமர்வு

## நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேடு

முதலாம் பதிப்பு - 2020 மார்ச்
பக்க அமைப்பு -
அச்சிடுதல் -

ISBN - 978-624-5040-16-2

**வெளியீடு**
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
இலக்கம் 36, மலலசேகர மாவத்தைகொழும்பு - 07
தொலைபேசி : 0112596360/1954
மின்னஞ்சல் : ciaboc@ureka.lk
வலைதளம் : www.ciaboc.gov.lk

**அச்சிடல்**
SWIES PRINT PACK
124 A, Negombo Road, Kadana.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் (USAID) மூலம் நடைமுறைபடுத்தப்படுகின்ற இலங்கையின் சனநாயக ஆட்சி மற்றும் வகைப் பொறுப்பு என்பவற்றை வலுவூட்டுவதற்கான கருத்திட்டத்தின் (SDGAP) ஊடாகக் கிடைக்கப்படுகின்ற அமெரிக்க மக்களின் நன்கொடையின் கீழ் இப்பிரகடனம் வெளியிடப்படுகின்றது. மேலும், இவ்வழிகாட்டல் கோவையின் உள்ளடக்கமானது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பொறுப்பாக அமைவதோடு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் அல்லது அமெரிக்க ஐக்கியக் குடியரசின் கருத்துரைகளை எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை என்பது கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

9 786245 040162

# இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செய்தி

“ஊழல்என்பது ஒரு பனி உருண்டையைப் போன்றது. அது உருண்டோட ஆரம்பிக்கும்போது கட்டாயமாக பெருக்கமடையும்” ("Corruption is like a ball of snow" once it’s set a rolling it must increase") என 19ஆம் நூற்றாண்டில் உயிர்வாழ்ந்த ஓர் ஆங்கில எழுத்தாளராகிய சாள்ஸ் கோல்டன் கூறியுள்ளார். மனித நாகரீகத்தின் ஆரம்பக் காலகட்டம் வரையிலான பழமைவாய்ந்த வரலாறுக்கு உரிமைகோரும் ஊழல் எனப்படும் நிகழ்வானது கடந்த பல்லாயிரம் வருடங்களிலான காலப்பகுதி பூராகவும் உலகின் முன்னேற்றமடைந்த மற்றும் முன்னேற்றமடையாத பல நாடுகளைப் பற்றிப்பிடித்து வியாபித்து வருவதனை ஊழலின் அளவினை அளவிடுகின்ற சர்வதேச சுட்டிகளின் பிரகாரம் காணமுடிகின்றது.

ஆயினும இன்றைய உலகின் சில நாடுகள் ஊழல் எனப்படும் கரியநிற பனி உருண்டை உருண்டோடிச் செல்வதனைத் தடுப்பதற்காக மட்டுமன்றி அதனை வெற்றிகரமாக கரையச்செய்து ஊழல் என்பது தடுக்கக்கூடிய ஒரு நிகழ்வு என்பதனை செயலின்மூலம் நிரூபித்துக்காட்டுவதற்கும் தற்போது சாதுரியம் பெற்றுள்ளன.

பொது வாழ்வின்மீது அழிவுகரமான வகையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்ற ஊழலைத் தடுப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டுள்ள பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த ஊழல் எதிர்ப்பாளர்கள் கடந்த காலகட்டம் முழுவதுமாக ஊழல் எனும் பேரழிவினை மட்டுப்படுத்துவதற்குத் தேவையான நிறுவன மற்றும் சட்டம்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுதற்காகவே அதிக முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆயினும் நவீன உலகில் ஊழலைத் தடுப்பதில் வெற்றியடைந்துள்ள நாடுகள் தமது வெற்றிக்கான உதாரணங்களின் மூலம் ஊழலைத் தடுப்பதன் பொருட்டு நிறுவன மற்றும் சட்டஞ்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுவது மட்டும் வெற்றிகரமான தீர்வாக அமையமாட்டாது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றன. ஊழலை வெற்றிகொள்வதற்குத் தேவையான நிறுவன மற்றும் சட்டஞ்சார் கட்டமைப்புகளை வலுவூட்டுவதற்குச் சமாந்தரமாக பொதுமக்களை ஊழல் தொடர்பான விழிப்புடன்கூடிய, கூருணர்வுமிக்க மற்றும் செயல்திறமுடைய ஒரு குழுவினராக மாற்றியமைப்பதனை இலக்காகக்கொண்ட கல்விசார் செயன்முறையொன்று இருப்பதன் தேவையானது தற்போது உலகம் முழுவதிலும் ஊழல் எதிர்ப்பு போராட்டங்களின் ஒரு முதன்மை விடயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

“இலங்கையை உலகின் தலைசிறந்ததொரு தேசமாக மாற்றியமைப்பதன் பொருட்டு நேர்மையான உள்ளம்கொண்ட அபிமானத்துடன்கூடிய இலங்கைச் சந்ததியொன்றை உருவாக்குதல்” என்பதனை மூல முன்மாதிரியான அபிலாஷை

யாகவும் நோக்காகவும் கொண்டு வகுக்கப்பட்டுள்ள இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்படுகின்ற வேளையிலும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் பொருட்டு பெருந்திரளான மக்களை பங்கேற்கச் செய்வதன் மீது முதன்மைக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஐந்தாண்டு காலப்பகுதியில் (2019-2023) நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்படி செயற்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது உபாயமார்க்கமாக அமைந்திருப்பது விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு என்பதாகும். திட்டத்தின் ஏனைய உபாயமார்க்கங்களாக தடுப்பு நடவடிக்கைகள், சட்ட அமுலாக்கல் நிறுவனங்களின் நிறுவன வலுப்படுத்தல், சட்ட மற்றும் கொள்கைத் திருத்தங்கள் என்பன இனங்காணப்பட்டுள்ளன.

விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாய ஈடுபாடு என்பதன்கீழ் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் நேர்மைத்திறன்மிகு கல்வி வழங்கப்படுதல், பொதுத் துறையின் விழிப்புணர்வை மேம்படுத்துதல், வகைபொறுப்புத் தொடர்பில் மக்களின் கிராக்கியை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறுபட்ட பல செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 400 உத்தியோகத்தர்களை இலஞ்சம் - ஊழல் விடயம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவித்து அவர்களினூடாக அரச சேவையிலுள்ள 25% வீதத்துக்கும் மேற்பட்ட குழுவினரை ஊழல் எதிர்ப்புத் தொடர்பில் விழிப்புணர்வுடன்கூடிய குழுவினராக மாற்றியமைத்துக்கொள்வதற்கான இலக்கும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் உபாயமார்க்கங்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற ஒரு முதன்மை அம்சமாகும். மேற்படி இலக்கினை அடையும் நோக்கத்துடன் அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள இந்த **நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேடானது இலங்கையிலிருந்து** இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்கான பணியின் நிமித்தம் பேருதவியாக அமையுமென நம்புகின்றோம்.

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி அனுசரணை மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்பவற்றைப் பெற்றுத்தந்து எமக்கு ஒத்தாசை நல்கும் சர்வதேச அவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிறுவனத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கையின் சனநாயக ஆட்சி மற்றும் வகைப் பொறுப்பு என்பவற்றை வலுவூட்டுவதற்கான (SDGAP) கருத்திட்டத்திற்கும், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் வழிகாட்டலின் கீழ் இந்நூலினைத் தயாரித்த SDGAP நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் ஆலோசகராகிய சட்டத்தரணி ஜகத் லியன ஆராய்ச்சி அவர்களுக்கும், குறிப்பிட்ட பணியின் நிமித்தம் பங்களிப்பு நல்கிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகும்.

# நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களுக்கான வளக் கையேடு

**வரிசைப்படுத்தல்** **பக்க எண்**


நேர்மைத்திறன்மிகு தேசமொன்றை நோக்கி 07

## முதலாம் அத்தியாயம் - ஊழலை இனங்காணுதல்

நுழைவாயில் 11

நேர்மைத்திறன் 17

அரச சேவையின் நேர்மைத்திறன் 25

அரச துறையின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான கருவிகள் 31

ஊழல் என்றால் என்ன? 35

ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் 43

ஊழலுக்கான காரணங்கள் 49

ஊழலின் விளைவுகள் 53

## இரண்டாம் அத்தியாயம் - ஊழலுக்கு எதிரான சர்வதேசம்

ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு 59

ஊழலைத் தோற்கடித்த - ஹொங்காங் தேசம் 69

## மூன்றாம் அத்தியாயம் - ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு

ஊழலை இல்லாதொழிக்கும் சட்டங்கள் 73

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 87

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்குள் வருகின்ற குற்றங்கள 93

## நான்காம் அத்தியாயம் - ஊழலை இல்லாதொழிக்கும் இலங்கையின் திட்டங்கள்

தேசிய செயற்பாட்டுத் திட்டம் - அறிமுகம் 103

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் பற்றிய சனாதிபதியின் செயலாளரது சுற்றறிக்கை 113

தேசிய நேர்மைத்திறன் திட்டம் 121

**ஐந்தாம் அத்தியாயம் - உங்கள் அறிவின் பொருட்டு மேலதிகமாக**

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக நிதமும் கேட்கப்படுகின்ற கேள்விகள் 123
பயிற்றுவிப்பாளர்களின் கற்றாராய்தலுக்கான வளப் பட்டியல் 127

# நேர்மைத்திறன்மிகு தேசமொன்றை நோக்கி

தூய்மையான அரச சேவை மற்றும் சௌபாக்கியமிகு தேசம் என்பவற்றின் பொருட்டு அரச சேவையின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகவுமான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத் தொடர்.

1. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசியக் கொள்கையொன்று எம்மிடமிருக்கவில்லை. அதனை ஏற்படுத்திக்கொள்வதற்காக நாடு தழுவிய ரீதியில் பயணித்து சகல தரப்பினரிடமும் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு தயாரிக்கப்பட்ட இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 பெப்ருவரி 05 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. குறித்த செயற்பாட்டுத் திட்டமானது 05 வருட காலப்பகுதியில் அதாவது 2019 - 2023 காலப்பகுதியில் நமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அது சகல அரச நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென சனாதிபதியின் செயலாளரது PS/ACD/01/2019 ஆம் இலக்கமும் 2019.07.04 ஆம் திகதியுமுடைய சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட செயற்பாட்டுத் திட்டத்தில் எமது நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக 04 பிரதான உபாயமார்க்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன,

    i. இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு முறையியல் அறிமுகம் செய்யப்படுதல்
    ii. சாதகமான (நேர்மறையான) மனோபாவ விருத்தி
    iii. புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களை வலுவூட்டல்
    iv. சட்டங்கள் மற்றும் கொள்கைகள் திருத்தமும் அறிமுகமும்

மேற்படி உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பானது ஒரு நிறுவனத்திற்கோ அல்லது ஒரு நபருக்கோ மட்டுப்படுத்தப்பட்ட பணியல்ல. இந்த நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக கூட்டுணர்வுடன் ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவது எதிர்வரும் 05 ஆண்டு காலப்பகுதியில் எமது இலக்காக அமைதல் வேண்டும். இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதானது ஒரு நிறுவனத்தின் அல்லது குழுவினரின் முயற்சியின் மூலம் மட்டும் மேற்கொள்ள முடியாது என்பதோடு எமது நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும்

ஊழலை இல்லாதொழிப்பதற்காக சகல தரப்பினரதும் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி இன்றியமையாததாகும்.

2. தற்கால பத்துவகை அரச கொள்கையினுள் காணப்படுகின்ற ஒரு பிரதான கொள்கை தூய்மையான அரச சேவையின் மூலம் சௌபாக்கியமிகு தேசமொன்றை உருவாக்குதல் என்பதாகும். தூய்மையான அரச சேவையை அடைந்துகொள்வதற்காக அரச நிறுவனங்கள் பூராகவும் அரச உத்தியோகத்தர்களைச் சூழ்ந்தும் வியாபித்துக் காணப்படுகின்ற இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழித்து, சரியான முறையியல்களைப் பின்பற்றி மக்களுக்கு இலகுவானதும் நம்பகரமானதுமான அரச சேவைக்கான வாய்ப்பினை வழங்க வேண்டும். இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபாயமார்க்கங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மேற்படி நோக்கங்களை இலகுவாக அடைந்துகொள்ள முடியும்.

3. தேசிய செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாகவும் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் எமது நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களும் அறிவூட்டப்பட்டிருப்பது இன்றியமையாததாகும். அதேவேளை தற்போது எம் அனைவரிடமிருந்தும் விலகிச் சென்றுள்ள நேர்மறையான மனோபாவங்களையும் விழுமியங்களையும் மீண்டும் எம்முள் வளர்த்துக்கொண்டு அரச பொறிமுறையில் காணப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களையும் நேர்மறையான மனோபாவங்களினால் நிறைந்துள்ளவர்களாக மாற்றியமைத்தல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி விடயங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்காக பல பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன. குறிப்பாக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் உபாயமார்க்கங்களாக அமைந்துள்ள தடுப்பு முறையியல்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் விழுமியம்சார் மனோபாவங்களை மேம்படுத்துதல் ஆகிய உபாயமார்க்கங்களின் கீழ் பொதுத்துறையின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் உதவியோடு ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 02 பிரதான நோக்கங்கள் காணப்படுகின்றன.

i. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 - 2023 நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பாக அரச நிறுவனங்களையும் நிறுவனத் தலைவர்களையும் முதலாகக் கொண்ட அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல்.
ii. அரச உத்தியோகத்தர்களின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களுக்குள் நல்லொழுக்கங்களையும் நேர்மறையான மனோபாவங்களையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன்

இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புப் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக அது தொடர்பான அறிவுடன்கூடிய பயிற்சிபெற்ற உத்தியோகத்தர் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

4. அதன் பிரகாரம், அமைச்சுக்கள், மாகாண, மாவட்ட மற்றும் ஏனைய அரச நிறுவன மட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற 400 அரச உத்தியோகத்தர்களுக்கு மூன்றுநாள் வதிவிட பயிற்சியொன்றைப் பெற்றுக்கொடுத்து பயிற்றுவிப்பாளரர்களாக பயிற்றுவிப்பதற்கும் பின்னர் அந்த பயிற்றுவிப்பாளர்களின் மூலம் ஒரு பயிற்றுவிப்பாளர் தலா 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் வகையில் 8000 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 400,000 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஊழல் எதிர்ப்புப் பற்றிய அறிவு மற்றும் பயிற்சி வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

5. குறிப்பட்ட பயிற்றுவிப்பாளர்களின் பின்புல அறிவினை மேம்படுத்துவதற்காக மூன்றுநாள் பயிற்சிச் செயலமர்வுக்கு மேலதிகமாக வேறு உபாயமார்க்கங்களும் பயன்படுத்தப்படும். அவற்றுள் ஒரு உபாயமார்க்கமாக இந்த வளநூல் அமைகின்றது. இந்த வளநூல் இலஞ்சம் மற்றும் ஊழல் சம்பந்தமான எளிமையான பல கட்டுரைகளைக்கொண்டமைந்துள்ளதோடு பயிற்றுவிப்பாளரால் கற்றாராயப்படவேண்டிய பல சட்டங்களினதும் ஆவணங்களினதும் பட்டியலொன்றும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு மேலதிகமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 05 வெளியீடுகளும் பயிற்றுவிப்பாளர்களுக்கு வழங்கப்படும். அதன்மூலம் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான படிமுறைகள் தொடர்பான புரிதலை பயிற்றுவிப்பாளர் பெற்றுக்கொள்ளமுடியும்.

இவற்றுக்கு மேலதிகமாக பயிற்றுவிப்பாளர்களுக்காக சட்டங்கள் பற்றிய ஆவணமும் வீடியோ காட்சிகளையும் கொண்டுள்ள ஒரு பென்டிரைவ் வழங்கப்படும்.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் இவை அனைத்தையும் சிறந்த முறையில் கற்றாராய வேண்டியது இன்றியமையாத ஒரு விடயமாகும்.

# முதலாம் அத்தியாயம்
## ஊழலை இனங்காணுதல்

### 1 – நுழைவாயில்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 3 ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருப்பதனால் மக்களின் இறைமை அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள சட்டவாக்கத் துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய சகல நிறுவனங்களையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் உத்தியோகத்தர்களும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கும் வகைபொறுப்புக் கூறுவதற்கும் கட்டுப்பட்டுள்ளனர்.

ஆயினும், இன்று பொதுமக்கள் மேற்படி நிறுவனங்களையும் உத்தியோகத்தர்களையும் நம்பிக்கையீனத்துடனும் சந்தேகத்துடனுமேயே பார்ப்பதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். அதற்கான காரணங்களாக, மக்கள் அவர்களிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பானது மக்களுக்காக உரியமுறையில் நிறைவேற்றப்படாமை, நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு மட்டுமன்றி நேர்மைத்திறன் போன்ற பண்புகள் நிறுவன மட்டத்திலும் தனிநபர் மட்டத்திலும் பிரதிபலிக்கப்படாமை, இலஞ்சம் மற்றும் ஊழலினால் நிறுவனங்களும் உத்தியோகத்தர்களும் சூழப்பட்டுள்ளமை என்பன அமைந்துள்ளன. மறுபுறத்தில் தான் யார் என்பதையும் மக்கள் யாவர் என்பதையும் மேற்படி நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மறந்துள்ளனர். மக்களே எமது எஜமான் என்பதையும் நாம் மக்களின் சேவகன் என்பதையும் மறந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெறுவதற்கான பிரதான காரணங்களாக எம்முள் காணப்பட்ட விழுமியங்கள் எம்மை விட்டு விலகிச் சென்றிருப்பதும், நிதமும் பணத்தின் பின்னால் ஓடித் திரிவதும் அமைந்துள்ளன. வரலாற்றுப் பெருமை தொடர்பாக இன்று மார்தட்டிக்கொள்ளும் நாம் மேற்படி விழுமியங்கள் எம்மைவிட்டு எப்போது நழுவிச் சென்றன? அதனால் நாம் எவற்றை இழந்துள்ளோம்? என்பவை தொடர்பாக் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பதற்கான காலம் கனிந்துள்ளது. ஒட்டு மொத்த உலகத்தில் மட்டுமன்றி எமது நாட்டு மக்களும் அவர்களது

கடப்பாடுளையும் பொறுப்புகளையும் மறந்துள்ளதாகத் தெரிகின்றது. ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் நம்நாட்டு மக்களுக்கு அது மிகவும் ஏற்புடையதாக அமைகின்றது. அக்காலத்தில் நாம் மனிதர்களை மட்டுமன்றி தாவரங்கள், விலங்குகள், நீர், நிலம் ஆகிய அனைத்தையும் பாதுகாத்துக் கொண்டதும் அவை அனைத்துக்கும் மரியாதை செய்ததும் அவை அனைத்துடனும் நாம் இதயபூர்வமாக பின்னிப் பிணைந்திருந்ததனாலாகும். அன்று எமது நிலத்தில் ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் பூமாதேவியை வணங்கி அனுமதி பெற்றதன் பின்னரே அதில் ஈடுபட்டோம். உலகத்தின் இருப்பானது கதிரவனின் கதிர்களிலும் தாயின் தாய்ப்பாலிலும் தங்கியுள்ளது என்பதனை உண்மையாகவே புரிந்து கொண்டிருந்த பழங்கால மக்கள் கதிரவனை வணங்கியே தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். எம்மைப் போலவே வாழ்வதற்கான உரிமையை விலங்கினங்களும் கொண்டுள்ளன என்பதனை எமது மூதாதையர்கள் புரிந்துகொண்டிருந்தமையினாலேய வயலின் ஒரு வரவையை (வரம்புகளால் பிரிக்கப்பட்டுள்ள ஒரு பகுதி) பறவைகளுக்காக ஒதுக்கியிருந்தனர். எமது அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நீர்த்துளியை எமக்குப் பெற்றுத்தருகின்ற வாவியையும், குளத்தையும், சிற்றோடையையும், கிணற்றையும் வணங்கி அனுமதி பெற்ற பின்னரே அவற்றைப் பயன்படுத்தினோம். இயற்கையின் மூலம் எமக்குக் கிடைத்துள்ள அனைத்துக் கொடைகளைப் போன்றே மனிதத் தொடர்புகள் தொடர்பாகவும் எமது மூதாதையர்கள் பிறநலத்துடனேயே சிந்தித்தனர். மற்றவர் மீதான ஒத்துணர்வு அனைவருக்குள்ளும் காணப்பட்டது. தம்மைப்போலவே ஏனையோருக்கும் இந்த பூமியில், இந்த தேசத்தில் ஒற்றுமையாக வாழ்வதற்கான உரிமை உள்ளது என்பதனை அவர்கள் செவ்வனே புரிந்துகொண்டிருந்தனர்.

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் எனும் பண்பினையும் பிறர் தொடர்பில் உருகும் இதயத்தையும் கொண்டிருந்த நாம் ஏனையோரின் வேலைகளில் பிரதியுபகாரம் எதிர்பாராமலேயே பங்கேற்று உதவியளித்தோம். ஒவ்வொருவரின் வேலைகளுக்காக சுயமாக முன்வந்து ஒத்துழைப்புடன் பணியாற்றிய ஒரு வரலாற்றினை நாம் கொண்டுள்ளோம். கைப்பணி முறையானது அதற்குச் சிறந்த உதாரணமாகும்.

மிஹிந்து மகா தேரர் தேவநம்பியதீசன் மன்னனுக்கு ஒரு நாட்டின் ஆட்சியாளர் அந்நாட்டின் உரிமையாளர் அல்ல மாறாக அதன் பொறுப்பாளர் மட்டுமே ஆவார் எனத் தெளிவுபடுத்தினார். ஒரு வாவியில் ஒன்று சேர்கின்ற நீரை பல வாய்க்கால்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் இலட்சக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களுக்கு ஒரே தடவையில் பகிர்ந்தளிப்பதற்கான முறைகளின் உருவாக்கமானது இந்நாட்டு வளங்களுக்கான உரிமை ஒரு நபருக்கு மட்டுமல்லாது ஒட்டு மொத்த சமூகத்திற்கும் நியாயமாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்பதனை திரும்பத் திரும்ப நினைவு கூறுகின்றது. அதேவேளை அதே வாவியின் மேல்ப் பகுதியில் நீர் அருந்திய யானைகளும்

மான்களும் இந்த அனைத்து வளங்களுக்குமான உரிமை மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்கினங்களுக்கும் உள்ளதென்பதை எமக்கு நினைவுபடுத்தின.

## நேர்மைத்திறன்

மேற்படி அனைத்து விழுமியங்களையும் நாம் மறந்திருப்பதனாலேயே அவற்றை இன்று திரும்பத் திரும்ப நினைவுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல சில சமயங்களில் இந்த விழுமியங்களை வேறொரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி ஏற்படுமோ என சிந்திக்கும் அளவிற்கு குறிப்பிட்ட விழுமியங்கள் எம்மைவிட்டு தூர விலகியுள்ளன. நேர்மைத்திறன் உச்ச மட்டத்தில் காணப்பட்ட எமது நாட்டில் இன்று நேர்மைத்திறன் விலகிச் சென்றுள்ளது. விழுமியங்கள் அற்றவர்கள் என மேற்குலக நாடுகளைக் குறைகூறிய நாம் இன்று அவர்களிடமிருந்து நேர்மைத்திறனை இறக்குமதி செய்யவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நம்பிக்கை, பொறுப்பு, ஒத்துணர்வு, சட்டத்தை மதித்தல், ஒழுக்கம், நேர்மை, கொள்கை தவறாமை ஆகிய பண்புகளைக் கொண்டமைந்த நேர்மைத்திறன் (Integrity) இன்று எமக்குள் காணப்படவில்லை.

சில நாடுகளில் வீதியோரத்தில் அமைந்துள்ள பத்திரிகைக் கடையொன்றின் முதலாளி கடையில் இல்லாத தருணத்தில்கூட பத்திரிகையின் பெறுமதியை கல்லாப்பெட்டியில் போட்டுவிட்டு பத்திரிகை இராக்கையிலிருந்து பத்திரிகைகளைக் கொண்டு செல்கின்றவர்களை அந்த நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள ஒருவருக்கு நினைவுக்கு வரமுடியும். உதாரணமாக மேலும் சில நாடுகளில் பொது ஓய்வறைகளில் மறந்து விட்டுச்செல்லும் தங்க நகைகள் பல நாட்கள் கடந்த நிலையிலும் ஒருவரும் எடுத்துச் செல்லாமல் அதே இடத்தில் அப்படியே இருப்பதனைக் காணக்கூடிய அனுபவங்களும் இல்லாமலில்லை.

ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதோ அவ்வாறில்லாதபோதோ தவறுகளை புரியாதிருப்பதற்கு அந்நாட்டு மக்கள் முயற்சிப்பதைக் காணமுடியும். சிறந்த நடைமுறை ஒழுங்கில் அவர்கள் அடியெடுத்து வைத்துள்ளனர். அதுவே நேர்மைத்திறனின் ஆரம்பமாகும்.

## சட்டத்தைப் பின்பற்றுவது சட்டத்திற்குள்ள பயத்தினால் மட்டுமா?

எமது நாட்டு அனுபவமும் இதுதானா என்பதை நாம் எம்மிடமே வினவ வேண்டிய காலம் பிறந்துள்ளது. இன்று நாம் சட்டத்திற்கு மதிப்பளிப்பது அல்லது சட்டத்திற்கு தலைவணங்குவது சட்டத்தை மதிக்கின்ற பிரஜைகள் என்ற வகையில் சட்டத்தை பின்பற்ற வேண்டுமென கருதுவதன் காரணமாகவா, அல்லது தண்டனைக்குள்ள அச்சத்தின் காரணமாக சட்டத்தை பின்பற்றுகின்றோமா என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். சட்டத்தை மதிக்கும் பிரஜைகள் என்ற வகையில் சட்டத்தை பின்பற்ற வேண்டுமென நாம் கருதுவதனால் சட்டத்தை ஏற்றுக்கொள்வோமாயின் சட்டம் மீறப்பட்டுள்ளதா

என்பதைக் கண்டறிவதற்கோ அல்லது சட்டத்தை மீறியவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கோ உத்தியோகத்தர்களும் நிறுவனங்களும் நீதிமன்றங்களும் தேவைப்பட மாட்டா. இருப்பினும் சட்டத்திற்குள்ள பயத்தினால் சட்டத்தை பின்பற்றுவதற்கு முயற்சிக்கின்றவர்கள் உள்ள நாடுகளில் நிதமும் சட்டம் மீறப்படுகின்றதா என்பதை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருப்பதற்கும், அவ்வாறு மீறுகின்றவர்களுக்கு தண்டனையளிப்பதற்கும் உத்தியோகத்தர்களும் நிறுவனங்களும் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

## சிவப்புச் சமிக்ஞை

உதாரணமாக, யாருமில்லாத வீதியில் இரவு நேரத்தில் பயணிக்கும் ஒரு சாரதி சிவப்புச் சமிக்ஞை வீதி விளக்கு எரியும்போது அந்த இடத்தினைக் கடந்து செல்வதற்கு பச்சை நிற சமிக்ஞை கிடைக்கும் வரையும் பார்த்திருப்பாரா அல்லது பொலிஸ் உத்தியோகத்தரோ, வேறொருவரோ அங்கு இல்லை என்பதால் சிவப்பு சமிக்ஞை விளக்கு எரியும்போதே அந்த இடத்தைக் கடந்து செல்வாரா என்பது குறிப்பிட்ட நபர் சட்டத்தை மதிக்கின்ற ஒருவரா அல்லது தண்டனைக்குள்ள பயத்தினால் சட்டத்தை மீறாமல் இருப்பதற்கு முயற்சிக்கின்ற ஒருவரா என்ற விடயத்திலேயே தங்கியுள்ளது. நாம் இதன் காரணமாவே நேர்மைத்திறன் தொடர்பாக பேச வேண்டியுள்ளது. நேர்மைத்திறன்மிக்க ஒருவர் சட்டத்தை மதிக்கின்றவராகவும், ஒழுக்கசீலராகவும், பொறுப்புடன்கூடியவராகவும், ஏனையோரின் நம்பிக்கையைப் பாதுகாப்பதும் நாட்டை நேசிக்கின்றவராகச் செயற்படுவதும் சட்டத்திற்குள்ள பயத்தினாலல்ல மாறாக அவர் யாரும் பார்த்திருக்காத வேளைகளிலும் சரியான விடயங்களைச் செய்வதற்குத் தூண்டப்படுவதே அதற்கான காரணமாகும்.

## மனச்சாட்சி

நேர்மைத்திறன் ஆனது தன்னகத்தே கொண்டுள்ள பெறுமதிக்கு அளவே கிடையாது என்பதால் இன்று நாம் அது தொடர்பாக பேச வேண்டியுள்ளது. கடந்தகால விழுமியங்களையும் பெறுமதிகளையும் மீண்டும் கொண்டுவருவதற்கான தேவை ஏற்படுவதற்கான காரணமும் அதுவேயாகும். தனக்குச் சொந்தமில்லாத, மற்றவரிடமிருந்து அன்பளிப்பொன்றைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதற்காக அவாநிறைவு எதிர்பார்ப்பதற்கான காரணம் ஏனையோர் தொடர்பில் உருகும் இதயமும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு மற்றும் நம்பிக்கை என்பன பற்றிய புரிதலும் இன்மையாகும். இதன் காரணமாகவே எதுவித அருவருப்புமின்றி ஒட்டுமொத்த நாட்டுக்கும் சமூகத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் சொந்தமான வளங்களை ஒரு குழுவினர் மட்டும் அனுபவித்தும் பயன்படுத்தியும் வருகின்றனர். பொதுச் சொத்துக்களின் உரிமையானது ஒட்டுமொத்த சமூகத்திற்கே உள்ளது என்பதையும், எதிர்கால சந்ததியினரின் வளங்களை கடனாகப் பெற்றுக்கொண்டே நாம் இன்று அவற்றை அனுபவித்து வருகின்றோம் என்பதையும் இன்றளவில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம்

வரையிலான அரச உத்தியோகத்தர்கள் மறந்துள்ளனர். பிரஜைகள் நாட்டின் வளங்களை தாமே பாதுகாக்க வேண்டும் என்பதையும் அவை அனைத்தினதும் உரிமை அனைவருக்கும் உள்ளது என்பதையும் மறந்துள்ளனர். அனைவரும் தனித்தனியாக தம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்து சுயநலத்துடன் அனைத்தையும் தமக்காகவே சேகரித்து வருகின்றனர். அயல் வீட்டாரைவிட முன்னேறவும், அயல் வீட்டுப் பிள்ளை செல்லும் பாடசாலையைவிட உயர் தரத்திலான பாடசாலைக்குத் தனது பிள்ளையை அனுப்பவும், அவர்கள் கொள்வனவு செய்யும் காரைவிடப் பெறுமதியான காரொன்றைக் கொள்வனவு செய்யவும் முயற்சிக்கின்றார்களேயொழிய நல்லொழுக்க விழுமியங்களின் பெறுமதியை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. எனவே நல்லொழுக்க விழுமியங்களை மேல் நிலையிலிருந்து கீழ் நிலை வரையும் சமூகத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு பதவியிலும் ஒவ்வொரு நபருக்குள்ளும் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

> "இந்த மரத்திலே அதிகமான இனிப்புத் தோடம்பழங்கள் உள்ளன. காய்கள் முற்றிக் கனிந்து கிளைகள் தரையை நோக்கி வளைந்துள்ளன. தங்கைக்கும் எனக்கும் இரண்டு கனிகள் போதுமானது. அதிகம் காய்களைப் பறிக்கும் தீய பிள்ளைகள் அல்ல நாம்."

சிறிய காலத்தில் கற்றுக்கொண்ட மேற்படி பாடலை மீண்டும் நினைவுகூர்ந்து அதனைப் புரிந்து கொள்ள வேண்டிய காலம் பிறந்துள்ளது. இலங்கையர்களாகிய நாம் அனைவரும் அதன் பொருளை புரிந்துகொள்ளும் தினத்திலேயே எதிர்கால சந்ததியினரின் வளங்களை அழிக்காமல் அவர்களுக்காக அவற்றைச் சேமித்து செயற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் நிலைபேறான தன்மை எமக்குக் கிடைக்கும்

# 2. நேர்மைத்திறன்

## மேற்கத்திய பொருள் கோடல்

"நேர்மைத்திறன்" என்பது ஆங்கில மொழிச் சொல்லாகிய Integrity என்பதற்கான பொருள்கோடலை வழங்குவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சொல்லாகும். நேர்மைத்திறன் என்பதன் சொல்லர்த்தத்தினை மேற்கொண்டும் விளக்கும்போது "சிறந்த ஒழுங்கமைவுடன்கூடிய" எனும் பொருள் அதில் உள்ளடங்கியிருப்பதனைக் காணமுடியும். Oxford அகராதி Integrity எனும் பதத்தினை "the quality of being honest and having strong moral principles" (நேர்மைப் பண்பினையும் வலுவான நெறிமுறைகளையும் கொண்டிருத்தல்) என பொருள்கோடல் செய்கின்றது. சென்னைப் பல்கலைக்கழக அகராதி Integrity எனும் பதத்திற்கு தமிழ்ப் பொருள் வழங்கும்போது முழுமை, கூறுபடாநிலை, நேர்மை, வாய்மை, நாணயம், ஒழுங்கு போன்ற சில பதங்களைப் பயன்படுத்தியுள்ளன.


நேர்மைத்திறன் என்றால் என்ன என்பது தொடர்பாக துல்லியமானதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஒரு பொருள்கோடல் இதுவரை முன்வைக்கப்படவில்லையென்ற போதிலும் அது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பலவிதமான பொருள் கோடல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களின் ஊடாக அதன் மூலம் புலப்படுகின்ற பொருளைப் புரிந்துகொள்வது கடினமல்ல.

- நேர்மைத்திறன் என்பது தனக்கு உண்மையாகவிருப்பதாகும். நேர்மை என்பது மற்றவர்களுக்கு உண்மையைக் கூறுவதாகும். (Integrity is telling myself the truth. And honesty ai telling the truth to other people) - **அமெரிக்க எழுத்தாளர் ஸ்பென்சர் ஜோன்சன்.**

- நேர்மைத்திறன் என்பது எது வசதியானது, எது சரியானது என்பவற்றுக்கிடையிலான தேர்வாகும். (Integrity - the choice between what's convenient and what's right) - **டோனி டன்ஜி.**

- நேர்மைத்திறன் என்பது பிறர் உங்களைப் பார்த்துக்கொண்டிராத வேளையிலும் சரியானதைச் செய்வதாகும். (Integrity is doing the right thing, even when no one is watching) - **ஆங்கிலேய எழுத்தாளர் சீ.எஸ்.லுவீஸ்.**

மேற்படி பொருள்கோடல்களும் தெளிவுபடுத்தல்களும் பொருள்படுத்தும் பொருளின் பிரகாரம் நேர்மைத்திறன் என்பதனை நேர்மை, நல்லொழுக்கம், ஒழுக்கநெறி, நற்பண்புகளின் மீது செயற்படுதல், ஒப்பந்தங்களின்றி நெறிமுறைக் கோட்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் அமைவாக செயற்படுதல் போன்ற பெறுமதிகள் (Values) மற்றும் செயற்பாடுகள் (Actions) என்பவற்றின் கலப்பின நிலைமையாக கருதுவது மிகவும் நியாயமானதெனத் தெரிகின்றது.




நேர்மைத்திறன் - ஆளொருவரின் விழுமியங்களினதும் செயற்பாடுகளிதும் கலப்பாகும். - ஆங்கிலேய எழுத்தாளர் சீ.எஸ்.லுவீஸ்.

நேர்மைத்திறனுடன்கூடிய ஒருவர் சமூகத்தின் முன்னால் பிறருக்கு உண்மையானவராகவிருத்தல் மட்டுமன்றி தமது மனச்சாட்சியின் பிரகாரம் தமக்கும் உண்மையானவராக இருத்தல் வேண்டும்.

நேர்மைத்திறன் என்பதுடன் இணைந்துள்ள விழுமியங்களாக பின்வரும் பண்புகளை இனங்காண முடியும்.

- தார்மீகம் - RIGHTEOUS
- மாண்பு - HONORABLE
- உண்மை - TRUTHFUL
- குற்றமின்மை - BLAMELESS
- வசீகரம் - GRACEFUL
- நிமிர் நேர்வான தன்மை - UPRIGHT
- ஒழுக்காறு - DISCIPLINED
- விசுவாசம் - FAITHFUL
- பரிசுத்தம்.˙.தூய்மை - HOLY

நேர்மைத்திறன் எனப்படுவது நேர்மையாகச் செயற்படுதல் மற்றும் நல்லொழுக்கக் கோட்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் அமைவாக சமரசமின்றி வலுவான விழுமியங்களைப் பின்பற்றுதல் ஆகும். நேர்மைத்திறன் என்பது ஒருவரது செயற்பாடுகளின் நேர்மைத்தன்மை மற்றும் உண்மையான தன்மை அல்லது திட்பநுட்பம் என ஒழுக்க நெறிகளில் கருதப்படுகின்றது. நேர்மைத்திறனானது வஞ்சனைக்கு எதிராக எழக்கூடும். நேர்மைத்திறன் ஆனது நியமங்களுடன் தீர்மானங்களை மேற்கொள்வதனை உள்ளக இசைவாக்கப் பண்பாகக் கருதுவதுடன் தமக்குள்ளேயே மோதல் நிலைமையுடனான ஒழுக்க நெறிகளைக் கொண்டுள்ள தரப்புகள் முரண்பாட்டுக்கு காரணமாக அமையுமென அல்லது அவர்களின் நம்பிக்கைகள் மாற்றமடைய வேண்டுமென முன்மொழிகின்றது. நேர்மைத்திறன் எனும் சொல்லானது முழுமை அல்லது முழுமை எனும்

அர்த்தத்தினைப் பெற்றுத்தருகின்ற இலத்தீன் மொழியிலிருந்து பரிணாமம் பெற்ற ஒரு சொல்லாகும். இந்த சூழமைவில் நேர்மைத்திறன் எனப்படுவது நேர்மை மற்றும் நடத்தை நாணயம் போன்ற பண்புகளைக் கொண்டமைந்த உள்ளக உணர்வாகும். எனவே ஏனையோர் தம்மிடம் உள்ளதென கூறிக்கொள்ளும் விழுமியங்கள், நம்பிக்கைகள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் அவர்கள் செயற்படும் வரை “நேர்மைத்திறன்” காணப்படுமென ஒருவர் தீர்மானிக்க முடியும்.

## நேர்மைத்திறனின் பிரதான அம்சங்கள்

நேர்மைத்திறனில் 06 பிரதான அம்சங்கள் காணப்படுவதாக உலகம் பூராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அப்பிரதான அம்சங்களையும் அவற்றின் பண்புகளையும் பின்வரும் வகையில் விபரிக்க முடியும்.

| நேர்மைத்திறனின் அம்சங்கள் | பண்புகள் |
|---|---|
| நம்பகத்தன்மை<br>TRUSTWORTHINESS | ▪ நேர்மை, ஒழுக்கமுடைமை<br>▪ மோசடியும் களவும் இன்மை<br>▪ நம்பிக்கையுடையவராக இருத்தல்<br>▪ சரியானவற்றை மேற்கொள்வதற்கான தைரியம் மற்றும் விருப்பம்<br>▪ நல்லிருப்பு காணப்படுதல் மற்றும் கிடைப்பதன் மூலம் திருப்தியடைதல் |
| நன்மதிப்பு<br>RESPECT | ▪ ஏனையோருக்கு மதிப்பளித்தல்.<br>▪ மாற்றங்களின்போது பொறுமைகாத்தல்.<br>▪ பணிவன்பு மற்றும் சரியான சொற்பிரியோகம்<br>▪ உடல் அல்லது உள ரீதியாக ஏனையோரைக் காயப்படுத்தாமை.<br>▪ ஏனையோரை ஏளனம் செய்யாமை.<br>▪ ஏனையோரைத் தாழ்த்தாமை மற்றும் நெகிழ்ச்சித்தன்மை.<br>▪ உடன்பாடுகள் ஏற்படாத தருணங்களில் கோபத்தைக் கட்டுப்படுத்தி சமாதானமாக நடந்துகொள்ளல். |
| பொறுப்பு<br>RESPONSIBILITY | ▪ செய்ய வேண்டியதனை மட்டும் செய்தல்.<br>▪ பின்வாங்காது முயற்சித்தல்.<br>▪ எல்லா நேரங்களிலும் நல்லதை மட்டுமே செய்தல்.<br>▪ சுய ஒழுக்கம்.<br>▪ நிதமும் சரியானவற்றை மட்டுமே மேற்கொள்வதற்கு முயற்சித்தல் மற்றும் தவறான செயற்பாடுகளின் விளைவுகள் தொடர்பாகச் சிந்தித்தல்.<br>▪ உங்கள் தெரிவுக்காக பொறுப்பு காணப்படுதல்.<br>▪ வகைப்பொறுப்புடன் செயற்படுபவராகவிருத்தல்.<br>▪ தம்மை மட்டுமன்றி தமது சூழலையும் சுத்தமாக வைத்திருத்தல். |

| | |
|---|---|
| | ▪ தாம் மேற்கொள்ளும் பணிகளுக்கான பொறுப்பினை தாமே ஏற்றுக்கொள்ளல்.<br>▪ செய்வதைக் கூறுகின்ற, கூறுவதைச் செய்கின்ற ஒருவராக இருத்தல்.<br>▪ கொள்கைப்பிடிப்பு. |
| நியாயம்/சமத்துவம்<br>FAIRNESS | ▪ சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல்<br>▪ நிதமும் வாய்ப்புக்களை ஏனையோருடன் சமமாகப் பகிர்ந்துகொள்ளல்.<br>▪ திறந்த உள்ளம் காணப்படுதல் மற்றும் ஏனையோருக்குச் செவிமடுத்தல்.<br>▪ அனைவரையும் சமமாகக் கவனித்தல்.<br>▪ விசேட தேவைகளைக் கொண்டவர்கள் மீது கவனம் செலுத்தப்படுதல். |
| கவனிப்பு<br>CARING | ▪ இரக்கச் சிந்தை<br>▪ ஒத்துணர்வு மற்றும் ஏனையோர் மீதான கவனம்<br>▪ நன்றியுடைமையை வெளிப்படுத்துதல்.<br>▪ மன்னிப்பளித்தல்.<br>▪ தேவைகளைக் கொண்டுள்ளோருக்கு உதவியளித்தல் |
| பிரஜாவுரிமை<br>CITIZENSHIP | ▪ நிறுவனத்திற்கும், அயல் சமூகத்திற்கும், நாட்டுக்கும் தேவையான பணிகளை தங்குதடையின்றி நிறைவேற்றுதல்.<br>▪ கடமைகளை நிறைவேற்றுகின்றவராக இருத்தல்.<br>▪ ஒத்துழைப்புடன் பணியாற்றக்கூடியமை.<br>▪ ஆரோக்கியமான அயலவராக/நண்பராக இருத்தல்.<br>▪ சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்.<br>▪ அதிகாரம், தலைமைத்துவம் என்பவற்றுக்கு மதிப்பளித்தல்.<br>▪ நாட்டையும் சமூகத்தையும் நேசிப்பவராக இருத்தல். |

## நேர்மைத்திறன் பற்றிய இலங்கையின் ஏற்றுக்கொள்ளல் -

நேர்மைத்திறன் எனும் சொற்பதம் சுப்பட்டிபன்ன எனும் பாலி மொழிச் சொல்லின் மூலம் உருவாகிய ஒரு பதமாகும். சுப்பட்டிபன்ன என்பது பிக்குமார்களுக்கானதொரு பண்பாகக் கருதப்படுகின்ற சிறந்த ஒழுங்குடன்கூடிய எனும் பொருளைப் பெற்றுத்தருகின்ற பாலி மொழிச் சொற்பதமாகும். அதன்மூலம் ஊழல் இன்மை கருதப்படுகின்றது. அதன் பிரகாரம் நேர்மைத்திறன் என்பது ஒரு நடத்தைப் பண்பாகும். நேர்மைதிறன்மிகு நபர் தவறு புரியாதிருப்பதற்கான காரணம் தவறான செயலுக்கு தண்டனை கிடைக்கும் என்ற அச்சத்தினால் அல்ல மாறாக தவறுகளை புரியாதிருப்பதற்கான நடத்தைப் பண்பாக அது அமைந்திருப்பதனாலாகும்.

அத்தகைய நடத்தைப் பண்புகளைக் கொண்ட இலங்கையர்கள் தொடர்பாக நாம் வரலாறுகளில் கண்டுள்ளோம். துட்டகைமுனு மன்னன் மகா ஸ்தூபத்தை அல்லது ருவன்வெலிசாய எனும் தாதுகோபுரத்தை நிர்மாணித்ததன் பின்னர் அதன்

நிர்மாணப் பணிகளுக்கு பங்களிப்பு நல்கிய பிரஜைகளுக்கு செலுத்தல்களை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்திய உபாயமார்க்கமாக அமைந்தது யாதெனில் நான்கு திசைகளிலும் அமைந்திருந்த நுழைவாயில்களுக்கருகில் 4 கடாரங்களை வைத்து கோபுரத்தை நிர்மாணித்தபோது தாம் அர்ப்பணித்த உழைப்புக்கான பணத்தை கடாரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு பிரச்சாரம் செய்தமையாகும். அதன்போது பிரஜைகள் வருகைதந்து உரிய முறையில் பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கோபுரத்தை அமைக்கும் பணியில் ஈடுபடாதவர்கள்கூட வருகைதந்து பணத்தைப் பெற்றுகொள்வதற்கான வாய்ப்பு இருந்தபோதிலும் அவ்வாறு அவர்கள் செய்யவில்லையெனவும் பதிவாகியுள்ளது.

## கடினமான சந்தர்ப்பங்களில்கூட நேர்மைத்திறன் பாதுகாக்கப்படுதல்





கடினமானதொரு சந்தர்ப்பத்தில்கூட சரியான விடயங்களை மேற்கொள்வதற்கான ஆற்றல் ஒருவரிடம் காணப்படுமானால் அது ஆரோக்கியமான பாதையில் பிரவேசிதுள்ள ஒருவரின் பண்பாகும். நேர்மைத்திறனை அடைந்து கொள்வதானது கடினமென அல்லது சிரமமென ஒருவர் உணரலாம். இருப்பினும் கடினமான சந்தர்ப்பங்களில்கூட நேர்மைத்திறனைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமானால் தனிப்பட்ட முழுமையை அடைந்து கொள்வதற்கான பாதையில் நாம் பிரவேசிப்பதோடு ஒவ்வொரு துறையிலும் நிலைபேறான இருப்பு ஏற்படுவதனைக் காணவும் முடியும். கடலிலும் தரையிலும் ஒரே விதமாக உயிர்வாழக்கூடிய கடல் ஆமை நீண்ட ஆயுட் காலத்தைக் கொண்டுள்ளது. அது பல கடினமான நிலைமைகளுக்கு மத்தியிலும் தனது வாழ்க்கையினைப் பேணிக்கொண்டு நீண்ட காலம் உயிர்வாழ்கின்றது. சுற்றாடலில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் சகித்துக்கொண்டு அவற்றுக்கு முகங்கொடுத்து தனது உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றது. நேர்மைத்திறன்கொண்ட நபரும் எத்தகைய கடினமான சூழ்நிலைகளிலும் நிலை நேரான மற்றும் அசையாத இருப்புடன் நற்பண்புகளை அழித்துக் கொள்ளாமல் பேணிப்பாதுகாப்பதற்கு முயற்சிக்கின்றார்.

ஒரு தடவை W.Clement Stone எனும் புத்திஜீவி இவ்வாறு கூறியுள்ளார்.

"Have the courage to say no.
Have the courage to face the truth.
Do the right thing because it is right.
These are the magic keys to living your life with integrity"

தவறான விடயங்களை எதிர்ப்பதற்கும் அவற்றுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்கும் நிதமும் உண்மையைப் பேசுவதற்கும் சரியானவற்றைச் செய்வதற்கும் முடியுமாயின் நாம் நேர்மைத்திறன்மிகு வாழ்க்கைக்குப் பிரவேசித்துள்ள நபர்களாக அமைவோம்.

புத்தபெருமான் ஒரு தடவை நாம் "தத்தாவாதீ யத்தாகாரீ" பண்பினைக்கொண்டவர்களாக இருக்க வேண்டுமென போதித்து அருளியுள்ளார். அதாவது, "கூறுவதைச் செய்கின்ற, செய்வதைக் கூறுகின்றவர்களாக" இருக்க வேண்டுமென்பது அதன் பொருளாகும். அதேவேளை, உண்மை ஆனது எப்போதுமே உண்மையாகும். பொய் ஆனது எப்போதுமே பொய்யாகும். யார் நம்பாத போதிலும் உண்மை நிதமும் உண்மையேயாகும்... பொய் நிதமும் பொய்யேயாகும்.




## நேர்மைத்திறனுடன் யார் இருக்க வேண்டும்

நேர்மைத்திறனுடன் யார் இருக்க வேண்டும் எனும் வினாவை நோக்கும்போது தனி நபர்கள் மட்டும் நேர்மைத்திறனுடன் இருப்பது போதுமானதல்ல.

1. தனிநபர் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.
2. சமூகம் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.
3. நிறுவனங்கள் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.
4. ஒரு நாடு நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.
5. உலகம் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

தனிப்பட்ட குழுக்கள் ஒன்றிணைந்து உருவாகியுள்ள சமூகமும், அதன்மூலம்

நிறுவனங்களும், ஒட்டுமொத்த தேசமும், தேசங்கள் இணைந்து உருவாகியுள்ள உலகமும் நேர்மைத்திறன்மிக்கவைகளாக இருத்தல் வேண்டும்.

குறிப்பாக, ஒரு தேசத்தின் நேர்மைத்திறன் தொடர்பாக கவனம் செலுத்தும்போது நாட்டில் காணப்படுகின்ற சகல படிநிலைகளும் நிறுவனங்களும் நேர்மைத்திறன்மிக்கதாக இருத்தல் வேண்டும்.

1. சட்டங்கள் இயற்றப்படும் இடம்
2. சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் இடம்
3. நீதி நிலைநிறுத்தப்படும் இடம்
4. அரச துறை
5. தனியார் துறை
6. மத, ஊடக மற்றும் சிவில் சமூகம் உட்பட்ட சகல துறைகளும்
7. பொதுமக்கள்
8. எதிர்கால சந்ததியினர் ஆகிய இளைஞர்களும் சிறுவர்களும் நேர்மைத்திறன்மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். மேற்படி சகல துறைகளும், நிறுவனங்களும், தனிப்பட்ட நபர்களும் நேர்மைத்திறன்மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். நேர்மைத்திறன்மிகு தேசமொன்றை அப்போதே அடைந்தகொள்ள முடியும்.

## 3 – அரச துறையின் நேர்மைத்திறன்

மேற்படி துறைகளுக்கு மத்தியில் இங்கு அரச துறை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. அரச துறையின் நேர்மைத்திறனை இரண்டு பிரிவுகளின் கீழ் எடுத்துக்காட்ட முடியும்.

1. அரச நிறுவனத்தின் நேர்மைத்திறன்
2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான நேர்மைத்திறன்

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான நேர்மைத்திறன்

அரச சேவையானது உயர்தரத்துடனும் பின்வரும் விழுமியங்களுடனும் இடம்பெறுதல் வேண்டும்.

- சேவைக்கான அர்ப்பணிப்பு
- பணிவன்பு
- நேர்மை
- பண்பார்ந்த நடத்தை

இத்தகைய பண்புகளுடன் செயற்படுகின்ற ஓர் அரச ஊழியர் நேர்மைத்திறனுடன் செய்யப்படுவது எதிர்பார்க்கப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களுக்கான நேர்மைத்திறன் தொடர்பாக கவனம் செலுத்தும்போது தனது செயற்பாடு தொடர்பாக வகை பொறுப்புக் கூறுதல், தனது பணி சம்பந்தமாக கொண்டுள்ள தேர்ச்சி மற்றும் பணிவன்புடன்கூடிய நடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதோடு இலஞ்சம் மற்றும் ஊழலற்றவராகவும் இருத்தல் வேண்டும். அதேவேளை நேர்மை, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை, நன்மதிப்பு மற்றும் ஏனையோர் தொடர்பாக கரிசனை கொண்டவராக இருப்பதும் கட்டாயமாக காணப்படுதல் வேண்டும்.

**Integrity: I = a (A C E) – c**
**Integrity is the alignment (a) of Accountability (A) / Competence (C) / and Ethical behaviour (E), without corruption* (c)**

### நேர்மைத்திறன்மிகு அரச ஊழியராக நீங்கள் மேற்கொள்ள வேண்டியவை

- உங்கள் கடமையையும் பொறுப்பினையும் நிறைவேற்றுதல் வேண்டும்.
- உங்களுடன் பணியாற்றுகின்ற அனைவரினதும் நம்பிக்கை மற்றும்

### அர்ப்பணிப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நீங்கள் நிதமும் தொழில்சார் பண்பினைப் பேணுதல் வேண்டும்.

- பொதுச் சொத்துக்களையும் நிதிகளையும் உரியமுறையிலும் வினைத்திறனுடனும் ஈடுபடுத்துவதற்குப் பொறுப்புப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- பொதுமக்களுடன் பணியாற்றுகின்றபோது இயன்ற உச்ச மட்டத்தில் நியாயமாகவும் வினைத்திறனுடனும் உரிய நேரத்திற்கும் கூருணர்வுடனும் செயற்படுவதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

- நடப்பிலுள்ள சட்ட முறைமைக்கு முரணாகாத வகையில் இயன்றளவு தகவல்களை வெளிப்படையாக நெறிப்படுத்த வேண்டும்.

- சட்டத்திற்கு அமைவாக செயற்பட்டு நீதி நிர்வாகத்தினை மேம்படுத்த வேண்டும்.

## நேர்மைத்திறன்மிகு அரச ஊழியராக நீங்கள் மேற்கொள்ளலாகாதவை

- உங்கள் உத்தியோகபூர்வ பதவி நிலையை தனிப்பட்ட நன்மை கருதி தவறாகப் பயன்படுத்தலாகாது. உதாரணமாக உத்தியோகபூர்வ பதவிநிலையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் தகவல்களை தமது தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்தலாகாது.

- உங்கள் கடமை மட்டத்தில அனுகூலத்தினையோ அல்லது அழுத்தம் பிரியோகிகப்படுவதனையோ எதிர்பார்க்கின்ற, உங்கள் தீர்மானங்களின்பால் அல்லது நேர்மைத்திறனின்பால் அழுத்தம் ஏற்படுத்தக்கூடிய நபர்களிடமிருந்து தனிப்பட்ட அன்பளிப்புகளையோ, கவனிப்புகளையோ வேறு ஏதேனும் பயன்களையோ பெற்றுக்கொள்ளலாகாது.

- உரிய அனுமதியின்றி உத்தியோகபூர்வ தகவல்களை வெளிப்படுத்தலாகாது. நீங்கள் அரச சேவையிலிருந்து வெளியேறிய பின்னரும் பொறுப்புகளிலிருந்து விடுபட மாட்டீர்கள்.

- ஒரு உத்தியோகத்தர் தமது தனிப்பட்ட அலுவல்களுக்கும் உத்தியோகபூர்வ அலுவல்களுக்கும் இடையில் மோதல் ஏற்படுகின்ற வகையிலான எந்தவொரு பணியினையும் அல்லது தமது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுகின்ற எந்தவொரு பணியினையும் மேற்கொள்ளலாகாது. அவர் நிதமும் அத்தகைய எதுவிதமான மோதலோ இடையூறோ ஏற்படுவதற்கு


இடமளிக்கப்படாத வகையில் செயற்பட வேண்டியதுடன் அவர் குறிப்பாக தாபன விதிக்கோவையின் XXIX ஆம் பந்தியினதும் தற்காலத்தில் நடப்பிலுள்ள சட்ட ஏற்பாடுகளையும் மிகவும் கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

## அரசாங்க உத்தியோகத்தர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டடுள்ள நம்பிக்கைப் பொறுப்பிற்கான பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுகின்றாரா?

- அரசாங்க உத்தியோகத்தர் அரச சேவைக்கான உறுதிமொழியை வழங்கிய பின்னரே அரச சேவையில் இணைகின்றார். அதன் பின்னர் வருடம்தோறும் புது வருடத்தின் முதலாம் வேலைத்தினத்தில் மேற்படி உறுதிமொழியை மீண்டும் வழங்குகின்றார். நாம் வழங்குகின்ற உறுதிமொழியை ஞாபகப்படுத்தும்போது அரச உத்தியோகத்தர் கொண்டிருக்க வேண்டிய நேர்மைத்திறன் நினைவுக்கு வரும். பொதுமக்களின் வரிப்பணத்தின் மூலம் சம்பளம் பெறுகின்ற நாம் நேர்மையாகவும், விசுவாசத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், வினைத்திறன்மிக்கவகையிலும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் இலஞ்சமும் ஊழலும் அற்றவகையில் செயற்படுவதாக உறுதிமொழி வழங்குகின்றோம்.

Don't be impressed by money, followers, degrees and titles. Be impressed by kindness, integrity, humility and generosity.

- இருப்பினும் நாம் இன்று மேற்படி உறுதிமொழியை மறந்திருப்பதாகத் தெரிகின்றது. பொதுமக்கள் எம்மீது நம்பிக்கைவைத்து எம்மிடம் ஒப்படைத்துள்ள பணிகளை அவர்களின் நம்பிக்கை பாதுகாக்கப்படுகின்ற வகையில் நாம் நிறைவேற்றுகின்றோமா என்பது தொடர்பாக நாம் எம்மையே வினவிப்பார்க்க வேண்டியுள்ளது. எஜமானாகிய பொதுமக்கள் சில பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக வருகை தரும்போது அவர்கள் சார்பாக நிறைவேற்றுவதற்கு கடமைப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதன் பொருட்டு சன்மானம் எதிர்பார்க்கப்படுவது நேர்மைத்திறன் நழுவிச் சென்றிருப்பதைக் காட்டுகின்றது.




- சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நிறுவனத்திற்கு வருகின்ற பொதுமக்களுக்கு பெரும்பாலும் தமது சேவையினை நிறைவேற்றிக்கொள்வதற்காக பல தடவைகள் அலைந்துதிரிய வேண்டியேற்பட்டுள்ளன. பல பொழுதுகள், பல நாட்கள் காத்திருக்க வேண்டியேற்பட்டுள்ளன. தமது சேவகனிடம் மண்டியிட்டு மன்றாட வேண்டியேற்பட்டுள்ளன.

- மறுபுறத்தில் ஒருவருக்கான கடமை உரிய நேரத்தில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக நிதமும் மேற்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளன. யார் பார்த்துக் கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் தாம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியினை சரியாகத் தாமதமின்றி வினைத்திறனுடன் நிறைவேற்றும் பட்சத்தில் இத்தகைய மேற்பார்வைகள் தேவைப்படமாட்டாது.

- அரச நிறுவனமொன்றிற்குள் அடியெடுத்து வைக்கும் ஒருவருக்கு தனது துன்பியலுக்கான வெளிப்படையான தீர்வு உள்ளதென்பது காணக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதேவேளை மேற்படி தீர்வினை உண்மையாகவும் நியாயமாகவும் பெற்றுத் தருகின்ற அரச உத்தியோகத்தர்கள் இஷ்ட தேவதைகள்போல் அரச நிறுவனங்களில் எழுந்தருளியிருப்பதாக பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளல் வேண்டும். தமது கடமையை அபிமானத்துடன் திறம்பட நிறைவேற்ற வேண்டும். அதேவேளை குறிப்பிட்ட பணியானது வெளிப்படைத் தன்மையுடன் நீதியாக சட்டத்திற்கு அமைவாக நிறைவேற்றப்பட்டது என்பதை பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நேர்மைத்திறன்மிகு அரச ஊழியருக்கு இயல்பாகவே கௌரவம் கிடைக்கின்றது.

- இன்று எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு மற்றும் நம்பிக்கை பொறுப்பு என்பன பற்றிய புரிதல் எம்மிடமில்லை. அதன் காரணமாகவே எதுவித அருவருப்புமின்றி ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் சொந்தமான வளங்களை ஒரு குழுவினர் மட்டும் பயன்படுத்தியும் அனுபவித்தும் வருகின்றனர்.

பொதுச் சொத்துக்களின் உரிமையானது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உள்ளதென்பதையும், நாம் எதிர்கால சந்ததியினரிடம் கடனுக்காக வளங்களை பெற்றுக்கொண்டு அனுபவித்து வருகின்றோம் என்பதையும் அரச துறையில் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையிலான பதவிகளை வகிக்கின்ற சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் நினைவுபடுத்த வேண்டும். எமது தாயகமானது வளங்கள்களினாலும் சொத்துக்களினாலும் நிறைந்துள்ளது. அதனைப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் அவற்றை அனுபவித்து எஞ்சிய பகுதியை எமது எதிர்கால சந்ததியினருக்காக சேமித்து வைப்பதற்கும் அதன் இன்றைய பொறுப்பாளர்களாகிய எமக்கு பாரிய பொறுப்பு உள்ளதென்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 4. அரச துறையின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான கருவிகள்

# 4. அரச துறையின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான கருவிகள்

## 1. அறிமுகம்

ஒரு நாட்டிற்கான நேர்மைத்திறன் ஆனது மேலெழுப்பட வேண்டியதொன்றாகும் என்பது அனைவராலும் விவாதமின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு விடயமாகும். அது அவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 03ஆம் உறுப்புரையின் பிரகாரம் இலங்கைக் குடியரசில் இறைமை மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். பொதுமக்களின் இறைமை அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளும் உத்தியோகத்தர்களும் மக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கும் வகைப்பொறுப்புக் கூறுவதற்கும் கட்டுப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் (UNCAC) 08(01) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஊழலுக்கு எதிராக செயற்படுவதன் பொருட்டு அரச தரப்புகள் அரச உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் நம்பகத்தன்மை, நேர்மை மற்றும் பொறுப்பு ஆகிய பண்புகளை மேம்படுத்த வேண்டும் எனவும், 08(05) உறுப்புரையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும்போது கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய அவர்களுக்கான வெளிப்புற நடவடிக்கைகள், தொழில்கள், முதலீடுகள், சொத்துக்கள் மற்றும் பெறுமதியான அன்பளிப்புகள் அல்லது அனுகூலங்கள் தொடர்பாக தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு வெளிப்படுத்துவதற்கான முறைகளை ஏற்படுத்த வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

திறந்த அரசாங்கப் பங்குடமை (Open Government Partnership-OGP) எனப்படுகின்ற பலதரப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள ஒரு நாடு என்ற வகையில் இலங்கையானது பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறுகின்ற, வெளிப்படைத்தன்மையுடனும் வகை பொறுப்புடனும்கூடிய நல்லாட்சியொன்றை நாட்டில் ஏற்படுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் சௌபாக்கியமிகு தேசமொன்றை நோக்கி நாம் மேற்கொள்ளும் பயணத்தின்போது அனைவருக்கும் அபிவிருத்தியின் அனுகூலங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். சமூக நீதி, நியாயம் அனைவருக்கும் ஒரு சமமாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

அது மட்டுமல்லாமல் எதிர்கால சந்ததியினரின் வளங்களை அழிக்காமல் அவர்களுக்காக அவற்றை சேமித்துச் செயற்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியுடன்கூடிய நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதன்போது அரசாங்க உத்தியோகத்தரின் நேர்மைத்திறன் ஆனது இன்றியமையாத ஒரு காரணியாக அமைகின்றது.

## 2. அரச துறையின் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களும் முறையியல்களும்

மேற்படி பின்னணியில் எமது நாட்டில் பிரதானமாக அரச துறையில் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல சட்டதிட்டங்களும் முறையியல்களும் காணப்படுகின்றன.

1. இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டங்கள் (இது தொடர்பாக பிறிதொரு கட்டுரையின் மூலம் கலந்துரையாடப்பட்டுள்ளது).
2. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம்
3. தேசிய நேர்மைத்திறன் திட்டம்.
4. தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணங்கள்

இதன்போது அரச துறையின் நேர்மைத்திறன் இரண்டு பிரிவுகளின் கீழ் இனங்காணப்பட முடியும்.

1. அரச நிறுவனங்களுக்கான நேர்மைத்திறனை மேம்படுத்துதல்
2. அரச உத்தியோகத்தருக்கான நேர்மைத்திறன்

## 3. அரச நிறுவனத்தில் நேர்மைத்திறன் மேம்படுத்தப்படுதல்

அரச சேவை வழங்கல் செயன்முறை தொடர்பாக மக்களுக்குள் காணப்படுகின்ற அறியாமை மற்றும் தெளிவின்மை அதிகரிக்கும்போது அது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. அரச நிறுவனங்களுக்கான சகல பிரதானிகளும் தமது நிறுவனங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் அதிகளவில் இடம்பெறுவதற்கான ஆபத்துள்ள அலகுகள் யாவை என்பதைக் கண்டறிந்து அவற்றுக்கான காரண காரணிகளாக அமைகின்ற பலவீனமான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் மிகவும் வசதியாக சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

அதன் பிரகாரம் நிறுவனங்களை நேர்மைத்திறன்மிக்கவைகளாக

மாற்றியமைப்பதன் பொருட்டு இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டத்தின் மூலம் பல முறையியல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர்கள் அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்படுதல்.
2. அரச நிறுவன மட்டத்தில் ஊழல் தடுப்புக் குழுக்களை நிறுவுதல்.
3. ஊழல் தடுப்பு நிறுவனசார் செயற்பாட்டுத்திட்டம் வகுக்கப்படுதல்.
4. வசதி வழங்கும் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுதல்.
5. பிரசைகள் சாசனங்கள் தயாரிக்கப்படுதல் மற்றும் காட்சிப்படுத்தப்படுதல்.
6. தகவல் அறிவதற்கான மக்கள் உரிமையை நடைமுறைப்படுத்துதல். (இந்த விடயங்கள் சம்பந்தமான விரிவான விபரமொன்று நேர்மைத்திறன் கையேட்டில் தரப்பட்டுள்ளதால் அதனை கற்றாராய்வதன் மூலம் தெளிவான புரிதலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.)

## 4. அரசாங்க உத்தியோகத்தரின் நேர்மைதிறனை மேம்படுத்துதல்.

1. அன்பளிப்புப் பெறுவதற்கு எதிரான சித்தாந்தங்கள் (அன்பளிப்பு விதிகள் பற்றிய கையேட்டினைப் பார்க்கவும்)
2. நலன்களுக்கு இடையிலான தொடர்புகள் சம்பந்தமான விழுமியங்கள் (நலன்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பற்றிய கையேட்டினைப் பார்க்கவும்).
3. தமது சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் சம்பந்தமான விவரங்களை வெளிப்படுத்துவதற்காக உள்ள கடப்பாடு (தாபன விதிக்கோவை மற்றும் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புகள் சட்டம்)
4. அரச உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை (தாபன விதிக்கோவை)
5. நேர்மைத்திறன் ஒப்பந்தத்திற்கு.ஃஉறுதிமொழிக்கு சகல அரச ஊழியர்களையும் உட்படுத்துதல்.
6. நேர்மைத்திறன் தொடர்பான அறிவினை நிதமும் மேம்படுத்துதல்.

# முதலாம் அத்தியாயம்

## ஊழலை இனங்காணுதல்

## 5. ஊழல் என்றால் என்ன?

### பொருள்கோடல் (சர்வதேச ரீதியான)

ஒக்ஸ்போர்ட் அகராதியின் பிரகாரம் ஊழல் (Corruption) என்பது "அதிகாரத்தை நேர்மையற்ற அல்லது மோசடியான முறையில் பயன்படுத்துவதாகும்." (dishonest or fraudulent conduct by those in power). மெரியம் வெப்ஸ்டர் (Merriam-Webster) அகராதியின் பிரகாரம் "குறிப்பாக பலம்பொருந்திய நபர்களின் சட்டவிரோத அல்லது நேர்மையற்ற நடத்தை" ஊழல் ஆகும் (dishonest or illegal behaviour especially by powerful people). எவ்வாறாயினும் ஊழல் என்பதற்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான தனி பொருள்கோடல் கிடையாது. அதற்கான ஒரு காரணம் ஊழல் பற்றிய சொல்லியல் நாட்டுக்கு நாடு கலாசாரத்திற்குக் கலாசாரம் வேறுபடுவதாகும். ஐக்கிய நாடுகளுக்கான ஊழல் எதிர்ப்பு சமவாயத்தின் மூலமும் ஊழல் சம்பந்தமாக பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது.

### ஊழல் பற்றிய இலங்கையின் சட்டரீதியான பொருள்கோடல்

"இலஞ்சம் மற்றும் ஊழல்" என்பது பெருவாரியாகப் பயன்படுத்தப்படுகின்ற இணைமொழிச் சொல்லாக அமைந்துள்ளது. ஊழல் என்றால் என்ன என்பது தொடர்பில் சர்வதேச ரீதியில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட துல்லியமானதொரு பொருள்கோடல் இல்லாதபோதிலும் சட்ட ரீதியான தேவைப்பாடுகளின் நிமித்தம் இலங்கைக்குரியதாக ஊழல் என்பது தொடர்பில் தெளிவானதொரு பொருள்கோடல் வகுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அப்பொருள்கோடல் 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டத்தின் 70 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பிரிவின் பிரகாரம் ஊழல் என்பது,

“அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன்-

1. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் பெற்றிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற,
2. அத்தகைய வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை, பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற,
3. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற,
4. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவு எடுப்பதில் பங்குபற்றுகின்ற,
5. பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற, ஒரு செயற்பாடு ஊழல் என பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சச் சட்டத்தின்படி அத்தகைய செயற்பாடு ஒரு குற்றவியல் தவறாகும். அத்தவறு தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோடு ஊழல் குற்றமானது பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய ஒரு தவறாகக் கருதப்படுகின்றது. ஊழல் குற்றத்திற்கு 1994 ஆம் ஆண்டின் 20 இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின்படி நீதவான் நீதிமன்றத்தில் நடத்தப்படுகின்ற சுருக்கமுறையிலான விளக்கத்தின் மீது குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் அடிப்படையில் 10 ஆண்டுகளை விஞ்சாதவொரு மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப் பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும். பின்னர் 2018 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் இலஞ்சம் பற்றிய வழக்குகளை முன்னெடுத்துச் செல்லல் மேல் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

## ஊழல் பற்றிய பிரபல்யமான பொருள்கோடல்கள்

- அரசாங்கப் பதவிகளை தமது தனிப்பட்ட பயனுக்காக தவறான முறையில் பயன்படுத்துவது ஊழலாகும்.

  - உலக வங்கி

- அரச துறை உத்தியோகத்தர் ஒருவர் (அரசியல்/அரச சேவை) தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை தமது தனிப்பட்ட நலன்களுக்காக அல்லது தம்முடன் தொடர்புடைய வேறொருவரின் நலனுக்காக தவறான முறையில் அல்லது சட்ட விரோதமான முறையில் பயன்படுத்துவதாகும்.

  - ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் அமைப்பு

- ஊழல் எனப்படுவது தனியார் துறை மற்றும் பொதுத் துறை உத்தியோகத்தர்களுக்கு இடையில் இடம்பெறுகின்ற பொதுப் பொருட்களை சட்ட விரோதமாக தனிப்பட்ட பொருட்களாக மாற்றியமைக்கும் கொடுக்கல் வாங்கல் ஆகும்.

  - ஈடின் ஹோம்ஸ்

- அரச உத்தியோகத்தர் அந்தரங்கத்தன்மை, உறவுமுறை, நட்பு, சொத்து அல்லது அதிகாரம் போன்ற தனிப்பட்ட நோக்கங்களின் காரணமாக பொறுப்புக்கள் மீறப்படும் வகையில் நடந்துகொள்ளல்

  - கொலின் ஹே


- இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நபரிடமிருந்து இடம்பெற வேண்டிய கடமை அல்லது அவரிடமிருந்து இடம்பெற வேண்டிய செயற்பாட்டிலிருந்து (நடத்தையிலிருந்து) மாற்றமடையும் வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலஞ்சம் அல்லது வேறு தவறான அனுகூலத்தைக் கோருதல், அளித்தல், வழங்குதல் அல்லது பெற்றுக்கொள்ளல் ஊழலாகும்.

  - ஐரோப்பிய கவுன்சில்

மேற்படி பொருள்கோடல்களின் பிரகாரம் நோக்கும்போது ஊழல் என்பதில் வர்த்தக சமூகத்தினரால் அரசியல்வாதிகளுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இலஞ்சம் வழங்கப்படுவதிலிருந்து அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சிறிய அளவிலான களவுகள், அரச ஊழியர்கள் பெற்றுக்கொள்ளும் சன்மானங்கள் (அவாநிறைவுகள்) வரை பரந்து காணப்படுகின்ற அனைத்து சந்தேக நடவடிக்கைகளும், பொருளாதார அரசியல் விடயங்களும் உள்ளடங்குகின்றதென்பதை புரிந்துகொள்ளல் வேண்டும். ஊழல் என்பது ஒரே வடிவிலான செயற்பாடோ அல்லது கொடுக்கல் வாங்கலோ கிடையாது மாறாக அது வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு வடிவங்களில் இடம்பெறுகின்றதொரு நிகழ்வாகும்.

## ஊழல் பற்றிய சூத்திரம்

ஊழல் தொடர்பாக கற்கையில் ஈடுபட்ட பொருளியலாளரான ராபர்ட் கிளிட்கார்ட் (Robert Klitgaard) அவர்கள் ஊழல் தொடர்பான சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். ஊழல் சம்பந்தமாக தாக்கம் ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் ஊழலின் ஏற்றத் தாழ்வின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்ற காரணிகள் யாவை என்பது தொடர்பாக இந்த சூத்திரத்தின் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட சூத்திரமானது கிளிட்கார்ட் சூத்திரம் (Klitgaard formula) என அழைக்கப்படுகின்றது.





மேற்படி சூத்திரத்தின் பிரகாரம் ஏகபோக உரிமையுடன் தற்றுணிபு அதிகாரம் சேர்க்கப்பட்டு வகைப்பொறுப்பு கழிக்கப்பட்டதன் பின்னர் ஊழல் உருவாகின்றதென்பது தெளிவாகின்றது. இச்சூத்திரத்தின் பிரகாரம்,

- ஏகபோக உரிமை அதிகரிக்கின்ற போதும்

- தற்றுணிபு அதிகாரம் அதிகரிக்கின்ற போதும் வகைப்பொறுப்பு குறைவடைக்கின்ற போதும் ஊழல் அதிகரிக்கின்றதென்பது தெளிவாகின்றது. கிளிட்கார்ட் சூத்திரத்தின் பிரகாரம் ஊழலைக் குறைத்தல் ஊழலைக் குறைப்பதற்காக ஏகபோக உரிமையைக் குறைத்தல் தற்றுணிபு அதிகாரத்தைக் குறைத்தல்

- மற்றும் வகைப்பொறுப்பினை அதிகரித்தல் வேண்டும்.

அதன் பிரகாரம் ஊழலைக் குறைப்பதற்காக கீழே தரப்பட்டுள்ள வகையில் கிளிட்கார்ட் சூத்திரத்தை மீண்டும் முறைப்படுத்த முடியும்.




மேற்படி சூத்திரத்தின் பிரகாரம் ஊழலைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கைமுறையாக அமைந்திருப்பது யாதெனில், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கான வாய்ப்பினை இல்லாதொழிப்பதாகும். அதன்மூலம் ஏகபோக உரிமையினது மட்டுமன்றி தற்றுணிபு அதிகாரத்தினதும் குறைப்பினை

எதிர்பார்க்க முடியும்.

ஏகபோக உரிமை மற்றும் தற்றுணிபு அதிகாரம் என்பவற்றைக் குறைப்பதன் பொருட்டு தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கான வாய்ப்பினைக் இல்லாதொழிக்க வேண்டும். தனிநபர் கொண்டுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளும் வாய்ப்புக்குப் பதிலாக தீர்மானங்களை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமித்தல், தீர்மானங்களை மேற்கொள்ளும் பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களை பல்வேறுபட்ட மட்டங்களில் மேற்கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்துதல், தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறைகளையும் அளவுகோல்களையும் அறிமுகஞ்செய்தல், தீர்மானங்களுக்கான மறுசீராய்வின் பொருட்டு வாய்ப்பு வழங்கப்படுதல், பல மட்டங்களில் இடம்பெறுகின்ற மேற்பார்வை செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்படுதல் என்பவற்றின் மூலம் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கான வாய்ப்பினை இல்லாதொழிக்க முடியும்.

கிளிட்கார்ட் சூத்திரத்தின் பிரகாரம் ஊழலைக் குறைப்பதற்கான மற்றுமொரு உபாயமார்க்கமாக அமைந்திருப்பது சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துதலாகும். சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதன் மூலம் தற்றுணிபு அதிகாரத்தினைக் குறைக்கமுடியும். நீதியானதும் வலுவானதுமான சட்டங்களை உருவாக்குதல் மட்டுமன்றி அச்சட்டங்களையும் சட்டத்தின் செயன்முறைகளையும் அனைவருக்கும் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளலானது முறையாகவும் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையின் பிரகாரமும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அப்போது தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையின்போது தனிநபரின் தற்றுணிபு அதிகாரம் வரையறுக்கப்படுவதோடு அந்த வரையறைகளை மீறி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நபரை சட்டத்தின்முன் கொண்டுவருவதற்கான வாய்ப்புக் கிடைப்பதனால் சகலரும் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தமது தத்துவங்களை சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள வரம்புகளுக்குள்ளும் உரிய முறையியல்களைப் பின்பற்றியும் மேற்கொள்வார்கள்.

ஏகபோக உரிமை மற்றும் தற்றுணிபு அதிகாரம் என்பவற்றைக் குறைத்தல் மட்டுமன்றி வகைப்பொறுப்பினை அதிகரிப்பதன் மூலமும் ஊழலை இல்லாதொழிக்க முடியும். தகவல்களை சுதந்திரமாக வழிந்தோடச் செய்ய இடமளிப்பதானது வகைப்பொறுப்பினை அதிகரிக்கச் செய்யும் மற்றுமொரு மூலோபாயமாக அமைந்துள்ளது. ஆட்சேர்ப்புக்கள், கொள்வனவுகள், நிவாரண செயன்முறை மட்டுமன்றி அளவுகோல்கள் மற்றும் நடவடிக்கைமுறைகள் பற்றிய தகவல்களையும் மக்கள் அறிந்துகொள்ளச் செய்வது நிறுவனமொன்றிற்கு சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக அமைந்துள்ள சந்தர்ப்பமொன்றில் குறிப்பிட்ட நிறுவனத்தினது உத்தியோகத்தர்களின் பொறுப்பானது தானாகவே அதிகரிக்கும். வகைப் பொறுப்பு அதிகரிக்கும்போது ஊழல் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவடையும். உதாரணமாக பணியாட்டொகுதிக்கான ஆட்சேர்ப்பு

மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நடத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையினதும் நேர்முகப்பரீட்சையினதும் புள்ளிகள் பகிரங்கப்படுத்தப்படுமானால் மற்றும் தேவையானவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அவை வழங்கப்படுமானால் போட்டிப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வாய்ப்புகள் இல்லாது செல்லும் என்பதோடு அதன்மூலம் உறவினர்களுக்கான உபசாரங்களும் நண்பர்களுக்கான உபசாரங்களும் தடுக்கப்படும். தகவல் அறிவதற்கான உரிமை பற்றிய சட்டரீதியான ஏற்றுக்கொள்ளலின் தேவையானது ஊழல் கருவியாக இத்தகைய சந்தர்ப்பங்களிலேயே எழுகின்றது.

வகைப்பொறுப்பினை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய மற்றுமொரு உபாயமார்க்கம் மக்களின் குரலை மேம்படச் செய்வதாகவும். ஏதேனும் அநீதி இழைக்கப்படும்போது மக்கள் அதற்கு எதிராக பதிற்செயற்பாடுகளை காட்டுவார்களாயின் உத்தியோகத்தர்களின் வகைப்பொறுப்பானது தானாகவே அதிகரிக்கும். அதற்காக மக்கள் தகவல்களைத் தேடுகின்ற குழுவினராகவும் தகவல்கள் தொடர்பாக ஊக்கம் காட்டுகின்ற குழுவினராகவும் இருப்பது மட்டுமன்றி அத்தகவல்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற அநீதியான செயற்பாடுகளுக்கு எதிராக பதற்செயற்பாடு காட்டும் அளவிற்கு பலம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். குறிப்பாக அநீதிக்கு எதிராக போராடுவதற்குத் தயாரான குழுவினராக மட்டுமன்றி அதற்காக புத்திகூர்மையான உபாய மார்க்கங்களைத் தெரிவு செய்யக்கூடிய ஆற்றலுடன் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

## ஊழலின் தரப்புகள்

ஊழலுக்கான செயன்முறையொன்றில் அடிப்படையில் இரண்டு தரப்பினர்களை இனங்காண முடியும்.

1. கோரிக்கை விடுக்கும் தரப்பு
2. வழங்கும் தரப்பு

கோரிக்கை விடுக்கும் தரப்பாக கருதப்படுவது ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் கடமையைப் புரிவதற்காக அல்லது புரியாதிருப்பதற்காக இலஞ்சம் கோருகின்ற அல்லது தமது உத்தியோகபூர்வ பதவியைத் தவறாகப் பயன்படுத்துகின்ற தரப்பாகும். ஊழல்மிகு உத்தியோகத்தர்கள், ஊழல்மிகு அரசியல்வாதிகள் இத்தரப்பிற்குள் உள்ளடங்குவர்.

வழங்கும் தரப்பு என கருதப்படுவது மேற்படி கோரிக்கை விடுக்கும் தரப்பு கோருகின்ற இலஞ்சத்தை அல்லது அனுகூலத்தை வழங்குவதற்கு உடன்படுகின்ற தரப்பாகும். இக்குழுவில் பொதுமக்கள், ஒப்பந்ததாரர்கள், பிரதிநிதிகள் போன்றவர்கள் உள்ளடங்குவர்.

இதன்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம் யாதெனில், ஊழலை நிதமும் ஆரம்பிப்பது கோரிக்கை விடுக்கின்ற தரப்பு அல்ல என்பதாகும். சில சமயங்களில் வழங்கும் தரப்பும் ஊழலுக்கான முன்மொழிவினை கோரிக்கை விடுக்கும் தரப்பிற்கு முன்வைக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

உதாரணமாக உரிய தரமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள கொங்கிரீட் வீதியொன்று உரிய தரத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து அறிக்கையொன்று வழங்கப்படுமானால் ஐந்தாயிரம் ரூபா பெற்றுத்தருவதாக தொழில்நுட்ப அலுவலருக்கு ஒப்பந்தகாரர் முன்மொழியும் சந்தர்ப்பத்தினை எடுத்துக்காட்ட முடியும்.

## 06. ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள்

இலஞ்சம் மற்றும் ஊழல் எனும் இணைமொழிச் சொல்லானது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் இலஞ்சம் என்பதன் மூலம் ஊழலின் ஒரு வகையினம் அல்லது தோற்றப்பாடு அறிமுகப்படுத்தப்படுகின்றது. ஊழல் இடம்பெறுகின்ற சகல வேளைகளிலும் காணப்படுகின்ற சில பொது நிகழ்வுகள் உள்ளன. அவையாவன,

- அதிகாரத் துஷ்பிரயோகம்
- சட்டரீதியாக அதிகாரத்தினைக் கொண்டுள்ள அரசு ஊழியர்கள் (நிர்வாக/அரசியல்)
- தனிப்பட்ட அனுகூலங்கள் பெறப்படுதல்.
- இக் காரணிகள் காணப்படுகின்றதும் ஊழலுக்குள் உள்ளடங்குகின்றதுமான பல குற்றச்செயல்கள் பல வடிவங்களில் காணப்படுகின்றன.

### ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் ஊழலின் வகையினங்கள்

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் பின்வரும் ஊழல் செயற்பாடுகளுக்காக குற்றவியல் குற்றப் பொறுப்பினை சாட்டுவதற்காக ஓர் அரசினால் சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இலஞ்சம்
- உத்தியோகத்தர் ஒருவரால் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுதல்
- அழுத்தம் பிரயோகிக்கப்படுதல்
- பதவிகளைப் தவறாகப் பயன்படுத்துதல்
- நியாயமற்ற செல்வமீட்டல்
- குற்றச்செயல்களிலிருந்து கிடைக்கப்படும் பணத் தூய்தாக்கல்
- நீதி நிர்வாகத்திற்குத் தடை ஏற்படுத்துதல்

### இலஞ்சம்

ஒரு உத்தியோகத்தர் மேற்கொள்ளும் தீர்மானத்தின் மூலம் அல்லது மேற்கொள்ளும் செயற்பாட்டின் மூலம் தவறான அனுகூலங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் வாக்குறுதியாக இதனை அறிமுகப்படுத்த முடியும். இது இரு தரப்பினதும் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. இது பணத்தின் மூலம், பொருட்களின் மூலம், சேவைகளின் மூலம் இடம்பெற முடியும். குறிப்பாக சட்டத்திற்கு முரணான விடயங்களை மேற்கொள்வதற்காக சட்டத்தை அமுல்நடத்துகின்றவர்களுக்கு

இலஞ்சம் வழங்கப்படுவதனை நிதமும் காணமுடிகின்றது. அரச ஊழியர் ஒருவரால் இலஞ்சம் பெறப்படுதல் அல்லது அரச ஊழியர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கப்படுதல் மட்டும் இலங்கையின் சட்டத்தில் குற்றச் செயல்களாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் தனியார் துறையில் இடம்பெறுகின்ற இலஞ்சச் செயற்பாடுகள் இன்னமும் குற்றவியல் சட்டத்தின் ஒரு பகுதியாக அமையவில்லை.

சர்வதேச ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கான இலஞ்சம், வெளிநாட்டு அரச ஊழியர்களுக்கான இலஞ்சம் மற்றும் சர்வதேச அரச அமைப்புகளின் உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம் என்பனவும் குற்றவியல் குற்றங்களாக இணங்காணப்பட்டுள்ளன.

## உத்தியோகத்தர் ஒருவரால் சொத்துக்கள் தவறான முறையில் பயன்படுத்தப்படுதல்

அரச உத்தியோகத்தர் ஒருவரின் பதவியின் பிரகாரம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏதேனும் சொத்தினை, பொது அல்லது தனிப்பட்ட நிதியினை அல்லது பிணை அல்லது பெறுமதியான ஒரு பொருளை குறிப்பிட்ட அரச உத்தியோகத்தர் அவரது அல்லது வேறொரு ஆளின் தவறான அனுகூலத்திற்காக மோசடி செய்வது அல்லது தவறாகப் பயன்படுத்துவது ஊழலாகும்.

## அழுத்தம் பிரயோகிக்கப்படுதல்

ஏதேனும் செயப்பாட்டினை நிறைவேற்றுமாறு ஆரம்பத்தில் கோரிய நபருக்கு அல்லது வேறொரு நபருக்கு அரச தரப்பின் நிர்வாக அல்லது அரச அதிகார சபையிலிருந்து தவறான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் அரச உத்தியோகத்தர் அல்லது வேறொரு நபர் அவரது செல்வாக்கினைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட அரச உத்தியோகத்தருக்கு தவறான அனுகூலத்தை நேரடியாகவோ வேறுவிதமாகவோ பெற்றுக்கொடுப்பதற்கு வாக்குறுதியளித்தல் அல்லது முன்மொழிதல்,

ஏதேனும் தவறான அனுகூலத்தை அரச தரப்பின் நிர்வாக அல்லது அரச அதிகார சபையொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் எண்ணத்துடன் அரச உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வேறொரு நபர் அவரது செல்வாக்கினைப் பயன்படுத்துவதற்காக குறிப்பிட்ட அரச உத்தியோகத்தருக்கு தவறான அனுகூலத்தை நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பெற்றுக்கொடுப்பதற்குக் கோருதல் அல்லது பெற்றுக்கொள்ளல் அழுத்தம் பிரயோகிக்கப்படுதலாக அழைக்கப்படுகின்றது.

## பதவிகளைப் தவறாகப் பயன்படுத்துதல்

எவரேனும் அரச உத்தியோகத்தர் தமது செயற்பொறுப்பினை அல்லது பதவியை தவறாகப் பயன்படுத்துதல். அதாவது, எவரேனுமொரு அரச உத்தியோகத்தருக்காக அல்லது வேறொரு நபருக்காக தவறான அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையின் பொருட்டு அவரது செயற்பொறுப்பினை நிறைவேற்றும்போது சட்டத்தை மீறி ஏதேனும் செயற்பாட்டினைப் புரிவது அல்லது வேண்டுமென்றே புரிவதனைத் தவிர்ப்பது.

## நியாயமற்ற செல்வமீட்டல்

சட்டவிரோத செல்வமீட்டல் அதாவது அரச உத்தியோகத்தர் ஒருவரின் சட்டரீதியான வருமானத்திற்குரியதாக அவரால் நியாயமான முறையில் தெளிவுபடுத்த முடியாதளவு சொத்துக் குவிப்பினை ஏற்படுத்தியிருக்கும்போது அது சட்டவிரோத செல்வமீட்டலாக அமைகின்றது.

## குற்றச்செயல்களிலிருந்து கிடைக்கப்படும் பணத் தூய்தாக்கல்

ஏதேனுமொரு சொத்தினை சட்டவிரோத முறையில் பெற்றுக்கொண்டு அதன் சட்டவிரோத ஆரம்பத்தினை மறைத்தல் அல்லது மூடி மறைப்பதற்காக குறிப்பிட்ட சொத்தினை மாற்றியமைத்தல் அல்லது சாட்டுதல் பணத்தூ ய்தாக்கலாகும்.

மேற்கூறப்பட்ட விதங்களுக்கு மேலதிகமாக பின்வரும் வடிவங்களிலான செயற்பாடுகளும் ஊழலாக அழைக்கப்படுகின்றன.

## மோசடி

ஒருவரது அல்லது மூன்றாம் தரப்பினரது நன்மைக்காக வேறொரு நபரை ஏமாற்றுவதற்காக செயற்படுவது இப்பெயரால் அழைக்கப்படுகின்றது. நோயாளர்களுக்கு அரச உதவிகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அரச மருத்துவரிடமிருந்து போலியான சான்றிதழைப் பெற்றுக்கொண்டு மேற்படி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக செயற்படுவது இந்த வடிவத்திலான குற்றமாகும்.

## பலவந்தம்

ஏதேனும் செயலைப் புரிவதற்காக அல்லது புரியாதிருப்பதற்காக பெறுமதியான ஒரு பொருள் அல்லது பணம் தருமாறு கட்டாயப்படுத்துதல் பலவந்தம் ஆகும். இதனை மேற்கொள்ளாதிருத்தல், உடல் ரீதியான சித்திரவதை மற்றும் காயப்படுதல் வரை பாரதூரமடையலாம். நோய்வாய்ப்பட்டு

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருபெண் மருத்துவரை அழைக்குமாறு தாதியைக் கோரும்போது தமக்கு அதற்காகப் பணம் தருமாறு குறிப்பிட்ட வார்ட்டுக்குப் பொறுப்பாகவுள்ள தாதி கட்டாயப்படுத்துவது இந்த வடிவத்திலான ஒரு குற்றமாகும். அதனை புரியாதிருப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட பெண் மரணிக்கவும் வாய்ப்புள்ளது.

## தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரத்தைத் துஷ்பிரியோகம் செய்தல்

ஒருவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு குழுவினருக்கு முறையற்ற அனுசரணை வழங்குதல் அல்லது பாகுபாடு காட்டுதல் ஆனது இக்குற்றத்தில் உள்ளடங்கும். சட்டத்தை தவறாகப் பயன்படுத்தும்போது அல்லது தனித்துவமான தீர்மானங்களை நியாயப்படுத்துவதற்கு முறைசார் சட்டங்கள் அல்லது முறையியல்கள் இல்லாதபோது நிதமும் அதிகாரத் துஷ்பிரியேகம் இடம்பெறுவதைக் காணமுடியும்.

## தேவைகள் பற்றிய மோதலிலிருந்து முறையற்ற இலாபம் ஈட்டப்படுதல்/உள்ளக வர்த்தகம்

நியாயமற்ற செல்வமீட்டல் எனும் நோக்கத்துடன் ஒருவரின் பதவிக்கு உட்படாத கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல், அந்தஸ்து அல்லது வர்த்தக இலாபம் பெறுதல் இதன்மூலம் கருதப்படுகின்றது. உதாரணமாக ஒரு அரச உத்தியோகத்தர் தமக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அரசாங்கமானது பாரிய அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை ஒரு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்போவதாக அறிகின்றார். அவர் குறிப்பிட்ட பிரதேசத்தில் பெரிய காணியொன்றை கொள்வனவுசெய்து அப்பிரதேசத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அனுமதி வழங்கும் பொருட்டு முன்னின்று செயற்படுகின்றார். குறிப்பிட்ட கருத்திட்டத்தின் நோக்கமானது பொதுமக்களுக்கு வசதிகளை வழங்குவது என்றபோதிலும் அரச உத்தியோகத்தர் அதன்மூலம் நியாயமற்ற வகையில் பாரிய இலாபத்தை ஈட்டுகின்றார்.

## சட்டத்திற்கு எதிரான கையூட்டல்கள், பணிக்கொடை, கமிஷன் பெற்றுக்கொள்ளல்

அரசாங்கத்துடன் ஏதேனும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற தரப்பொன்றிலிருந்து ஏதேனும் பெறுமதி, பணம், இலாபம் பெற்றுக்கொள்ளப்படுதல் இதன் மூலம் கருதப்படுகின்றது. அரச ஊழியர் ஒருவர் கேள்விப்பத்திரங்களை அங்கீகரிப்பதற்காக பணம் அல்லது கமிஷன் கோருவது உதாரணங்கள் ஆகும்.

## முறையற்ற பாரபட்சம்

தனிப்பட்ட அறிமுகம், கட்சி நட்புறவு, இனம், மதம், சாதி அல்லது வேறு விருப்பத்தின் அடிப்படையில் அரச ஊழியர் ஒருவரால் சேவை அல்லது வளங்கள் வழங்கப்படுதல் இதில் உள்ளடங்கும். இதன் சிறப்புத்தன்மை யாதெனில் சாதாரண பொது மக்களுக்குக் கிடைக்கப்படாத வகையிலான கவனிப்பு தனிப்பட்ட விருப்பத்தின் மீது அரச ஊழியரின் நண்பர்களுக்குக் கிடைப்பதாகும். பொதுச்சொத்து முறைசாரற்ற வகையிலும் ஒழுங்கற்ற வகையிலும் பிரிந்து செல்வது இதன்மூலம் இடம்பெறுகின்றது.

## உறவினர்களுக்கான உபசரிப்பு

அரச ஊழியர் கொண்டுள்ள உறவுமுறையின் அடிப்படையில் அரச பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுதல் அல்லது வேறு நன்மைகள் பெற்றுக்கொடுக்கப்படுதல் இதன் தன்மையாகும். அரசியல்வாதிகள் தமது உறவினர்களையும் நண்பர்களையும் தமது அமைச்சுகளுக்கு நியமித்துக்கொள்வது இதற்கான உதாரணமாகும். இது அரசாங்கத்தின் உறுதிப்பாடு மற்றும் கூட்டாண்மை மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

## சட்டவிரோத மானியங்கள்

அரசியல் கட்சிகளுக்கோ அல்லது ஆளும் கட்சிகளுக்கோ சிற்சில நடவடிக்கைகளில் தலையிடாதிருப்பதற்காக வழங்கப்படுகின்ற மானியங்கள் இந்த வகைக்குள் உள்ளடங்குகின்றன. அரச உத்தியோகத்தர் ஒருவரின் வகைப்பொறுப்பு புறக்கணிக்கப்படுதல் சார்பாக கிடைக்கப்படுகின்ற மானியமாகும். இதுகூட ஒருவகையான இலஞ்சமாகும்.

## ஊழலின் அளவு

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஊழலின் வடிவங்களுக்கு மேலதிகமாக ஊழலின் அளவு மற்றும் ஊழல் இடம்பெறுகின்ற இடங்கள் போன்ற விடயங்களையும் கருத்திற்கொண்டு ஊழலுக்கான வகைப்படுத்தலையும் புரிதலையும் பெற்றுக்கொள்ள முடியும். அவற்றுக்கு மத்தியில் பாரியளவிலான ஊழல்கள் மற்றும் சிறிய அளவிலான ஊழல்கள் எனும் வகைப்படுத்தலை ஒரு முக்கியமான வகைப்படுத்தலாகச் சுட்டிக்காட்ட முடியும்.

## பாரியளவிலான ஊழல்கள்

பாரியளவிலான ஊழல்கள் கொள்கைகள் அல்லது அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் இடம்பெறுகின்ற செயற்பாடுகளுக்குள் காணப்படுகின்றன. பாரியளவில் இடம்பெறுகின்ற பொது நிதிக் களவுகள் அல்லது

பொதுச்சொத்துக்களுக்கான துஷ்பிரயோகம், பாரிய அளவிலான கொடுக்கல் வாங்கல்களின்போது இடம்பெறுகின்ற கையூட்டல்கள் அல்லது கமிஷன் பெறப்படுதல் என்பன இதில் உள்ளடங்கும். உயர்மட்ட அரசியல் மற்றும் உத்தியோகத்தர் வகுப்பினருக்குள் இத்தகைய விடயங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பெரும்பாலும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளின் ஊடாகவே இடம்பெறுகின்றன.

மேற்படி நடவடிக்கைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணமும் பெரும்பாலும் வெளிநாட்டுக் கணக்குகளிலேயே வைப்புச் செய்யப்படுகின்றது. இத்தகைய பாரிய அளவிலான ஊழல்களின் மூலம் கிடைக்கப்படுகின்ற அனுகூலங்களின் மூலம் ஆதனங்கள் வெளிநாடுகளிலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. அதேவேளை இவ்வாறான ஊழல்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவதும் மிகவும் சிரமமாகும்.

## சிறிய அளவிலான ஊழல்கள்

அரச நிர்வாகச் செயன்முறையின்போது அரச உத்தியோகத்தர்கள் வழங்குகின்ற சேவையின் பொருட்டு சாதாரண நடத்தையின் ஒரு பகுதியாக எதிர்பார்க்கப்படுகின்ற சன்மானங்கள் (அவாநிறைவுகள்), ஏனைய கொடைகள் இவ்வகைக்குள் உள்ளடங்குகின்றன. தனியாக நோக்கும்போது இவை சிறியதாக காணப்படினும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது பாரியதாக காணப்படுகின்றன.


சிறிய அளவிலான ஊழல் என்பது கீழ் மற்றும் மத்திய மட்டத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களால் அன்றாட நடவடிக்கைகளின் பொருட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரம் தவறாகக் கையாளப்படுவதனைக் குறிக்கின்றது.

ஊழல் எவ்வகையில் இடம்பெறுகின்ற போதிலும் அதில் காணப்படுகின்ற பொதுப் பண்பாக ஓர் அரசாங்க உத்தியோகத்தர் தமது பதவியின் செயற்பாடுகளை தனிப்பட்ட நன்மைகளுக்காக பயன்படுத்துவதாக அமைந்துள்ளது. அதேவேளை அது அபிவிருத்திச் செயன்முறையின் மீதும் பொருளாதாரத்தின் மீதும் பாரதூரமான சேதத்தை ஏற்படுத்துகின்றது.

## 7. ஊழலுக்கான காரணங்கள்

ஒரு நாட்டில் ஊழல் அதிகரிப்பதற்கான காரணங்களையோ அல்லது ஒருவர் ஊழலை நோக்கிச் சாய்வதற்கான காரணங்களையோ வினவும் பட்சத்தில் பெரும்பாலும் சமூகத்திலிருந்து கிடைக்கப்படுகின்ற பதில்களாக குறைந்த சம்பளம், குறைந்த வருமானம், குடும்பப் பிரச்சினைகள் அமைந்திருப்பதைக் காணமுடியும். உண்மையிலேயே அவை ஊழலுக்கான காரணங்கள் அல்ல மாறாக அவை ஊழல் புரிதல் சம்பந்தமாக முன்வைக்கப்படும் சாக்குப் போக்குகளாகும்.

ஊழலுக்கான உண்மையான காரணங்களை இனங்கானவேண்டுமாயின் ஊழல் சம்பந்தமான கிளிட்கார்டின் சமன்பாடு தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்த வேண்டும்.




எந்தவொரு சமூகத்திலும் ஊழலுக்கு இடமளிக்கின்றதான சில பிரதான காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

மேற்படி சூத்திரத்தின் பிரகாரம் ஏகபோக உரிமை மற்றும் தற்றுணிபு அதிகாரம் அதிகளவில்கொண்டு இடம்பெறுகின்ற செயற்பாடுகளும் வகைப்பொறுப்புக் குறைவான செயற்பாடுகளும் ஊழலுக்கான காரணங்களாக இனங்காண முடியும். எமது சமூகத்தில் காணப்படுகின்ற அத்தகைய சில காரணங்களை பின்வரும் வகையில் பட்டியலிட முடியும்.

### 1. வரையறையற்ற அதிகாரம்

தனிநபருக்கு அல்லது ஒரு குழுவினருக்கு ஒரு விடயத்துறையில் எல்லை கடந்த அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அதுதொடர்பாக கேள்வியெழுப்புவதற்கான அதிகாரம் எவருக்கும் இல்லை என்பதன் அடிப்படையில் குறிப்பிட்ட நபர் அல்லது குழுவின் மூலம் ஊழல் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

### 2. வரையறுக்கப்பட்ட வெளிப்படைத்தன்மை

அரசாங்கத்தின் ஒரு செயற்பாடு மக்களுக்கு தெரியாத முறையில் இடம்பெறுமானால் அதனூடாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஊழல்

புரிவதற்கான சூழல் உருவாகும்.

## 3. வரையறுக்கப்பட்ட வகைப்பொறுப்பு

ஓர் அரச நிறுவனம் சமூகத்திற்குப் பொறுப்புக்கூறுவதற்கு கட்டுப்படவில்லை எனில் அதுதொடர்பாக கேள்வி எழுப்புவதற்கான வாய்ப்பு சமூகத்திற்கும் கிடைக்கப்படமாட்டாது. அத்தகைய நிறுவனமொன்றில் ஊழல் இடம்பெறுவதற்கான சிறந்த சூழல் உருவாகும்.

## 4. வரையறுக்கப்பட்ட அரசியல் அர்ப்பணிப்பு.

ஊழலை மறுதலிப்பதற்காக அரசியல்வாதிகளின் அர்ப்பணிப்பு இல்லையெனில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அச்சமின்றி ஊழுலுக்குத் தூண்டப்படுவார்கள். எனவே, ஊழலை மறுதலிப்பதற்காக அரசியல்வாதிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

## 5. தடைகளும் சமன்பாடுகளுக்குமான (குறுக்கிடு கட்டுப்பாடுகள்) செயன்முறையின் வரையறுக்கப்பட்ட தன்மை

நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத் துறை, நீதித்துறை ஆகிய முறைமைகள் ஒன்றை விஞ்சி ஒன்று முன்னிலையாதலைத் தடுப்பதற்கான முறையானது தடைகளும் சமன்பாடுகளும் என அழைக்கப்படுகின்றது. ஒரு அலகின் செயற்பாடுகள் ஏனைய இரு அலகுகளின் மூலம் பரிசோதிக்கப்படுவது இதன்மூலம் கருதப்படுகின்றது.

இதன் மூலம் சட்டத்தின் ஆட்சி வலுவடையும். ஒரு நாட்டில் தடைகளையும் சமன்பாடுகளையும் கொண்டமைந்த முறையானது வீழ்ச்சியடையும் பட்சத்தில் நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நிர்வாக நிறுவனங்களுக்கு இடையிலான பரஸ்பர பரிசோதனை வீழ்ச்சியடையும். அப்போது அந்த நிறுவனங்களும் அவற்றிலுள்ள நபர்களும் மேற்கொள்கின்ற ஊழல்களை மட்டுப்படுத்தக்கூடிய முறையியல் இல்லை என்பதால் அத்தகையதொரு நாட்டில் ஊழல் மலிந்து காணப்படும்.

## 6. பலவீனமான சிவில் சமூகம்

சிவில் சமூகமானது ஒழுங்கமைந்து காணப்படாத பட்சத்தில் மற்றும் அச்சமூகத்தின் அங்கத்தவர்கள் விழிப்பூட்டப்படாதவர்களாகவும் அன்றாட பிரச்சினைகளின்போது கூருணர்வற்றவர்களாகவும் இருப்பார்களாயின் அத்தகையதொரு சிவில் சமூகம் பலவீனமான சிவில் சமூகமாக அழைக்கப்படும். தமக்கு மட்டுமன்றி ஏனையோருக்கு எதிராகவும் இடம்பெறுகின்ற அநீதிகளின்போது அவற்றுக்காக ஒழுங்கமைந்து எதிர்ப்பு தெரிவிப்பது பலமான சிவில் சமூகமொன்றின் பண்பாகும். எனவே பலவீனமான சிவில் சமூகத்தினால் அரச நிறுவனங்களில் இடம்பெறுகின்ற ஊழல்களுக்கு எதிர்ப்பு

தெரிவிக்கப்படுவதில்லை என்பதால் பலவீனமான சிவில் சமூகங்களைக் கொண்ட நாடுகளில் ஊழல் அதிகரிக்கின்றன.

## 7. முறையியல்களுக்கு எதிரான நடத்தைகள் (நடவடிக்கை முறைக்கு எதிரான செயற்பாடுகள்)

ஒரு நாட்டினது அரசாங்கத்தினால் பிரஜைகளுக்கு சேவைகள் வழங்கப்படுகின்றதான முறையொன்று காணப்படுகின்றது. குறிப்பிட்ட முறையானது சட்டத்தின் ஆட்சியின் மீது அமையப்பெற்றுள்ளது. ஒரு குழுவினர் குறிப்பிட்ட முறையைப் புறக்கணித்து அரசிடமிருந்து கிடைக்கப்படவேண்டிய சேவைகளையும் முன்னுரிமைகளையும் தமது நட்பு மற்றும் உறவுமுறை என்பவற்றின் அடிப்படையில் மாற்றுவார்களாயின் அங்கு ஊழல் இடம்பெறும். அத்தகைய நடவடிக்கைமுறைகளுக்கு எதிரான நடத்தைகளை அங்கீகரிக்கின்ற சமூகத்தில் ஊழல் மலிந்து காணப்படும்.

## 8. ஊழலின் விளைவுகள்

ஊழல் என்பது சமூகத்திலிருந்து இல்லாதொழிக்கப்பட வேண்டிய ஒரு புல்லுருவி என்பதை அனைவரும் எதுவித விவாதமுமின்றி ஏற்றுக்கொள்வார்கள். குறிப்பாக, நீதியான பிரஜைகள் யாவரும் ஊழலை எதிர்ப்பது அதன் மூலம் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் நட்டம் ஏற்படுவதனாலல்ல மாறாக அது சமூகத்திற்குப் பாரியளவிலான சேதத்தை ஏற்படுத்துவதனாலாகும்.

ஐக்கிய நாடுகளின் குற்றவியல் மற்றும் போதைப்பொருள் பற்றிய பணியகத்தினால் (UNODC) நடத்தப்படுகின்ற ஊழலுக்கு எதிரான பாடநெறியின் பிரகாரம் ஊழலின் காரணமாக உலகத்திற்கு ஏற்படுகின்ற விளைவுகளை பின்வரும் வகையில் சுருக்கமாக முன்வைக்க முடியும்.

### 1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறைமதிப்பீட்டுக்கு உள்ளாகுதல் - Undermining the Sustainable Development Goals

ஊழல் ஆனது ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SGDs) அடைந்து கொள்வதில் இடையூறுகளை விளைவிக்கின்றது. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஊழலின் மூலம் கீழடக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதன்மூலம் மிகச் சிறந்ததும் நிலைபேறானதுமான எதிர்காலம் பெரும்பாலும் ஒருசிலரின் தேவைகளுக்கு ஏற்ப இடம்பெற முடியும் என்பதோடு பலர் பல்வகைப்பட்ட ஊழல்களினால் துன்பப்பட முடியும்.

### 2. பொருளாதார இழப்பும் வினைத்திறன் இன்மையும் - Economic loss and inefficiency

ஊழலின் காரணமாக பொருளாதார இழப்பு ஏற்படுவது கட்டாயமாகும். ஊழலுக்கான பொருளாதாரக் கிரயம் தொடர்பாக துல்லியமான புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்வது கடினமாக அமைகின்ற போதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2016ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இலஞ்சத்திற்காக மட்டும் வருடமொன்றுக்கு 1.5 - 2க்கு இடைப்பட்ட ட்ரிலியன் அமெரிக்க டொலர் செலவாகுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது உலகளாவிய மொத்தத் தேசிய உற்பத்தியில் அண்ணளவாக 2% மான மொத்தப் பொருளாதார இழப்பினை பிரதிநித்துவம் செய்கின்றது.

## 3. வறுமை மற்றும் சமத்துவமின்மையின் அதிகரிப்பு - Poverty and inequality

ஊழல் எனப்படுகின்ற ஆயுதத்தின் மூலம் ஏழைளுக்கு நன்மை கிடைக்கப்படமாட்டாது. சர்வதேச எரிபொருள் கம்பெனியொன்றாகிய ஷெல் கம்பெனி சம்பந்தமாக நைஜீரியாவில் இடம்பெற்ற பகிரங்க இலஞ்சம் சம்பந்தமான வழக்கொன்றில் வெளியாகிய விடயம் யாதெனில் அந்நாட்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கிலும் அதிகளவான தொகை ஊழல்மிகு உத்தியோகத்தர்களுக்கு ஷெல் கம்பெனி செலுத்தியுள்ளது என்பதாகும். இந்த இலஞ்சத்தின் காரணமாக நைஜீரிய மக்களுக்கு 1.1 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டது (உலகளாவிய சாட்சியாளர்,2017)். ஊழலின் மூலம் மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதோடு ஊழல் நிறைந்த ஒரு சிறிய குழுவினர் வரையறையற்ற வகையில் செல்வந்தர்களாக மாறி சமூகத்தில் பாரிய பொருளாதார சமநிலையின்மையை தோற்றுவிக்கின்றனர்.

## 4. தனிப்பட்ட இழப்புகள், அச்சுறுத்தல்கள் மற்றும் சிரமங்கள் - Personal loss, intimidation and inconvenience

மக்கள் ஊழலை அனுபவிக்கும்போது மிகவும் அரிதாக சாதாகமான அனுபவங்களையும் பெறுகின்றனர். மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதற்காக, கட்டிட அனுமதி பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, நிவாரணம் பெற்றுக்கொள்வதற்காக அல்லது தொலைபேசி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலஞ்சம் செலுத்த வேண்டி உள்ளது. நீதித்துறையானது ஊழல்மயமாகும்போது நீதிபதி வழக்கில் எழுகின்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்புக்கு எதிராக தீர்ப்பளிப்பதில்லை மாறாக எதிராளி இலஞ்சம் வழங்குதல், அதிகாரத் தரகர் ஒருவரை அறிவதனால் அல்லது ஒரே வர்க்கம் அல்லது ஒரே இனப் பின்னணியைக் கொண்டவராக இருத்தல் ஆகிய அடிப்படைகளில் தீர்ப்பளிக்கப்படுகின்றது. இதன்காரணமாக பெரும்பாலானோருக்கு இழப்பு ஏற்படுவதோடு அரசாட்சி நியாயமானதாக அமையாதமையினால் பெரும்பாலானோர் அச்சத்துடனும் சிரமத்துடனும் வாழ வேண்டியுள்ளது.

## 5. அரச மற்றும் தனியார் துறையின் செயல் பிறழ்ச்சி - Public and private sector dysfunctionality

தனித்தனி ஊழல் செயற்பாடுகளின் திரட்டிய தாக்கமானது செயல் பிறழ்ச்சியாகும். ஒரு சேவையானது அரசினால் மேற்கொள்ளப்படுகின்றதோ அல்லது தனியார் துறையினால் கொள்ளப்படுகின்றதோ பொலிசாருக்கு, மருத்துவர்களுக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு இலஞ்சம் வழங்க வேண்டியிருக்கும் பட்சத்தில் அப்பொருட்களினதும் சேவைகளினதும் தரம் குறைவடைவதுடன் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையானது

விலையுயர்ந்த, அதிக காலம் எடுக்கப்படுகின்ற அநீதியான ஒன்றாகவும் மாற்றமடையும்.

## 6. உட்கட்டமைப்பு வசதிகள் பலவீனமடைதல் - Failures in infrastructure

அரசாங்கத்தினால் உட்கட்டமைப்பு வசதிகளின் பொருட்டு செலவு செய்யப்படுகின்ற பணத் தொகை ஊழல் செய்யப்படும்போது அதன் கட்டாய விளைவாக மேற்படி உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் பலவீனமான நிலையில் கட்டியெழுப்பப்படும். 2018 ஆகஸ்ட் மாதம் இத்தாலியில் அமைந்துள்ள துறைமுக நகரமொன்றகிய ஜெனோவாவில் பாலமொன்று இடிந்து விழுந்ததில் சுமார் 39 பேர் மரணித்தனர். இந்தப் பாலம் இடிந்து விழுவதற்கும் ஊழலுக்கும் இடையில் ஒரே தடவையில் தெளிவான தொடர்பு காணப்படாத போதிலும் பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் “மாப்பியா” மூலம் நிர்வகிக்கப்படுகின்ற கட்டிட நிர்மாணக் கம்பெனியொன்று கட்டட நிர்மாணப் பணியின்போது “தரத்தில் குறைந்த சீமேந்து” பயன்படுத்தியிருப்பது வெளியானது. (NZHerald 2018)

## 7. விடுபாட்டுரிமை மற்றும் பக்கச்சார்பான நீதி - Impunity and partial justice

ஊழலானது நீதிமன்ற முறைமை பூராகவும் வியாபித்துள்ள வேளையில் மக்களுக்கு மேற்கொண்டும் தமது கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக வழக்குதொடுநர்கள் மற்றும் நீதிபதிகள் மீது நம்பிக்கைகொள்ள முடியாது. பலம் பொருந்தியவர்கள் நீதியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்புள்ளது. பிரஜைகளுக்கு, குறிப்பாக பணமில்லாத அல்லது நிதி அல்லது அரசியல் ரீதியாக பலம்பொருந்திய நண்பர்கள் இல்லாத நபர்களுக்கு அநீதியான முறையில் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு முறையான வழக்கு விசாரணையின்றி தவறான முறையில் அவர்கள் சிறையில் அடைக்கப்படலாம்.

## 8. தாராண்மையற்ற ஜனரஞ்சகத்தின் எழுச்சி - Rising illiberal populism

2017 ஆம் ஆண்டுக்கான டிரான்ஸ்பேரென்ஸி இன்டர்நேஷனல் அறிக்கையொன்றும் புத்திஜீவிகளின் சில வெளியீடுகளும் அதிகாரம் அதிகரிக்கப்படுவது பகுதியளவில் ஊழலுக்குக் காரணமாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டுகின்றன. சுருக்கமாகக் கூறுவதாயின் ஊழலானது சமத்துவமின்மையை அதிகரிக்கச் செய்கின்றது. பொதுமக்களுக்கான வகைப்பொறுப்பு அரசியல் பதிற்செயற்பாடு காட்டப்படுதல் என்பவற்றைக் குறைக்கின்றது. அதன்மூலம் பிரஜைகளுக்கு மத்தியில் அதிகரித்த வெறுப்புகள் மற்றும் சிரமங்கள்

ஏற்படுத்தப்படுகின்றன.

## 9. ஒழுங்கமைக்கபபட்ட குற்றச்செயல்களும் பயங்கரவாதமும் - Organized crime and terrorism

பணத்தூய்தாக்கல், இரகசியமான மூலங்களினால் கிடைக்கப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் ஊழல்மிகு நீதித்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழல்மிகு அரசியல்வாதிகள் சமூகத்தில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர். அதன் காரணமாக வன்முறை, சட்டவிரோத போதைப்பொருள், விபச்சாரம், பாலியல் அடிமைத்தனம், கடத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் அதிகரிக்கின்றன.

## 10. அரச துறையின் இயலளவு குறைவடைதல் - Diminished state capacity

சிக்கல்களுக்கு தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு பிரஜைகள் தீவிரமாக கோரிக்கை விடுக்கின்றபோதிலும் ஊழல் ஆனது அரசியல் அதிகாரத்தைக் குற்றுயிராக்கின்றது. உதாரணமாக இலஞ்சம், அழுத்த வர்த்தகம், அரச கைப்பற்றல் பரந்த அளவில் வியாபித்திருக்கும் வரை அரசியல் முறைமைகளுக்கு சமூக ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

## 11. துருவமயமாக்கமும் அமைதியின்மையும் அதிகரித்தல் - Increasing polarization and unrest

ஊழல், குறிப்பாக அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்வதானது ஒரு வழக்காறாக அமையும்போது, அது பிரஜைகளுக்கு இடையில் துருவமயமாக்கம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம். ஊழல் நிறைந்த ஆட்சி முறைமைகளுக்கு ஆதரவு நல்குவோரும் குறிப்பிட்ட ஆட்சிக்கு எதிரானவர்களும் என்ற வகையில் சமூகத்தில் பாரிய பிளவு ஏற்படும். குறிப்பிட்ட எதிர்ப்புக் குழுக்களுக்கு மத்தியில் உடன்பாடு மற்றும் தர்க்க ரீதியான கலந்துரையாடல் இடம்பெறமாட்டாது. கொள்கையானது கண்ணோட்டத்தின் அடிப்படையிலோ கருத்திட்டத்திற்கே தனித்துவமான திறன்களின் மீது தீர்மானிக்கப்படமாட்டாது மாறாக கொள்கைகளை முன்மொழிவோர் யார் என்பதும் எதிர்த் தரப்பிடமிருந்து கிடைக்கப்படுகின்ற அனுகூலங்கள் யாவை என்பதும் கருத்திற்கொள்ளப்பட்டு அவை தீர்மானிக்கப்படுகின்றன.

## 12. காலநிலை மாற்றங்களும் உயிரின பல்வகைமைக்கான சேதமும் - Climate change and damage to biodiversity

ஊழலின் காரணமாக சுற்றாடல், வன சீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு சட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு சுற்றாடல் அழிப்புச் செயற்பாடுகள்

மேற்கொள்ளப்படுகின்றன. வனப்பாதுகாப்பு மற்றும் நிலைபேறான வன முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் தோற்கடிக்கப்படுகின்றன. வன சீவராசிகள் மற்றும் கடற்றொழில் குற்றச் செயல்களுக்கு எரிபொருள் வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக ஊழல் ஆனது உலகளாவிய ரீதியில் வானிலை மாற்றங்களுக்கும் உயிரின பல்வகைமை சேதத்திற்கும் நேரடியாக தாக்கம் ஏற்படுத்துகின்றது.

## 13. மனித உரிமை மீறல்கள் - Human rights violations

ஊழலின் காரணமாக தகுதி வாய்ந்தவர்களுக்கு தானாகவே பொருத்தமான இடம் கிடையாமற் செல்கின்றது. நீதி நிலைநிறுத்தப்படுவதில் தடைகள் ஏற்படுகின்றன. அதேவேளை ஊழல் நிறைந்த ஆட்சியாளர்கள் சிவில் சுதந்திரத்தை அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு தடையாகக் கருதுகின்றனர். எனவே ஊழலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளும் ஊழல்மிகு உத்தியோகத்தர்களும் ஒன்றினைந்து மக்களின் மனித உரிமைகளை மீறுகின்றனர்.

## 14. ஆயுத மோதல்களும் கொடூரமான குற்றச் செயல்களும் - Armed conflict and atrocity crimes

ஊழலின் காரணமாக ஏற்பட்டுள்ள அரச இயலளவு மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் குறைவடைதலானது பாதுகாப்பற்ற நிலைமைகளுக்கும் ஆயுத மோதல்களுக்கும் காரணமாக அமையக்கூடும். (உதாரணமாக: உலக வங்கி, 2011, உலக வங்கி, 2017 பார்க்கவும்). உண்மையிலேயே ஊழல் என்பது அரசுகளின் ஸ்திரத்தன்மையை இல்லாதொழிக்கும் ஒரு காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

## 15. மக்களின் வெறுப்பு மற்றும் ஏளிதம் - Public frustration and cynicism

ஊழல் ஆனது பரந்து காணப்படுவதாகவும் ஊழல் செயற்பாட்டாளர்கள் பொறுப்புக்கூற வேண்டியதில்லை எனவும் அறிகின்ற மக்கள், தலைவர்கள், சமூக முறைமைகள் (அரச நிறுவனங்கள்) மற்றும் சில சமயங்களில் சமூக மற்றும் ஒழுக்கநெறிகள் சம்பந்தமாகவும் நம்பிக்கை இழக்கின்றனர். அரசியல் வகைப்பொறுப்பு காணப்படாதபோது, அத்தகைய உணர்வுகள் நீண்ட காலமாக காணப்படுவதுடன் பிரஜைகளின் அரசியல் பங்கேற்பும் வீழ்ச்சியடைகின்றது.

# இரண்டாம் அத்தியாயம்

## ஊழலுக்கு எதிரான சர்வதேசம்

## 9. ஊழலுக்கு எதிரான உலகளாவிய அணிதிரள்வு

### அறிமுகம்

“களவாடி உழைக்கும் பணத்திற்கு சக்கரங்கள் இருப்பதோடு ஊழலின் மூலம் உழைக்கும் பணத்திற்கு சிறகுகள் உள்ளன.” எனக்கூறும் வாய்வழி மரபொன்றுள்ளது. ஊழலின் மூலம் ஒரு நாட்டில் ஈட்டப்படுகின்ற பணம் பிறிதொரு நாட்டில் முதலீடு செய்யப்படுகின்றது என்பது அதன் பொருளாகும். அதேவேளை, ஊழல் என்பது உலகின் சகல நாடுகளுக்குமான புல்லுருவியாக அமைந்துள்ள ஒரு விடயமாகும். அதேவேளை, ஒரு நாட்டிற்கான ஊழலின் தாக்கமானது ஒரு நாட்டுக்கு மட்டுமன்றி பல நாடுகளுக்கு தாக்கம் ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக ஊழலுக்கு எதிராக சர்வதேச அணிதிரள்வு காணப்படுகின்றது. சர்வதேசமானது ஊழலை மறுதலிப்பதற்காக மேற்கொண்டுள்ள சில முயற்சிகளை விபரிப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான செயற்பாடு

ஊழலை இல்லாதொழிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அமைப்பு அளப்பரிய பணியை நிறைவேற்றி வருகின்றது. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள பெருமளவிலான மனித உரிமைகள் பற்றிய ஆவணங்களில் ஊழலை மறுதலிப்பதற்காக ஆதரவளிக்கும் பல ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றைத்தவிர ஊழலை மறுதலிப்பதற்காக தனியானதொரு சர்வதேச சமவாயம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேவேளை ஊழலை மறுதலிப்பதற்காக தனியான முகவராலயமொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சர்வதேச சமவாயம் (UN-UNCAC)

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2003 செப்டெம்பர் 29ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இச்சமவாயத்தின் பிரதான நோக்கம் உலகம் பூராகவும் இடம்பெற்றுவருகின்ற ஊழலை இல்லாதொழிப்பதாகும். அதற்காக உறுப்பு நாடுகள் உரிய சட்ட ஏற்பாடுகளை வகுத்தல் மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக சர்வதேச ரீதியில் ஆதரவு வழங்குவதற்கான பொறுப்பு உறுப்பு நாடுகளுக்குச் சாட்டப்படுதல் இந்த சமவாயத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சர்வதேச ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்கு மேலதிகமாக ஊழலுக்கு எதிரான சர்வதேச சட்டரீதியான சாதனமொன்றுக்கான தேவை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2002 ஆம் ஆண்டின் 55/61 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் 2002 ஜனவரி மாதம் தொடக்கம் 2003 அக்டோபர் மாதம் வரை ஏழு அமர்வுகளில் கலந்துரையாடப்பட்டு 2003 டிசெம்பர் 09 ஆம் திகதி அரசுகளால் ஒப்பமிடப்பட்டன. ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 09 ஆம் திகதி சர்வதேச ஊழலுக்கு எதிரான தினமாக பெயரிடப்பட்டிருப்பது இச் சமவாயம் ஒப்பமிடப்பட்ட திகதியை நினைவு கூறுவதற்காகவாகும். அதன் பிரகாரம் சமவாயமானது 2005 டிசெம்பர் 14ஆம் தேதி தொடக்கம் அமுலுக்கு வந்தது. இதுவரை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் 181 உட்பட 186 தரப்புகள் இச்சமவாயத்தின் தரப்பினர்களாக அமைந்துள்ளன. ஐக்கிய நாடுகளின் 12 உறுப்பு நாடுகள் இதுவரை இச்சமவாயத்தினை ஏற்று உறுதிப்படுத்தவில்லை.

இலங்கையானது ஆரம்பத்திலேயே இச்சமவாயத்தில் ஒப்பமிட்ட ஓர் அரசாகும்.

சமவாயத்தில் பிரதான பணிகள் 3 காணப்படுகின்றன. அவையாவன,

i. வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுள்ள வகையிலும் ஊழலைத் தடுப்பதற்கும் ஒடுக்குவதற்குமான நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.
ii. சொத்துக்களை மீளப்பெறுதல் உட்பட ஊழலைத் தடுக்கும்போதும் அதற்கு எதிராக செயல்படும்போதும் சர்வதேச ஆதரவு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் உதவி வழங்குதல்.
iii. அரச நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொதுச் சொத்துக்கள் தொடர்பாகவும் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல்.

# ஊழலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் உள்ளடக்கம்

## 1. பொது ஏற்பாடுகள்

சமவாயத்தின் செயற்பொறுப்பு விபரிக்கப்படுதல், சமவாயத்தின் விடயப்பரப்பு மற்றும் சமவாயத்திற்கு ஒப்புதலிளிக்கும் அரசுகளின் இறைமை பாதுகாக்கப்படுதல் பற்றிய ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடக்கியுள்ளன. ஊழலுக்கு எதிரான கொள்கைகள் மற்றும் நடைமுறை வழக்கங்கள் வகுக்கப்படுதல், ஊழலுக்கு எதிரான நிறுவனங்களை உருவாக்குதல், அரச உத்தியோகத்தர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவைகளை அறிமுகம் செய்தல், அரச கொள்முதல் மற்றும் அரச நிதி முகாமைத்துவம் என்பவற்றை முறைசார்படுத்துதல், பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல், வழக்குத் தொடுத்தல் பற்றிய நடவடிக்கைகளை முறைசார்படுத்துதல், பணத்தூய்தாக்கலைத் தடுத்தல், ஊழல்களைத் தடுப்பதற்காக தனியார் துறையினதும் சிவில் சமூகத்தினதும் ஆதரவினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்காக உறுப்பு நாடுகள் பின்பற்றவேண்டிய நடவடிக்கைமுறைகள் தொடர்பாக இப்பகுதியின் மூலம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2. தடுப்பு நடவடிக்கைகள்

ஊழலைத் தடுப்பதற்காக உறுப்பு நாடுகள் பின்பற்றுவதற்குக் கட்டுப்படுகின்ற நடவடிக்கைகள் இப்பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

## 3. குற்றச்செயல்களும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதலும்

உறுப்பு நாடுகள் தமது அரசுகளில் ஊழலை மறுதலிப்பதற்காக தமது சட்ட முறைமைகளுக்குள் குற்றவியல் தவறுகளாக அறிமுகப்படுத்த வேண்டிய குற்றவியல் தவறுகள் பற்றிய விபரமும், அக்குற்றங்களுக்குரியதாக விசாரணைகளை மேற்கொள்ளும்போதும் வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்தும்போதும் பின்பற்ற வேண்டிய நடைமுறை வழக்கங்கள் தொடர்பான ஏற்பாடுகளும் இப்பகுதியில் உள்ளடங்கியுள்ளன. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விசேட விடயம் யாதெனில் தனியார் துறையில் இடம்பெறுகின்ற இலஞ்சமும் குற்றவியல் தவறாக சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதாகும்.

## 4. சர்வதேச ஒத்துழைப்பு

ஊழலை இல்லாதொழிப்பதற்காக உறுப்பு நாடுகள் ஏனைய உறுப்பு நாடொன்றின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளல், குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்வதற்காக தகவல்களை பரிமாறிக் கொள்ளல், ஒருங்கிணைந்த புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், சந்தேக நபர்களை நாடு கடத்துதல், பரஸ்பர சட்ட உதவிகள், குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை மாற்றுதல், சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஒத்துழைப்பினைப்

பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

### 5. சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ளல்

ஊழல் செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை மீண்டும் அரசுக்குச் சுவீகரித்துக்கொள்வது தொடர்பில் உறுப்பு நாடுகள் பின்பற்ற வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கை முறைகள் தொடர்பான ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஊழல் செயற்பாடுகளின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் வெளிநாடுகளில் அமைந்துள்ள வேளையில் அச்சொத்துக்களை அரசுடமையாக்கும்போது வெளிநாட்டு அரசுகளின் உதவியினைப் பெற்றுக்கொள்வது பற்றிய ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 6. தொழில்நுட்ப ஆதரவு மற்றும் தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படுதல்

ஊழலை மறுதலிப்பதற்காக தேவைப்படுகின்ற தகவல்களை அங்கத்துவ அரசுகளுக்கு மத்தியில் பரிமாறிக்கொள்ளல் மற்றும் ஊழலை மறுதலித்தல் சம்பந்தமான பயிற்சிகள் மற்றும் முறையியல்கள், அனுபவங்கள் தொழில்நுட்பச் சேவைகள் பரிமாறிக்கொள்ளப்படுவது தொடர்பான ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

### 7. நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை

இச்சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உறுப்பு நாடுகளுக்கான மாநாடொன்று தாபிக்கப்பட்டுள்ளதோடு அந்த மாநாட்டின் மூலம் சமவாயம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விதம் பற்றிய ஏற்பாடுகள் இப்பகுதியில் உள்ளடங்கியுள்ளன.

### 8. இறுதி ஏற்பாடுகள்

சமவாயத்தில் இணைதல், உறுப்பு நாடுகளுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்த்தல், சமவாயம் வலுவுக்கு வருதல் மற்றும் சமவாயத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் போன்ற ஏற்பாடுகள் இப்பகுதிகள் உள்ளடங்கியுள்ளன.

## போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (UNODC)

1997ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் கட்டுப்பாடு மற்றும் குற்றச்செயல்கள் தடுப்பு அலுவலகம் 2002 ஆம் ஆண்டு போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் அலுவலகமாக பெயரிடப்பட்டது.

ஊழல் தடுப்புத் தொடர்பில் உத்தியோகபூர்வமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் முகவராலயம் மேற்படி போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய அலுவலகமாகும். சட்டவிரோத வியாபாரங்கள் மற்றும் போதைப்பொருள் தவறான முறையில் பயன்படுத்தப்படுதல், குற்றச்செயல்களைத் தடுத்தல் மற்றும் குற்றவியல் நீதி, சர்வதேச பயங்கரவாதம் மற்றும் அரசியல் ஊழல் பற்றிய இடைத் தொடர்பு பிரச்சினைகளுடன் மிகவும் சிறப்பாக இணைப்பாக்கம் செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்கு ஆதரவளிப்பதற்காக UNODC தாபிக்கப்பட்டது. குறிப்பிட்ட நோக்கங்கள் மூன்று அடிப்படை பணிகளின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளப்படுகின்றன: அவையாவன, **பல்வேறுபட்ட குற்றச்செயல்கள்**, போதைப்பொருள், **பயங்கரவாதம்** மற்றும் ஊழல் சம்பந்தமான சமவாயங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வரைவுடன்பாடுகள் (ப்ரொட்டோகோல்கள்) மட்டுமன்றி தொழில்நுட்ப/நிதி ரீதியான உதவிகளும் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது அரசுகளுக்கு ஆய்வுகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் ஆதரவளிப்பது என்பனவாகும்.

போதைப்பொருள், குற்றச்செயல்கள், பயங்கரவாதம் மற்றும் ஊழல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசுகளை மிகவும் சிறந்த முறையில் தயார்படுத்துதல், அரச நிறுவனங்களுக்கு மத்தியில் இந்த விடயங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துதல் மற்றும் பொதுமக்களை இந்த விடயங்கள் தொடர்பாக சிறந்த முறையில் விழிப்பூட்டுதல் அலுவலகத்தின் நோக்கமாகும்.

அதேவேளை இந்த அலுவலகமானது ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் அரச தரப்புகளின் மாநாட்டின் (Conference of the States Parties (CoSP) to the UNCAC) செயலகமாகவும் தொழிற்படுகின்றது. ஊழலுக்கு எதிரான இணைவழி பாடநெறிகளையும் நெறிப்படுத்துகின்றது.

## ட்ரான்ஸ்பேரென்ஸி இன்டர்நே'னல் நிறுவனம் - Transparency International-TI

இது ஊழலுக்கு எதிராக முன்னணியிலிருந்து செயற்படுகின்ற ஒரு அரச சார்பற்ற அமைப்பாகும். ஏக நோக்கினைப் பகிர்ந்துகொள்ளும் உலகலாவிய இயக்கமாக இதனை அழைக்க முடியும். இதன் நோக்கானது அரசாங்கம், தொழில் முயற்சி, சிவில் சமூகம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கை என்பவற்றை ஊழலற்ற உலகமாக மாற்றியமைப்பதாகும்.

1993ஆம் ஆண்டில் ஒருசில நபர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கமானது இன்றளவில் 100கும் மேற்பட்ட நாடுகளில் வியாபித்துள்ளது.

## ஊழல் புலப்பாட்டுச் சுட்டி - Corruption Perception Index-CPI

இது ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனத்தினால் 1995 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற ஒரு சுட்டியாகும். நாடுகள்

தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலம் ஊழல்களின் பிரகாரம் நாடுகள் தரவரிசைபடுத்தப்படுவது இச்சுட்டியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சுட்டியைத் தயாரிப்பதன் பொருட்டு ஊழலாக கருதப்படுவது “மக்களின் (பொது) அதிகாரத்தை தனிப்பட்ட நலன்களுக்காக தவறாகப் பயன்படுத்துதல்” என்பதாகும்.

இச்சுட்டியைத் தயாரிப்பதற்காக அரச துறையின் ஊழல் மட்டம் தொடர்பாக தொழில் முயற்சியாளர்களினதும் நாட்டில் இருக்கக்கூடிய நிபுணர்களினதும் கருத்துக்கள் ஒன்றுடனொன்று வேறுபட்ட சில நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

2020 சனவரி மாதம் வெளியிடப்பட்ட 2019 ஊழல் புலப்பாட்டுச் சுட்டியில் 180 நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு 100 புள்ளிகள் (மிகவும் தூய) தொடக்கம் 0 புள்ளி (மிகவும் ஊழல் நிறைந்த) வரை தரவரிசை மேற்கொள்ளப்பட்டள்ளது. டென்மார்க் (88 புள்ளிகள்), நியூசிலாந்து (87 புள்ளிகள்) மற்றும் பின்லாந்து என்பன உலகில் ஊழல் மிகவும் குறைவான நாடுகளாக கருதப்படுவதோடு அந்த நாடுகள் சர்வதேச நிதி வெளிப்படைத்தன்மையில் தொடர்ச்சியாக முதன்மை வகிக்கின்றன. உலகில் அதிக ஊழல் நிறைந்த நாடாக சோமாலியா காணப்படுவதோடு அந்நாடு பெற்றுள்ள புள்ளிகளின் எண்ணிக்கை 10 ஆகும்.

இலங்கையானது 38 புள்ளிகளைப்பெற்று 180 நாடுகளுக்கு மத்தியில் என்பத்தொன்பதாம் (89) இடத்தினைப் பெற்றுள்ளது. தெற்காசிய நாடுகளுக்கு மத்தியில் மூன்றாம் (03) இடத்தினை இலங்கை பெற்றிருப்பினும் அது முறையாக உலகில் இருபத்தைந்தாம் (25) மற்றும் எழுபத்தி எட்டாம் (78) இடங்களைப் பெற்றுள்ள பூட்டான் மற்றும் இந்தியாவிற்கு பின்னால் அமைந்துள்ளது.

ட்ரன்ஸ்பேரென்ஸி இன்டர்நேஷனல் நிறுவனம் சுட்டிக்காட்டும் வகையில் ஒரு நாட்டில் காணப்படுகின்ற ஊழலின் மட்டத்திற்கும் அந்த நாடு எவ்வளவுதூ ரம் ஜனநாயகம் கொண்டது என்பதற்கும் இடையில் தொடர்பு காணப்படுகின்றது. அந்நிறுவனம் சுட்டிக்காட்டும் வகையில் முழுமையான ஜனநாயக நாடுகள் ஊழல் புலப்பாட்டுச் சுட்டியில் பெறுகின்ற சராசரி 75 என்பதோடு பலவீனமான ஜனநாயக நாடுகள் பெற்றுக்கொள்ளும் சராசரி 45 ஆகும். சனநாயக நாடுகள் என்றபோதிலும் சர்வாதிகாரப் போக்குகளுடன்கூடிய கலப்பின அரசுகளின் சராசரி 35 என்பதோடு ஆகக்குறைந்த சராசரியுடன் மிகவும் மோசமான மட்டத்தில் சர்வாதிகார ஆட்சியுடன் கூடிய நாடுகள் அமைந்துள்ளன. அந்த நாடுகளின் சராசரி 30ஆக காட்டப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் பகுப்பாய்வின் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்ற வகையில் இலங்கையானது பலவீனமான ஜனநாயகமும் ஜனநாயக நாடு என்றபோதிலும் சர்வாதிகார போக்குகளைக் காட்டுகின்ற கலப்பின ஆட்சி முறையைக் கொண்டுள்ளதுமான நாடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளது.

ஊழலை மறுதலித்து ஜனநாயகத்தை உண்மையாக உறுதிப்படுத்துவதன் பொருட்டு ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனமானது சகல அரசுகளிடமும் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றது.

- அரசியல் அதிகாரத்தினைக் கட்டுப்படுத்தி சமப்படுத்துவதற்கான (தடைகளும் சமன்பாடுகளும்) பொறுப்பின் நிமித்தம் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களையும் வலுப்படுத்தி அவை அழுத்தங்களும் தடைகளும் இன்றி இயங்குவதனை உறுதிப்படுத்துதல்.
- ஊழலுக்கு எதிரான சட்டங்கள் மற்றும் அவை செயற்பாட்டு ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுதல் என்பவற்றுக்கிடையில் காணப்படுகின்ற இடைவெளியை இல்லாதொழித்தல்.
- அரசியல் செயற்பாடுகள் மற்றும் அரச செலவினங்கள் தொடர்பாக உள்நாட்டு ரீதியில் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சிவில் அமைப்புகளை வலுவூட்டுதல்.
- ஊடக நிறுவனங்களின் சுயாதீன இருப்புக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊடகவியலாளர்கள் அச்சமின்றியும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகாமலும் செய்திகளை வெளியிடக்கூடிய சூழலை உறுதிப்படுத்துதல்.

## உலகளாவிய ஊழல் பற்றிய பாரோமீட்டர் - Global corruption Barometer - GCB

உலகலாவிய ஊழல் பாரோமீட்டர் ஆனது உலகில் காணப்படுகின்ற மிகப்பெரிய மக்கள் கருத்துக் கணிப்பாக அழைக்கப்படுகின்றது. ஊழலுக்கு எதிரான உலகின் மிகப்பெரிய இயக்கமாகிய ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நெறிப்படுத்தலில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அதுவொரு வாக்கெடுப்பினைப் போன்றதாகும். ஊழல் ஆனது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தனி நபர்கள் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாகவும் உலகம் முழுவதிலும் ஊழலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாகவுமான நிலமட்ட கருத்துகள் யாவை என்பதனை அறிந்து கொள்வதற்காக அது சுட்டிகளை வழங்குகின்றது. ஒரு நாட்டில் காணப்படுகின்ற ஊழலின் பல்வேறுபட்ட வடிவங்கள் மற்றும் ஊழலின் போக்குகள் தொடர்பாக இந்த பாரோமீட்டரின் மூலம் புரிதலைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

## திறந்த அரசாட்சிக் கூட்டு - OGP

திறந்த அரசாட்கிக் கூட்டானது 2011 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கக் குடியரசினால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நோக்கமாக அமைந்தது யாதெனில், உள்நாட்டு அரசாட்சி மறுசீரமைப்பு செயற்பாட்டாளர்களுக்கு தமது அரசாங்கங்களை மிகவும் வெளிப்படையாகவும், வகைப் பொறுப்புடனும், பொதுமக்களுக்கு பதிற்செயற்பாடு காட்டும் வகையில் மேற்கொள்வதற்குத்

தேவையான சர்வதேச மேடையை உருவாக்குவதாகும். ஆரம்பத்தில் இக்கூட்டுடன் 8 நாடுகள் சம்பந்தப்பட்டதோடு தற்போது 65 நாடுகள் அதன் பங்காளர்களாக செயற்படுகின்றன. அதேவேளை, உலகம் பூராகவும் பரவியுள்ள சுமார் 90 தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளும் அதன் அங்கத்தவர்களாக செயல்முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. மேற்படி சகல நாடுகளுக்குமான அரசாங்கங்களும் சிவில் அமைப்புகளும் ஒன்றிணைந்து திறந்த அரசாட்சி மறுசீரமைப்புகளை வகுத்து நடைமுறைப்படுத்துகின்றன. இக்கூட்டுக்கான புதிய பங்காளியாக இலங்கை அமைந்துள்ளது.

## தகைமை பெறுவதற்கான அளவுகோல்கள்

ஒரு நாட்டுக்கான அரசு நிதிசார் வெளிப்படைத்தன்மை, தகவலுக்கான பிரவேசம், வருமானம் மற்றும் சொத்துக்கள் வெளிப்படுத்தப்படுதல் மற்றும் பிரஜைகளுக்கான பங்கேற்பு ஆகிய நான்கு துறைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் மட்டுமே திறந்த அரசாட்சிக் கூட்டில் அங்கத்துவம் பெறுவதற்கான அடிப்படை தகைமையைப் பெற்றுக்கொள்ளும். அதன் பிரகாரம் மேற்படி ஒவ்வொரு அம்சங்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படுவதோடு இலங்கை தற்போது 16 மொத்தப் புள்ளிகளில் 14 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

## கூட்டு அரசாங்கங்களின் பொறுப்பு

இக்கூட்டில் அங்கத்துவம் பெறுகின்ற சகல அரசுகளும் தகைமை பெறுவதற்கான அளவுகோல்களை அடைதல், திறந்த அரசாட்சிக்கான பிரகடனத்தைத் தழுவுதல், மக்கள் சொல்லாடலின் மூலம் தயாரிக்கப்படுகின்ற திறந்த அரசாட்சி மறுசீரமைப்புகளுடன்கூடிய தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை முன்வைத்தல் மற்றும் தமது முன்னேற்றத்தை சுயாதீனமாக அறிக்கையிடுதல் வேண்டும்.

## திறந்த அரசாட்சிப் பிரகடனம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனம், ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயம் மற்றும் மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சிக்கான ஐக்கிய நாடுகளின் ஏனைய சாதனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடையங்களை ஏற்றுக்கொண்டு சகல பொதுமக்களுக்கும் திறந்த அரசாட்சியை கோருவதற்கான உரிமை இப்பிரகடனத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதேவேளை, பல்வேறுபட்ட அரசுகள் திறந்த அரசாட்சியின் பல்வேறுபட்ட படிமுறைகளில் இருப்பதும் இனங்காணப்பட்டுள்ளன. அதேவேளை இப்பிரகடனத்தின் மூலம் வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்படுதல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல், பிரஜைகளை வலுவூட்டுதல், அரசாங்கம் மிகவும் பயனுள்ளதாகவும் வகைப்பொறுப்புடனும் இருப்பதற்காக புதிய தொழில்நுட்பத்தை தழுவு வேண்டுமென்பது சகல அரசுகளாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அதேவேளை அரசாட்சியின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு

வாக்குறுதியளிப்பதுடன் அரசாங்கத்தின் செயற்பாடு பற்றிய தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதை மேம்படுத்துவதற்கும், சிவில் பங்கேற்புக்கு ஆதரவளிப்பதற்கும், நிர்வாகத் துறையில் மேல்மட்ட தொழில்சார் நேர்மைத்திறனை பேணிச் செல்வதற்கும், வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கும், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கும் வாக்குறுதியளிக்கின்றது.

## திறந்த அரசாட்சிக்கான கோட்பாடுகள்

திறந்த அரசாட்சிக் கூட்டினால் 4 திறந்த அரசாட்சிக் கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவன,

- வெளிப்படைத் தன்மை
- வகைப் பொறுப்பு
- பிரஜைகளின் பங்கேற்பு
- தொழில்நுட்பமும் புத்தாக்கமும்

## திறந்த அரசாட்சிக் கூட்டும் இலங்கையும்

அரச வகைபொறுப்பினை வலுவூட்டுவதற்காகவும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக மேற்படி அமைப்பில் உறுப்புரிமையை பெறுவதற்கான கோரிக்கையொன்று 2015 அக்டோபர் 21ஆம் திகதி நீதி அமைச்சரால் திறந்த அரசாட்சிக் கூட்டின் இணைத் தலைவர்களிடம் விடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கைக்கு அதில் உறுப்புரிமை கிடைத்ததோடு தெற்காசிய வலயத்தில் அதன் உறுப்புரிமையை பெற்ற ஒரே நாடு இலங்கையாகும்.

## மக்கள் செயற்பாட்டுத் திட்டம்

திறந்த அரசாட்சிக் கூட்டினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையானது முதற்தடவையாக 2016 - 2018 ஆண்டுகளுக்காக முதலாவது தேசியத் திட்டத்தைத் தயாரித்ததோடு இரண்டாவது தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 - 2021 ஆம் ஆண்டுகளுக்காக தற்போது தயாரித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அதில் 15 கடப்பாடுகள் உள்ளதோடு அதன் இலக்கம் 01 இல் “அரச நிறுவனங்களில் நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக பிரஜைகளின் பங்கேற்பினை மேம்படுத்துதல்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடப்பாடு இலக்கம் 2 ஆக “சொத்துக்களுக்கான பிரகடன முறையியல் வினைத்திறன்மிக்கதாக உருவாக்கப்படுவதன் மூலம் சொத்துக்களுக்கான பிரகடனங்கள் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் மற்றும் மக்கள் அனுகுமுறையை வசதிபடுத்துதல்” என்பது அமைந்துள்ளது. இவ்விரு கடப்பாடுகளும் நேரடியாகவே ஊழலைத் தடுப்பதற்கான செயற்பாடுகளாகும்.

## நிலைபேறான அபிவிருத்திக்கான குறிக்கோள்கள் - Sustainable Development Goals-SDG

வறுமையை மறுதலித்தல், புவியைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் சௌபாக்கியத்தை ஏற்படுத்துதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலின் ஒரு அம்சமாக ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் 2015 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்திக்கான குறிக்கோல்கள் வெளியிடப்பட்டன.

நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரல் "எமது உலகத்தினை வேறு பாதையில் ஆற்றுப்படுத்துதல்" எனும் பிரகடனத்தின் மூலம் 17 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோல்களை அறிமுகப்படுத்தியுள்ளன. அக்குறிக்கோல்களை நிறைவேற்றிக்கொளவதற்காக 169 இலக்குகளும், அந்த இலக்குகள் அடையப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக 244 அளவுகோல்களும் தற்போது இனங்காணப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற 16வது குறிக்கோளாக "நிலைபேறான அபிவிருத்தியின் பொருட்டு அமைதியானதும் அனைத்தும் உள்ளடங்கியதுமான சமூகங்களை மேம்படுத்துதல், சகலருக்கும் நீதிக்கான பிரதேசத்தினைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சகல மட்டங்களிலும் பயனுள்ள வகைபொறுப்பு உள்ளடங்கிய நிறுவனங்களை உருவாக்குதல்" என்பது அமைந்துள்ளது. இந்த குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கான 5வது இலக்காக "சகலவிதமான இலஞ்சம் மற்றும் ஊழலை கணிசமான அளவில் குறைத்தல்" என்பது அமைந்துள்ளது.

மேற்படி இலக்கு அடையப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்காக இரண்டு அளவுகோல்கள் காணப்படுகின்றன. அவையாவன,

- கடந்த 12 மாத காலப்பகுதியில் அரச உத்தியோகத்தர் ஒருவருடன் ஆகக்குறைந்தது ஒரு தொடர்பு அல்லது அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கப்பட்ட அல்லது இலஞ்சம் கோரப்பட்ட நபர்களின் விகிதம்.
- கடந்த 12 மாத காலப்பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருடன் ஆகக்குறைந்தது ஒரு தொடர்பு அல்லது அரச உத்தியோகத்தருக்கு இலஞ்சம் வழங்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கோரிய வியாபாரங்களின் விகிதம்.

இச்சட்ட திட்டங்கள் மற்றும் சமவாயங்கள் மூலம் மட்டுமன்றி ஒத்துழைப்பு வழங்குகின்ற நிறுவன கட்டமைப்பொன்றும் ஊழலுக்கு எதிராக அணிதிரண்டுள்ளது.

# 10. ஊழலைத் தோற்கடித்த – ஹொங்காங் தேசம்

## ஹொங்காங் நாட்டில் இடம்பெற்ற ஊழல்

ஹொங்காங்கில் 1960 மற்றும் 70 ஆம் தசாப்பதங்களில் சடுதியான மாற்றம் இடம்பெற்றது. மக்கள் தொகையின் பாரிய அதிகரிப்பும் உற்பத்திக் கைத்தொழிலின் துரிதமான விஸ்தரிப்பும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தைத் துரிதப்படுத்தின. சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதுடன் வீடமைப்பு மற்றும் ஏனைய சேவைகளின் அத்தியாவசியத் தேவைகளை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியவில்லை. இச்சூழ்நிலையானது கொள்கைப்பிடிப்பு இல்லாத ஊழலாளர்களுக்கு செழிப்பிடமாக அமைந்தது. அடிப்படை சேவைகள் மட்டுமன்றி வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பினையும் பெற்றுக்கொள்வதற்காக பலருக்கு உரிய முறையியல்களுக்கு அப்பால் சென்று அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கி தமது அலுவல்களை நிறைவேற்றிகொள்ள வேண்டி ஏற்பட்டது.

அரச துறையில் ஊழல் மலிந்து காணப்பட்டது. நோயாளியை ஏற்றிச் செல்வதற்கு முன்னர் பிணி வண்டி ஊழியர்கள் இலஞ்சம் கோரினர். மருத்துவமனை ஊழியர்களும் படுக்கை விரிப்புகளை அல்லது தண்ணீர்க் குவளைகளை வழங்குவதற்கு முன்னர் இலஞ்சம் கோரினர். பொது வீடமைப்பு, பாடசாலைக் கல்வி மற்றும் ஏனைய பொதுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. விசேடமாக பொலீஸ் படையினருக்குள் ஊழல் பாராதுாரமாகக் காணப்பட்டது. ஊழல்மிகு பொலீஸ் அதிகாரிகள் சூதாட்டம் மற்றும் போதைப் பொருள் செயற்பாடுகளுக்கு பாதுகாப்பு வழங்கினர். சட்டமும் ஒழுங்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. பல பிரஜைகள் ஊழலுக்கு இரையாகியிருந்தனர். இருப்பினும், அவர்கள் கோபத்தினைக் கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்ந்தனர்.

ஊழலானது ஹொங்காங் தேசத்தில் பாரிய சமூகப் பிரச்சினையாக மாறியிருந்த போதிலும் அப்போதைய அரசாங்கத்திற்கு அது தொடர்பாக

செயற்படுவதற்கு அதிகாரம் இருக்கவில்லை எனத் தெரிந்தது. மக்கள் பொறுமையை இழந்து வந்ததோடு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் கொண்டுள்ள பயனற்ற முயற்சிகள் தொடர்பாக மக்கள் அதிகளவில் ஆத்திரம்கொள்ளத் தொடங்கினர்.

## பீற்றர் கொட்பர் சம்பவம்

1973 ஆம் ஆண்டு ஹொங்காங்கின் பிரதான பொலீஸ் அத்தியட்சகராகிய பீற்றர் கொட்பருக்கு (Peter Godber) எதிராக ஒரு புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது. 4.3 ஹாங்காங் டொலர் மில்லியன்கள் பெறுமதியான சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதே குற்றச்சாட்டாக அமைந்திருந்தது. அவர் பாரிய ஊழல் செயற்பாடுகளின் மூலம் மேற்படி சொத்துக்களை ஈட்டியுள்ளார் என்பது வெளிப்பட்டு வந்தபோது கொட்பர் நாட்டைவிட்டு தப்பிச் சென்றார். அதற்காக அரசாங்கம் வழியமைத்துக்கொடுத்தாக மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குறிப்பிட்ட செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் பாரியளவில் அணி திரண்டனர். விக்டோரியா பூங்காவில் இடம்பெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் முன்னணி வகித்ததோடு ஊழல் சம்பந்தமான பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளமை தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் அரசாங்கத்தைக் கண்டித்தனர். அரசாங்கம் இதுதொடர்பில் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். “ஊழலை எதிர்த்துப் போராடு, கொட்பரைக் கைது செய்” எனும் முழக்கங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் வழக்கு விசாரணையில் ஆஜர்படுத்துவதற்காக கொட்பரை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்குமாறு வலியுறுத்தினர்.

## அலெஸ்டெயார் புலனாய்வு

அதிகரித்துவரும் மக்கள் எதிர்பார்ப்பாட்டங்களுக்கு பதிற்செயற்பாடு காட்டும் வகையில் அரசாங்கத்திற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. 1973 யூன் 8 ஆம் திகதி கொட்பர் தப்பிச் சென்றதன் பின்னர் அவரின் தப்பிச் செல்லல் தொடர்பாக புலனாய்வு செய்யும் பொருட்டு புலனாய்வு ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்காக மூத்த நீதிபதியொருவராகிய சேர் அலெஸ்டெயார் ப்ளேயார் - கெர் (Sir Alastair Blair-Kerr) நியமிக்கப்பட்டார். அவர் இரண்டு அறிக்கைகளைத் தயாரித்தார். முதலாவது அறிக்கையானது கொட்பரின் தப்பிச் செல்லல் பற்றிய விபரங்களை வழங்கியது.

தமது இரண்டாவது அறிக்கையின் மூலம் சேர் அலெஸ்டெயார் ஊழலைத் தடுப்பதற்காக சுயாதீன நிறுவனமொன்றின் தேவை தொடர்பாக சுட்டிக்காட்டிக்காட்டினார். “ஊழலுக்கு எதிரான அலுவலகம் பொலீசாரிடமிருந்து அகற்றப்படாத பட்சத்தில் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு அரசாங்கம் உண்மையாகவே கருதுகின்றதென பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் சாதாரணமாக உணரமாட்டா.” எனவும் அவர் தமது அறிக்கையில் மேலதிகமாகவும்

குறிப்பிட்டியிருந்தார்.

## ICAC இன் உதயம்

ப்ளேயார் அறிக்கையின் பிரகாரம் அப்போதயை ஆளுநர் சேர் மரே மெக்லெஹோஸ் (Sir Murray MacLehose) 1973 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சுயாதீன ஊழல் எதிர்ப்பு நிறுவனமொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கினார்.

அரசாங்கத்தின் பலர் மாற்றமடைய வேண்டுமென உணர்ந்தனர். பயனுள்ள ஊழல் எதிர்ப்புப் பொறிமுறையொன்றின் உதயத்திற்காக அரசாங்கம் மேடைய அமைத்தது.

## ஊழலுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழு (ICAC)

ஊழலுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழு 1974 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் நிறுவப்பட்டது. ஆணைக்குழுவின் ஆரம்பத்திலிருந்து சட்டத்தை அமுல்நடாத்துதல், தடுத்தல் மற்றும் கல்வி ஆகிய மூவகை அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு அது அர்ப்பணிப்புப் பூண்டுள்ளது. கொட்பரை சட்டத்தின் முன் நிறுத்துவது ஐஊயுஊ யின் முதலாவது முக்கியமான பணியாக அமைந்தது. வழக்கு விசாரணைக்காக 1975 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலப்பகுதியில் கொட்பர் இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்டார். சூழ்ச்சி மற்றும் இலஞ்சம் பெறுதல் என்பன அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளாக காணப்பட்டன. கொட்பர் மேற்படி இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியாக்கப்பட்டதோடு ஏழு வருடகால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஓர் ஆணையாளரின் தலைமையில் இயங்கிவருகின்ற ICAC யின் பணியாட்டொகுதி சுமார் 1400 ஆகும். அவர்களுள் சரியாக அரைவாசியினர் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்டுள்ளவர்கள் ஆவார்கள். 10 பிராந்திய அலுவலகங்கள் உள்ளன. உலகில் மிகவும் பலம் பொருந்திய ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை ICAC என அழைக்க முடியும் (மேலதிக விபரங்களுக்காக https://www.icac.org.hk/en/about/history/index.html பிரவேசிக்கவும்). ஹொங்காங் தேசமானது இன்று ஊழலற்ற அரசுகளுக்கு மத்தியில் முன்னணி வகிக்கின்றது.

# மூன்றாம் அத்தியாயம்
## ஊழலுக்கு எதிரான இலங்கையின் அணிதிரள்வு

### 11. ஊழலை இல்லாதொழிக்கும் சட்டங்கள்

ஊழலை (corruption) இல்லாதொழிப்பதற்கான பல சட்டரீதியான ஏற்பாடுகள் இலங்கை சட்ட முறைமையில் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக சுருக்கமான அறிமுகத்தை பெற்றுக்கொள்வது இக்குறிப்பின் நோக்கமாகும். ஊழலை இல்லாதொழிப்பதற்காக இலங்கைச் சட்ட முறைமையில் பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு மத்தியில் பிரதான சட்ட ஏற்பாடுகள் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. அரசியலமைப்பு
2. 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம்
3. 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்
4. 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டம்
5. தண்டனைச் சட்டக்கோவை (15 ஆம் அத்தியாயம்)
6. 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச்சொத்து துஷ்பிரயோகச் சட்டம்
7. 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்
8. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்
9. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்
10. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டம்
11. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்
12. தேர்தல்கள் சட்டங்கள் (சனாதிபதித் தேர்தல்கள்/பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் மாகாண சபைத் தேர்தல்கள்/உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்)

13. 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம்
14. 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டம் (393 ஆம் அத்தியாயம்)
15. 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டம்
16. தாபன விதிக்கோவை
17. நிதிப் பிரமாணங்கள்
18. கொள்வனவு (பெறுகை) வழிகாட்டல்கள்

## 1. அரசியலமைப்பு

ஊழலைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இல்லாதபோதிலும் ஊழலைத் தடுப்பதற்காகத் தூண்டும் பல ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளடகியுள்ளன.

### 1.1 அடிப்படைக் கடமைகள்

அரசியலமைப்புக்கான VI ஆம் அத்தியாயத்தில் மக்களின் அடிப்படைக் கடமைகளும் பொறுப்புகளும் எடுத்துக்காட்டப்படுவதோடு அதன் 28(1)ஆம் உறுப்புரையில்,

“அரசாங்க ஆதனத்தைப் பேணிக்காத்தலும் பாதுகாத்தலும் அரசாங்க ஆதனம் பிழையான முறையில் பயன்படுத்தப்படுதலையும் வீணாக்கப்படுதலையும் தடுத்து நிறுத்துதலும் இலங்கையிலுள்ள ஒவ்வோராளினதும் கடமையாதல் வேண்டும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.2 அடிப்படை உரிமைகள்

அரசியலமைப்பின் III ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளின் மூலம் ஊழல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு குறைவடைகின்றது. அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உரிமை ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பாக உயர்நீதிமன்றத்திற்கு அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்து நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும். எனவே ஊழல் நடவடிக்கைகளின் மூலம் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படுவதனைத் தடுப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதாரணமாக அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்: அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையவர்கள்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை ஊழலைத் தடுப்பதற்காக உள்ள முதன்மைத் தேவையின் அடிப்படையில் தகவல் அறிவதற்கான உரிமை அரசியலமைப்பின் 14(அ) உறுப்புரையின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

## 1.3 பகிரங்க நிதிக்கான கட்டுப்பாடு

அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டினைப் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அதன் பிரகாரம் அரசாங்கம் திரட்டு நிதியமொன்றைக் கொண்டுள்ளதோடு குறிப்பிட்ட திரட்டு நிதியத்திலிருந்து பணத் தொகைகளை மீளப்பெறலானது பாராளுமன்றத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அதன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பணம் ஒதுக்கப்படுதலானது வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு குறிப்பிட்ட பணத்தொகை செலவிடப்படுவது தொடர்பாக பாராளுமன்றம் மேற்பார்வை செய்யும். நிலையான குழுக்களின் மூலம் குறிப்பிட்ட செலவுகள் அங்கீகரிக்கப்பட்ட சட்ட திட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது ஆராயப்படும்.

## 1.4 கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பகிரங்க நிதி தொடர்பாக செயற்படும் பொருட்டு அரசியலமைப்பின் 153 ஆவது உறுப்புரை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமிக்கப்படுகின்றார். அவரது பணிகளும் கடமைகளும் 154(1) ஆம் உறுப்புரையில் காட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உள்ளூராட்சி நிறுவனங்களை உள்ளிட்ட அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினதும் அரசாங்கக் கம்பெனிகளினதும் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கான தத்துவம் உள்ளது. அதன் பொருட்டு,

- எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும், விபரத்திரட்டுகளையும் ஏனைய ஆவணங்களையும் பெறுவதற்கும்,
- கலஞ்சியப் பொருட்கள், ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றை அணுகிப் பார்ப்பதற்கும், அத்துடன்,
- அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தேவையாகக்கூடிய அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் பெறுவதற்கும் தத்துவம் உள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுகள் பற்றிய அறிக்கைகள் வருடாந்தம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதோடு அவற்றின் மூலம் வெளிப்படுகின்ற ஊழல்கள் தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளையும் வழக்குத் தொடுத்தல்களையும் மேற்கொள்கின்றது.

அதேவேளை பாராளுமன்றமானது அதன் நிலையான இரண்டு குழுக்களாகிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) மற்றும் அரசாங்கக்

கணக்குகள் பற்றிய குழு (COPA) என்பவற்றின் மூலம் அரச நிறுவனங்கள் பற்றிய புலனாய்வு நடவடிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்கின்றது.

### 1.5 சுயாதீன ஆணைக் குழுக்கள்

அரச சேவையின் பல்வேறுபட்ட துறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் புலனாய்வு செய்வதற்குமான 10 ஆணைக்குழுக்கள் அரசியலமைப்பின் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்களாக இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு மத்தியில் 8 ஆணைக்குழுக்கள் நேரடியாகவே ஊழலை இல்லாதொழிப்பது தொடர்பாக சம்பந்தப்படுகின்றன. அவையாவன,

நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, தேசிய பொலிசு ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஆகும்.

### 1.6 ஓம்புட்ஸ்மன் (நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்)

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் எனும் நீண்ட பெயரால் அழைக்கப்படுகின்ற ஓம்புட்ஸ்மன் தொடர்பான ஏற்பாடுகள் அரசியலமைப்பின் 156ஆவது உறுப்புரையில் தரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அரச நிறுவனங்களில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய அநீதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளையும் குற்றச்சாட்டுகளையும் புலனாய்வுசெய்து விதப்புரை செய்வதற்கான அதிகாரத்தை ஓம்புட்ஸ்மன் கொண்டுள்ளார்.

## 2. இலஞ்சச் சடடம்

1954 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலஞ்சச் சட்டத்தின் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய தவறுகள் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளதோடு அத்தவறுகள் இடம்பெறும் விதம் தொடர்பாகவும் அவற்றுக்கான தண்டனைகள் தொடர்பாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இலஞ்சம் மற்றும் ஊழலை மறுதலிப்பதற்காக காணப்படுகின்ற முதன்மைச் சட்டமாக இலஞ்ச சட்டத்தை அறிமுகப்படுத்த முடியும். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய தவறுகள் பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய தவறுகளாக இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.1 இலஞ்சம்

இலஞ்சச் சட்டத்தின் 90 ஆவது பிரிவின் பிரகாரம் இலஞ்சமாக

அழைக்கப்படுவது சட்டத்தின் II ஆம் பகுதியில் காணப்படுகின்ற பணிப்புரைகளை மீறி ஏதேனும் அவாநிறைவைக் கோருதல் அல்லது பெறுதல் அல்லது அத்தகைய பணிப்புரையை மீறி மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் செயற்பாடு ஆகும்.

## 2.2 தவறான முறையில் சொத்துக்கள் ஈட்டப்படுதல்.

ஒருவரது அறியப்பட்ட வருமானம் அல்லது வருமதி வழியொன்றுக்குப் புறம்பாக வேறு வகையில் பணம் அல்லது ஆதனம் குவிக்கப்படும் பட்சத்தில் குறிப்பிட்ட நபர் அதற்கு முரணாக விடையங்கள் நிரூபிக்கப்படும் வரை குறிப்பிட்ட பணம் அல்லது ஆதனம் என்பவற்றை இலஞ்ச வழிகளின் மூலம் திரட்டியுள்ளார் என்பதாகக் கருதப்படும்.

## 2.3 ஊழல்

1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் இலங்கை சட்டத்திற்கு ஊழல் எனும் தவறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊழல் எனப்படுவது,

“அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன்-

i. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் பெற்றிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற,
ii. அத்தகைய வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை, பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற,
iii. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற,
iv. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவு எடுப்பதில் பங்குபற்றுகின்ற,
v. பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு

அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூ ண்டுகின்ற,

ஓர் அரச ஊழியர் ஊழல் எனும் தவறு தொடர்பில் தவாறளியாக வேண்டுமென்பதோடு...

## 3. சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தில் சொத்துக்களையும் பொறுப்புகளையும் அரசுக்குப் பிரகடனம் செய்வதற்கான பொறுப்பினைக்கொண்ட நபர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் பகிரங்கச் சேவையாளர்கள் மட்டுமன்றி மக்கள் பிரதிநிதிகளும் குறிப்பிட்ட பதவியில் நியமிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதியில்,

1. தமது சகல சொத்துக்களையும் பொறுப்புகளையும்
2. தமது வாழ்க்கைத்துணையின் சகல சொத்துக்களையும் பொறுப்புகளையும்
3. பிள்ளைகளுக்கான சொத்துக்களையும் பொறுப்புகளையும் (திருமணமாகாதவர்களின்)

உரிய மாதிரி படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

முதற் தடவையாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் வருடம்தோறும் அதனை பிரகடனம் செய்வதற்கான பொறுப்பு சாட்டப்பட்டுள்ளது.

உரிய காலப்பகுதியில் சொத்துகளும் பொறுப்புகளும் சம்பந்தமான பிரகடனங்கள் வழங்கப்படாமை, போலியான தகவல்கள் வழங்கப்படுதல், உரிய முறையில் தகவல்கள் வழங்கப்படாமை என்பன இச்சட்டத்தின் கீழ் தவறாகும் என்பதோடு ஒருவரின் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனதிற்கும் அடுத்தவரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்கும் இடையிலான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்துவதற்கான பொறுப்பு அவருக்கு உள்ளது.

அதன் பிரகாரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட சொத்துகள் சம்பந்தமாக இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் குற்றவாளியாவார்.

## 4. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் என்பவற்றுக்கான முழுமையான அதிகாரத்தினைக் கொண்டுள்ள

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவானது 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. இலஞ்சச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய தவறுகள் மட்டுமன்றி சொத்துகள் மற்றும் பொறுப்புக்களைப் பிரகடனம் செய்வதற்கான சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாகவும் புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் இந்த ஆணைக்குழுவின் அடிப்படைப் பணிகளாக அமைகின்றன.

## 5. தண்டனைச் சட்டக் கோவை (15 ஆம் அத்தியாயம்)

இலஞ்சம் என்பதனை ஒரு குற்றவியல் தவறாக அறிமுகப்படுத்திய முதலாவது சட்டம் 1889 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையாகும். அதன் IX ஆம் அத்தியாயம் “பகிரங்க சேவையாளர்களினால் செய்யப்படும் அல்லது அவர்கள் தொடர்பான தவறுகள்” தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக் கோவையின 158வது பிரிவின் பிரகாரம் பகிரங்க சேவையாளராக இருந்துகொண்டு உத்தியோகச் செயல் தொடர்பில் சட்டமுறையான ஊமதியம் அல்லாத அவாநிறைவினைப் பெறுதல் தவறு என காட்டப்பட்டுள்ளது. அது மூன்று வருடகால மறியற்றண்டனை மற்றும் குற்றப் பணம் மூலம் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தவறாகும்.

அதேவேளை அதன் 159 ஆம் பிரிவின் மூலம் ஊழலான அல்லது சட்ட விரோதமான வழிகளில் பகிரங்க சேவையாளரொருவரின் மீது செல்வாக்கினைப் பிரியோகிப்பதற்கென அவாநிறைவொன்றைப் பெறுதல் தவறு என்பதோடு அது மூன்று வருடகால மறியற்றண்டனை மற்றும் குற்றப் பணம் மூலம் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தவறாகும்.

அதேவேளை தண்டனைச் சட்டக் கோவையின் 160 ஆம் பிரிவில் பகிரங்க சேவையாளர் ஒருவரிடத்தில் செல்வாக்கினைப் பிரியோகிப்பதற்கென அவாநிறைவொன்றைப் பெறுதல் தவறு என்பதோடு அது ஒரு வருடகால மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் மூலம் தண்டிக்கப்படக் கூடிய ஒரு தவறாகும்.

1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம் சட்டமயமாக்கப்பட்டதன் பின்னர் தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் இலஞ்சச் சட்டத்தின் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

பகிரங்க சேவையாளர்கள் தொடர்பான மேற்படி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தேர்தல் ஒன்றின்போது வாக்களிப்பதற்காக அல்லது ஒரு வேட்பாளராக முன்னிப்பதற்கான பணியின் நிமித்தம் தகாத செல்வாக்குச்

செலுத்துவதற்காக இலஞ்சம் வழங்குதல் தவறாகும் என தண்டனைச் சட்டக் கோவையின் 169 ஆ பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

## 6. பொதுச் சொத்துக்கள் சம்பந்தமாக செய்யப்படும் தவறுகள் (1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச்சொத்து துஷ்பிரயோகச் சட்டம்)

இச் சட்டத்தின் பிரகாரம் பொதுச் சொத்தழிப்பை ஏற்படுத்துதல், பொதுச் சொத்துக்களைத் திருடுதல், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல், பொதுச் சொத்துக்களை நேர்மையீனமாகக் கையாடுதல், குற்றமுறையான நம்பிக்கைத் துரோகம், போலியான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கணக்குகளைத் தவறாகக் காட்டுதல் என்பன குற்றவியல் தவறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

பொதுச் சொத்து என்பதன் மூலம் அரசாங்கத்தின் சொத்துக்கள், ஏதேனும் திணைக்களத்தின், நியதிச் சட்ட சபையொன்றின், கூட்டுறவுச் சங்கமொன்றின் அல்லது கூட்டுறவு அமைப்பொன்றின் சொத்துக்கள் கருதப்படுகின்றன.

குற்றச்சாட்டுக்கான சொத்தின் பெறுமதியானது 25,000 ரூபாவை விஞ்சும் சந்தர்ப்பமொன்றில் அத்தகைய தவறுக்காக கைது செய்யட்டுள்ள ஒருவருக்கு தனிச்சிறப்புச் சூழ்நிலைகளில் மட்டுமே பிணை வழங்க முடியும்.

## 7. பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் - 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம்

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றின் மூலம் ஈட்டிக்கொள்ளும் சொத்துக்களை நேரடியாக முன்வைக்கும்போது சமூகத்தில் சந்தேகங்கள் எழுவதனால் பெரும்பாலானோர் இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றின் மூலம் ஈட்டிக்கொள்கின்ற சொத்துக்களை வெவ்வேறான கொடுக்கல்-வாங்கல்களுக்கு உட்படுத்தி சமூகத்திற்கு முன்வைக்கின்றனர். அது பணத் தூய்தாக்கல் என்றழைக்கப்படுகின்றது. ஊழலைத் தடுக்கும்போது பணத் தூய்தாக்கலைத் தடுக்க வேண்டியது முதன்மையான தேவைப்பாடாகும்.

இச்சட்டத்தின் பிரகாரம் பணத் தூய்தாக்கல் குற்றவியல் தவறாக இனங்காணப்பட்டுள்ளதோடு அத்தகைய தவறுகள் தொடர்பான வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதோடு குற்றத் தீர்ப்பளிக்கப்படும் ஒருவர், தவறு எவ்வாதனம் தொடர்பில் புரியப்பட்டதோ அவ்வாதனத்தின் பெறுமதிக்குக் குறையாததும், அவ்வாதனத்தின் பெறுமதியின் மூன்று மடங்குக்கு மேற்படாததுமான குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கான கடுழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும். அதேவேளை பணத் தூ

ய்தாக்கலின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்.

மேற்படி சட்டத்தின் 3 ஆம் பின் பிரகாரம் பணத் தூய்தாக்கல் எனப்படுவது, "அத்தகைய ஆதனம், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டு வருவாயிகளிலிருந்து அடையப்பெற்றது அல்லது தேறிப் பெறப்பட்டது என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணமிருக்க -

i. ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டு வருவாயிகளிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது அடையப் பெற்ற அல்லது தேறிப் பெறப்பட்ட ஏதேனும் ஆதனம் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல்-வாங்கலில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது ஈடுபடுகின்ற,

ii. ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டிலிருந்து அல்லது ஏதேனும் சட்ட முறையற்ற செயற்பாட்டு வருவாயிகளிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாது அடையப்பெற்ற அல்லது தேறிப்பெறப்பட்ட ஏதேனும் ஆதனத்தைப் பெறுகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, மறைத்து வைத்திருக்கின்ற, கையுதிர்கின்ற அல்லது இலங்கைக்குள் கொண்டு வருகின்ற, இலங்கைக்கு வெளியே கைமாற்றுகின்ற அல்லது இலங்கையில் முதலீடு செய்தல"

## 8. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம்.

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதானது ஊழலைத் தடுப்பதற்கானதொரு முதன்மைத் தேவைப்பாடாகும். பொது அதிகார சபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தின் மூலம் சகல பிரஜைகளுக்கும் பொது அதிகாரசபைகளின் பொறுப்பில், உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறையியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை சட்டங்களின் மூலம் பிரஜைகளுக்கு பொது அதிகாரசபைகளிலிருந்து தகவல்களைக் கோரிப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதோடு பிரஜைகளுக்கு நிதமும் தேவைப்படுகின்ற தகவல்களை முற்போக்கான வகையில் பகிரங்கப்படுத்துவதற்கான பொறுப்பு பொது அதிகாரசபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்புகள், பதவி உயர்வுகள், பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிவாரண செயன்முறை போன்ற தகவல்கள் தடையின்றி மக்களுக்குக் கிடைக்கும்போது ஊழல்களை இல்லாதொழிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. அதேவேளை சட்டத்தின் மூலம் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவோருக்கான பாதுகாப்பு தொடர்பாகவும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளமை கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

## 9. தேசிய கணக்காய்வு ஆணைக்குழுச் சட்டம் -

கணக்காய்வுச் செயன்முறையை மிகவும் சுயாதீனமாக மாற்றியமைப்பதற்காக கணக்காய்வுச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்மூலம் கணக்காய்வுச் சேவையின் பொருட்டு சுயாதீன பணியாட்டொகுதியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு கணக்காய்வுச் செயன்முறை மிகவும் வலுவூட்டப்பட்டுள்ளது. அதேவேளை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் செயற்பொறுப்புகளும் துல்லியமாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதேவேளை பொதுமக்களின் முறைப்பாடுகளின் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் புலனாய்வு நடவடிக்கைகள் தொடர்பாக துல்லியமான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதால் ஊழலுக்கு எதிரான செயன்முறையின்பால் மக்களை மிகவும் நெருக்கமாக தொடர்படுத்திக்கொள்ள முடியும்.

கணக்காய்வுச் செயன்முறையானது வெற்றிகரமானதும் சுயாதீனமானதும் ஆவதன் மூலம் பெறுகைச் செயன்முறையிலும் நிர்வாகச் செயன்முறையிலும் ஏற்படக்கூடிய ஊழல்கள் குறைவடையும்.

## 10. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டம்

பணத் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தவறுகளை முறையே தடுப்பதற்கும், வெளிப்படுத்தல் மற்றும் சந்தேகத்துக்கிடமான நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளை திரட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தேவைப்படுத்துவதற்கும், நிறுவனங்களின் செயற்பாடுகளைப் கண்காணிப்பதற்குப் பொறுப்பாயிருக்கும் அதிகார சபையை இனம்காண்பதற்கும் இச்சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் ஊழலான நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் ஊடாக இடம்பெறுவது இச்சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளன.

## 11. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்

அரச துறையில் இடம்பெறுகின்ற இலஞ்சம் அல்லது ஊழல் செயற்பாடுகளின் மூலம் ஆளொருவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள பட்சத்தில் அல்லது விரைவாக மீறப்படவுள்ள பட்சத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தில் அதுதொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கு இந்த சட்டத்தின் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் ஊழல் செயல்பாடுகளைப் புரிகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக

விதப்புரைகளை வழங்குவதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நட்டஈடு மற்றும் நிவாரணங்களுக்கான கட்டளைகளும் வழங்கப்படுகின்றன.

## 12. தேர்தல்கள் சட்டங்கள்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற பொதுத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1946 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் வாக்கெடுப்பொன்றின் போது சுதந்திரமாக வாக்களிப்பதனைத் தடுப்பதற்காக இலஞ்சம் வழங்குதல், உபசரிப்பு செய்தல் மற்றும் சட்டவிரோத அழுத்தம் என்பன தவறுகளாகக் காட்டப்பட்டுள்ளன. இத் தவறுகள் மேற்படி சட்டங்களில் காட்டப்பட்டுள்ள ஊழல் செயற்பாடுகள் எனும் வகைக்குள் உள்ளடங்குவதோடு அத்தகைய தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் மறியற்றண்டனை மற்றும் குற்றப் பணம் என்பவற்றுக்கு மேலதிகமாக ஏழு வருடகாலத்திற்கு வாக்காளராகப் பதிவுசெய்யப்படுதல் மற்றும் வேட்பாளராக முன்னிற்றல் தடை செய்யப்படும்.

## 13. 1981 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் சட்டம்

அரசியலமைப்பில் குறிப்பிடப்படுகின்றதொரு பதவியாகிய நிருவாக நடவடிக்கைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளரின் அல்லது ஒம்புட்ஸ்மனின் பணிகள் பற்றிய விடயங்கள் இச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

அரச நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய அநீதிகளுக்கு எதிராக ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாடு செய்து நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## 14. 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம் (393 ஆம் அத்தியாயம்)

சட்டத்தின் இரண்டாவது பிரிவின் பிரகாரம் ஏதேனும் அரச நிறுவனத்தில் இடம்பெற்ற ஒரு செயற்பாடு தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதானது பொதுச் சேமநலன் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக அவசியமானதென ஜனாதிபதி கருதும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஜனாதிபதிக்கு அறிக்கையிடுவதற்கு ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

இந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஊழல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பகிரங்கப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் முன்னாள் ஜனாதிபதிகள் ஆணைக்

குழுக்களை நியமித்து அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இச்சட்டத்திற்கு 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் கண்டறிதல்களின் அடிப்படையில் இலஞ்சச் சட்டத்தின்கீழ் அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனச் சட்டத்தின்கீழ் தவறிழைக்கப்பட்டுள்ளதாக வெளிக்கொணரப்படும்போது மேற்படி சட்டங்களின் பிரகாரம் குற்றவியல் வழக்குகளை தொடுக்குமாறு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் பணிப்பாளர் நாயகத்திற்கு கட்டளையிட முடியும்.

இத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஆணைக்குழுக்களினால் வெளிக்கொணரப்படுகின்ற ஊழல் செயற்பாடுகள் தொடர்பான வழக்குத் தொடுத்தல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

## 15. 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டம்

அரச நிறுவனங்களின் அல்லது அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளைப் பரிசோதிப்பது பொது சேமநலத்திற்கும் மக்கள் பாதுகாப்புக்கும் அவசியமானதென்பது ஜனாதிபதியின் கருத்தாக அமைகின்ற சந்தர்ப்பத்தில் அதுதொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக விசேட புலனாய்வு ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு இச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின்கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## 16. தாபன விதிக்கோவை

அரச நிறுவனங்களின் மனித வள முகாமைத்துவம் பற்றிய நடவடிக்கைமுறைசார் விடயங்கள் தாபன விதிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பகிரங்க சேவையாளரொருவர் கடமைகளை நிறைவேற்றும்போது மேற்கொள்ளப்பட வேண்டியவை மற்றும் மேற்கொள்ளப்படலாகாதவை மட்டுமன்றி வெளிப்படுத்த வேண்டிய விடயங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

குறிப்பாக XXIX ஆம் அத்தியாயத்தில் அதாவது, காணிகளை சுவீகரித்தல் மற்றும் அடகுவைத்தல் பற்றிய அத்தியாயத்தில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனங்களை வழங்குதல், காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படுதல் மற்றும் முதலீட்டுப் பங்குகள் மற்றும் ஏனைய உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளின் மூலம் பகிரங்க சேவையாளர்கள் ஊழலின் மூலம் சொத்துக்களைக் கைப்பற்றுவது தடுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, XLVII ஆம் அத்தியாயத்திற்கான ஏற்பாடுகளின் மூலம் பகிரங்க சேவையாளர்களுக்கான அன்பளிப்புகள் பெறப்படுதல் பற்றிய வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, தாபன விதிக்கோவையின் பிரகாரம் அரச சேவை அபகீர்த்திக்கு உள்ளாகும் வகையில் செயற்படுதல் தண்டனையளிக்கப்படக்கூடிய ஒரு தவறாக காட்டப்பட்டுள்ளது.

## 17. நிதிப் பிரமாணங்கள்

அரச துறையின் பௌதீக வளங்கள் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படுவதற்கான செயன்முறையானது நிதிப் பிரமாணங்களின் மூலம் விபரிக்கப்படுகின்றது. அதன்மூலம் அரச நிறுவனங்கள் கொண்டுள்ள பௌதீக வளங்கள் தவறான முறையில் கையாளப்படுவதற்கான (துஷ்பிரியோகம்) வாய்ப்பு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

## 18. கொள்வனவு (பெறுகை) வழிகாட்டல்கள்

பெறுகை ஆணைக்குழுவினால் 2019 அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 2144/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் - பெறுகை வழிகாட்டல்கள் - 2019 வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களினால் பொருட்கள், வேலைகள், சேவைகள் மற்றும் தகவல் முறைமைகள் கொள்முதல் செய்யப்படும்போது வினைத்திறன், நியாயமான தன்மை, நீதியான தன்மை, வெளிப்படைத் தன்மை, போட்டித் தன்மை மற்றும் செலவுத் செயல்திறன் என்பவை உறுதிபடுத்தப்படுகின்ற பெறுகைச் செயன்முறையின் மூலம் பணத்திற்கு ஏற்ற பெறுமதியை உறுதிப்படுத்தும் கோட்பாடுகளையும் நடவடிக்கைமுறைகளையும் உருவாக்குவது இந்த வழிகாட்டல் கோவையின் நோக்கமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது அரசாங்கத்தின் பெறுகைச் செயன்முறையில் இடம்பெறக்கூடிய ஊழல்களை இல்லாதொழிப்பது இதன் ஒரு பிரதான நோக்கமாகும்.

## ஏனைய சட்ட ஏற்பாடுகள்

மேற்படி சட்டதிட்டங்களிலும் வழிகாட்டல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைத் தவிர 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம், 423 ஆம் அத்தியாயமகிய அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் போன்ற இன்னும் பல சட்டங்களின் மூலமும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு மேலதிகமாக திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் பொது நிருவாக சுற்றறிக்கைகள் மூலமும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றைத் தவிர இலங்கைச் சட்ட முறைமையில் காணப்படுகின்ற பல சட்டங்களின் மூலம் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இலஞ்சச் சட்டத்தின்கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்மூலம் முயற்சிக்கப்படுவதும் குறிப்பட்ட நிறுவனங்களில் ஊழலை இல்லாதொழிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்குவதாகும்.

இச்சட்ட ரீதியான ஏற்பாடுகளைத் தவிர குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் மூலமும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்யப்படும்போது குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான பாதுகாப்பு வழங்கப்படுதல் எதிர்பார்க்கப்படுவதனால் ஊழலைத் தடுப்பதற்காக அச்சட்டமும் உதவியளிக்கின்றது.

இதன் பிரகாரம் ஊழலை இல்லாதொழிப்பதற்காக சட்டரீதியான பல ஏற்பாடுகள் இலங்கை சட்ட முறைமையில் காணப்படுகின்றன என்பது தெளிவாகின்றது.

# 12. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டம்

## தத்துவங்களும் செயற்பொறுப்பும் பற்றிய அறிமுகம்

### வரலாறு

இலஞ்சம் எனப்படும் தவறானது 1883 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்ட தண்டனைச் சட்டக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு தவறு என்பதோடு ஆரம்ப காலத்தில் அதுதொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் பொலிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வழக்குத் தொடுத்தல் நடவடிக்கைகள் சட்டமா அதிபரினால் மேற்கொள்ளப்பட்டன. தண்டனைச் சட்டக் கோவையின் கீழான இலஞ்சம் எனப்படும் தவறுக்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட முடியவில்லை. அதற்கான காரணம் அவர்கள் அரச உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவதில்லை என்பதாகும். எனவே அரசப் பேரவையின் உறுப்பினர்களும் கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர்களும் மேற்கொண்ட இலஞ்சம் பற்றிய தவறுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக புலனாய்வு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. எம்.என்.டீ சில்வா ஆணைக்குழு, பீட்டர் கெனமன் ஆணைக்குழு மற்றும் எஸ்.டபிள்யூ.என்.டீ சில்வா ஆணைக்குழு ஆகிய 3 ஆணைக்குழுக்கள் இடைக்கிடை நியமிக்கப்பட்டன.

இலஞ்சம் தொடர்பில் விரிவான சட்டமொன்றின் தேவை எழுந்தமையினால் 1954 ஆம் ஆண்டு இலஞ்சச் சட்டம் அரசப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டதோடு அச்சட்டத்தின் பிரகாரம் இலஞ்சம் பற்றிய ஆணையாளர் பதவியொன்று உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1958ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் இலஞ்சச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தத்தின் பிரகாரம் இலஞ்சத் திணைக்களம் நிறுவப்பட்டது. அதன் பிரகாரம் இலஞ்சம் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகள் இலஞ்சத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதோடு சட்டமா அதிபரினால் வழக்கு தொடரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் 1975ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் அச்சட்டத்தின் கீழான தவறுகள் பற்றிய புலனாய்வு நடவடிக்கைகளும் இலஞ்சத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு 1994ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு இலஞ்சச் சட்டம் திருத்தப்பட்டு

ஊழல் எனும் தவறு அறிமுகப்படுத்தப்பட்டதோடு ஊழல் தொடர்பான புலனாய்வு நடவடிக்கைகளும் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளும் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டன.


அரசியலமைப்புக்கான 17ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்களின் மூலம் ஆணையாளர்களை நியமிப்பதற்காக மிகவும் சுயாதீன முறைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் மூலம் சுய நெறிப்படுத்தலில் வழக்கு தொடர்வதற்கான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

2018ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 2018ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் ஊழல் எனப்படும் தவறுக்காக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான தத்துவங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டன.

2019ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 2019ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றிற்கான சாட்சிகளின் மீது வழக்கு தொடர்வதற்கான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டன.

## ஆணைக்குழுவின் அமைப்பு




## ஆணையாளர்கள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவானது மூன்று ஆணையாளர்களைக் கொண்டமைந்துள்ளன. ஜனாதிபதியினால் அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஐந்து வருடகாலப் பகுதிக்காக

ஆணையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட ஆணையாளர்களுள் இரண்டு ஆணையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பணியாற்றி இளைப்பாறிய நீதியரசர்களாக இருக்க வேண்டும் எனவும், ஒரு ஆணையாளர் குற்றவியல் புலனாய்வு மற்றும் சட்ட அமுலாக்கல் தொடர்பான அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் எனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மூவருக்கு மத்தியில் இளைப்பாறிய ஒரு நீதியரசர் அதன் தலைவராக ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவார்.

## பணிப்பாளர் நாயகம்

சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழுவிற்கு உதவியளிக்கும் பொருட்டு பணிப்பாளர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. ஆணையாளர்களை ஆராய்ந்து ஜனாதிபதியினால் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுகின்றார்.

## ஆணைக்குழுவின் விடயப்பரப்பு

ஆணைக்குழுவின் பிரதான பணிகளாக அமைவது அதனுடைய விடயப்பரப்புக்குள் வருகின்ற தவறுகள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் வழக்குத் தொடுத்தல் என்பனவாகும்.

ஆணைக்குழுவின் விடயப்பரப்பானது பிரதானமாக நான்கு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளன.

1. இலஞ்சச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் பெறுதல் அல்லது வழங்குதல்.
2. இலஞ்சச் சட்டத்தின் கீழான ஊழல்கள்
3. இலஞ்சச் சட்டத்தின்கீழ் முறையற்ற சொத்துக் குவிப்பு (பகிரங்க சேவையாளர் ஒருவரால்)
4. சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான தவறுகள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு மேலதிகமாக 2015ஆம் ஆண்டு அரசியல் அமைப்பிற்கு சேர்க்கப்பட்ட 19ஆவது திருத்தத்தின் மூலம் விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, “இலங்கை ஒரு தரப்பாக அமைந்துள்ள ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சமவாயம் மற்றும் ஊழலை தடுப்பதற்கான ஏனைய சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையின் பொருட்டு ஏற்பாடுகளை வழங்குதல்”

## ஆணைக்குழுவின் தத்துவங்கள்

மேற்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்கள் அல்லது சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாக புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடருதல் என்பவற்றுக்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உள்ளது. முறைப்பாடு கிடைக்கப்படாத போதிலும் தமது சொந்த நெறிப்படுத்தலின் மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்கள் தொடர்பாக அடிப்படை விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் ஆணைக் குழுவுக்கு உள்ளது. புலனாய்வு நடவடிக்கைகளுக்காக,

- வாய்மூல அல்லது எழுத்திலான சாட்சிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விசாரித்தல்
- விசாரிப்பதற்காக ஆணைக்குழுவின் முன்னால் ஆட்களை அழைத்தல்
- கேட்கப்படும் கேள்வியொன்றுக்குரியதாக சத்தியக் கடதாசிகளை பெற்றுத்தருமாறு கட்டளையிடுதல்
- தமது உடைமையில் அல்லது தமது பொறுப்பில் இருக்கின்ற ஆவணங்களை அல்லது வேறு ஏதேனும் சமர்ப்பிப்பதற்காக ஆளொருவரை அழைத்தல்
- இலஞ்சக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள ஒருவரது குடும்ப அங்கத்தவர்களின் அல்லது அவர் பணிப்பாளர் பதவியை வகிக்கின்ற கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரது வங்கிக் கணக்குகளுக்கான விவரங்களைப் பெற்றுத்தருமாறு வங்கி முகாமையாளர்களுக்கு கட்டளையிடுதல்
- இலஞ்சக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் குடும்ப அங்கத்தவர்களின் அல்லது அவர் பணிப்பாளர் பதவியை வகிக்கின்ற கம்பெனியின் பணிப்பாளர் ஒருவரின் வருமான விபரங்களைப் பெற்றுத்தருமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவித்தல்
- ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குமாறு அரச நிறுவனமொன்றின் பிரதானிகளுக்கு அறிவித்தல்
- இலஞ்சக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏதேனும் சொத்து கைப்பற்றிக் கொள்ளப்பட்ட திகதியை குறிப்பிடுமாறு கட்டளையிடுதல்
- இலஞ்சக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் குடும்ப அங்கத்தவர்களின் சொத்துக்கள் பற்றிய விவரங்களுடன்கூடிய சத்தியக் கடதாசிகளைப் பெற்றுத்தருமாறு கட்டளையிடுதல்.
- குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒருவர் வெளிநாடு செல்வதனை மூன்று மாதங்களுக்குத் தடை செய்யுமாறு குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்தல்
- சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்துவதற்கான சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாக புலனாய்வு செய்தல்
- தளப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம்

- கணக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுதல்

## ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை மேற்கொள்ளுதல்

ஆணைக்குழுவானது 4 முறைகளில் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்கின்றது.

1. இலஞ்சம் கோருதல் அல்லது இலஞ்சம் வழங்குவதற்கு தூண்டுதல் பற்றிய முறைப்பாடுகள்.
2. ஊழல் பற்றிய முறைப்பாடுகள்
3. முறையற்ற சொத்துக்குவிப்பு பற்றிய முறைப்பாடுகள்
4. சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தாமை மற்றும் போலியான கூற்றுக்களை முன்வைத்தல் பற்றிய முறைப்பாடுகள்.

ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை முன்வைத்தல்

1. தொலைபேசியின் மூலம் (துரித தொலைபேசி அழைப்பு)
2. ஆணைக் குழுவிற்கு வருகை தருவதன் மூலம் (நேரடியாக)
3. தபால் மூலம் (எழுத்து மூலமாக)
4. தொலைநகல் மூலம்
5. மின்னஞ்சல் மூலம்
6. ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைதளத்தின் மூலம்(ஒன்லைன்)
7. குறுஞ்செய்தி மூலம்
8. கையடக்கத் தொலைபேசி மூலம்

மேற்கொள்ள முடியும்.

### முறைப்பாட்டில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள்

இலஞ்சம் கோருதல் அல்லது வழங்குதல் தொடர்பான முறைப்பாட்டில் முறைப்பாட்டாளரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டியது இன்றியமையாததாகும். ஏனைய தவறுகள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்படும்போது அவற்றை அனாமதேய முறையிலேனும் மேற்கொள்ள முடியும். அதன் பிரகாரம் ஒவ்வொரு முறைப்பாட்டிலும் சம்பவம், குற்றஞ்சாட்டப்பட்டுபவரின் பெயர், பதவி, முகவரி, தவறு இடம்பெறுகின்ற இடம், திகதி, தகவல்கள் பெறக்கூடிய நபர்களின் விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

## ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் இரகசியத்தன்மை

ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் உட்பட சகல உத்தியோகத்தர்களும் சட்டத்தின் ஏற்பாடுகளை வலுப்படுத்தும் பணிக்காகவன்றி சட்டத்தின் கீழ் தமக்குக் கிடைக்கப்படுகின்ற தகவல் எதனையும் வெளிப்படுத்தாமை பற்றிய உறுதி மொழியின் மூலம் கட்டுப்பட்டுள்ளனர்.

போலியான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தவறு என்பது

ஒரு போலியான விடயம் என்பதை அறிந்துகொண்டே ஆணைக்குழுவிற்குப் போலியான முறைப்பாடுகளை மேற்கொள்வது சட்டத்தின் கீழ் தவறாகும் என்பதோடு அத்தகைய நபர்களுக்கு பத்து வருடகால மறியற்றண்டனை அல்லது இரண்டு லட்சம் ரூபா குற்றப்பணம் அல்லது அவை இரண்டும் விதிக்கப்பட முடியும்.

## ஆணைக்குழுவின்பால் மேற்கொள்ளப்படுகின்ற தவறுகள்

இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழ் புலனாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்குத் தடைகளை ஏற்படுத்துகின்ற பின்வரும் செயற்பாடுகள் தவறுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

- அழைப்பாணைக்குக் கட்டுப்படாமை.
- ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிப்பதைப் புறக்கணித்தல்
- ஆணைக்குழுவிற்கு போலியான முறைப்பாடுகளை முன்வைத்தல்
- ஆணைக்குழுவிற்கு சத்தியத்தின் மீது பொய் கூறுதல்
- ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டுதல்
- ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் முறையற்ற வகையில் தலையீடு செய்தல்
- நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்காக, சாட்சியமளிக்காதிருப்பதற்காக ஒருவரைத் தூண்டுதல்

## 13. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்குள் வருகின்ற தவறுகள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பரப்புக்குள் வருகின்ற தவறுகள் 2 சட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. அவையாவன,

1. 1954 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இலஞ்சச் சட்டம்
2. 1975 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தல் பொறுப்புச் சட்டம்

## 1. இலஞ்சச் சட்டத்தின் கீழான தவறுகள்

இலஞ்சச் சட்டத்தின் கீழான 3 தவறுகள் சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புலனாய்வு நடவடிக்கைகளும் வழக்குத் தொடுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன,

- இலஞ்சம்
- முறையற்ற சொத்துக் குவிப்பு
- ஊழல்

### 1.1. இலஞ்சம்

இலஞ்சச் சட்டத்தின் 90வது பிரிவின் பிரகாரம் “இலஞ்சம்” என்பது “இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி அவாநிறைவெதனையும் கொடுக்க முனைதல், பரிந்து கேட்டல் அல்லது ஏற்றுக்கொள்ளல் என்று அல்லது அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டை மீறிச் செயற்பட்ட ஏதேனும் ஒரு செயல் என்று பொருளாகும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாகத்தின் கீழான தவறுகள் பகிரங்க சேவையாளர்களின் தன்மைக்கு ஏற்ப விவரிக்கப்பட்டுள்ளன.

- நீதித்துறை அலுவலரொருவருக்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கு, அத்தகைய அலுவலர் அல்லது உறுப்பினர் அவரது நீதித்துறை சார்ந்த தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினர் என்ற தன்மையில் ஏதேனும் செயலை செய்வதற்கான அல்லது செய்யாதிருப்பதற்கான ஊக்குதலாக அல்லது வெகுமதியாக ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும் (14 ஆம் பிரிவு)

- எவரேனும் ஆளின் சார்பில் பகிரங்க சேவையாளர் ஒருவரை அல்லது நீதித்துறைப் பணிபுரியும் அல்லது நீதித்துறை பணியைப் போன்ற பணியைப் புரியும் ஒருவரை தாம் செவ்வி காண்பதற்காக ஏதேனும் அவாநிறைவைப் பரிந்து கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும் (15 ஆம் பிரிவு).
- தவறாளர்கள்மீது வழக்குத் தொடருதல், அவர்களை கண்டுபிடித்தல் அல்லது அவர்களைத் தண்டித்தலுக்காக எத்தன்மையிலேனும் தொழிலுக்கமர்த்தப் பட்டிருக்கும் எவரேனும் போலீசு அலுவலருக்கு அல்லது சமாதான அலுவலருக்கு அல்லது வேறு பகிரங்க சேவையாளருக்கு அல்லது நீதிமன்றமொன்றின் அலுவலருக்கு, அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் நீதி நெறிமுறையில் நிருவகிக்கப்படுவதில் தலையிடுவதற்காக அல்லது தவறெதுவும் புரியப்படச் செய்வதற்காக அல்லது புரியப்படச் செய்வதை சுலபமாக்குவதற்காக அல்லது ஏதேனும் தவறை இழைத்தவர் கண்டுபிடிக்கப்படுவதிலிருந்து அல்லது தண்டிக்கப்படுவதிலிருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக, அல்லது எவரேனும் ஆளுக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் அல்லது கேடாகும் வண்ணம் தமது அலுவலகத் தத்துவங்களை துஷ்பிரயோகம் செய்வதற்காக, ஊக்குதல் என்ற வகையில் அல்லது வெகுமதி என்ற வகையில் ஏதேனும் அவாநிறைவை வழங்குதல் அல்லது குறிப்பிட்ட அலுவலர் அவாநிறைவு எதையும் பரிந்து கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும் (16 ஆம் பிரிவு)
- ஏதேனும் வேலை செய்தலுக்கான, ஏதேனும் சேவை ஏற்பாடு செய்தலுக்கான, எதையேனும் செய்தலுக்கான, ஏதேனும் பொருள், சாமான் அல்லது பதார்த்தம் வழங்குதலுக்கான அரசாங்கத்துடனான ஏதேனும் ஒப்பந்தத்தைப் பெறுவதை மேம்படுத்துவதில் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விலையை அல்லது பிரதிபயனை அல்லது அது தொடர்பிற் கொடுபடற்பாலதான ஏதேனும் மானியத் தொகையைக் கொடுப்பதில் பகிரங்க சேவையாளர் ஒருவர் உதவி தருவதற்கான அல்லது செல்வாக்கு பயன்படுத்துவதற்கான ஊக்குதல் என்ற வகையில் அல்லது வெகுமதி என்ற வகையில் அத்தகைய பகிரங்க சேவையாளர் ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும் (17ஆம் பிரிவு).
- ஒப்பந்தம் ஒன்றை அரசாங்கத்திடமிருந்து பெறும் கருத்துடன், அத்தகைய ஒப்பந்தத்துக்கென கேள்விப்பத்திரம் சமர்ப்பித்துள்ள எவரேனும் ஆளுக்கு, அவர் அத்தகைய கேள்விப்பத்திரத்தை திருப்பிப்பெறுவதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற வகையில் அவாநிறைவை பரிந்து கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும் (18ஆம் பிரிவு)
- பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு அந்தப் பகிரங்க சேவையாளர் ஏதேனும் அலுவலகச் செயலை புரிவதற்காக அல்லது புரிவதை

தடுப்பதற்காக அல்லது ஏதேனும் அலுவலகச் செயலை அத்தகைய பகிரங்க சேவையாளராலோ வேறெவரேனும் பகிரங்க சேவையாளராலோ புரியப்படுதலைத் துரிதப்படுத்துவதற்கான, சுணக்குவதற்கான தடைசெய்வதற்கான அல்லது தடுப்பதற்கான அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் அலுவலை அரசாங்கத்துடன் செய்துகொள்வதற்கு உதவுவதற்கான, அனுகூலம் காட்டுவதற்கான, தடைசெய்வதற்கான அல்லது சுணக்குவதற்கான ஊக்குதல் அல்லது வெகுமதி என்ற வகையில் ஏதேனும் அவாநிறைவை ஏற்றல் அல்லது பரிந்து கேட்டல் தவறாகும் (19 ஆம் பிரிவு)

- அரசாங்க அலுவலகம் ஒன்றில் இருந்து கோரிக்கைகள், கொடுப்பனவு செய்தல், நியமனங்கள், தொழில்கள். அளிப்புகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் தொடர்பான அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்லது தடுப்பதற்காக ஏதேனும் அவாநிறைவை வழங்குதல் அல்லது அத்தகைய அலுவலுக்காக அவாநிறைவை ஏற்றல் அல்லது பரிந்து கேட்டல் தவறாகும் (20 ஆம் பிரிவு).
- அரசாங்கத்துடன் எத்தகையனவுமான கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும் ஒருவர் அந்த அலுவலகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க சேவையாளருக்கு அவாநிறைவை வழங்குதல் அல்லது அத்தகைய அலுவலகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் பகிரங்க சேவையாளர் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை கொண்டுள்ள ஒருவரிடமிருந்து அவாநிறைவை ஏற்றல் அல்லது பரிந்துகேட்டல் தவறாகும் (21ஆம் பிரிவு).
- தமக்குச் சாதகமாக வாக்களிப்பதற்காக, எதிராக வாக்களிக்கப்படுவதனைத் தடுப்பதற்காக, ஏதேனும் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, ஏதேனும் அலுவலகச் செயல் புரியப்படச்செய்விப்பதற்கு, துரிதப்படுத்துவதற்கு, சுணக்குவதற்கு, தடை செய்வதற்கு அல்லது தடுப்பதற்கு உதவுவதற்காக உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அத்தகைய நிறுவனத்தின் எவரேனும் பகிரங்க அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு ஏதேனும் அவாநிறைவை வழங்குதல் அல்லது அத்தகைய நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ஒருவரால் அத்தகைய பணிகளுக்காக உதவுவதன் பொருட்டு அவாநிறைவொன்றை ஏற்றல் அல்லது பரிந்து கேட்டல் தவறாகும் (22 ஆம்பிரிவு)
- உள்ளூர் அதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர் வாக்களிப்பதில் செல்வாக்குப் பிரியோகிப்பதற்காக அச்சுறுத்தல் அல்லது மோசடி செய்தல் தவறாகும் (23 ஆம் பிரிவு).

## இலஞ்சம் பற்றிய தவறுகள்

மேலே விபரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் இலஞ்சம் பெறுதல், இலஞ்சம் வழங்குதல் மட்டுமன்றி இலஞ்சம் கேட்டல் (பரிந்து கேட்டல்) மற்றும் இலஞ்சம் வழங்குவதற்கு முன்மொழிதல் தவறாகும். அதேவேளை மேற்படி செயற்பாடுகளை புரிவதற்காக எத்தனிப்பதும் தவறாகும். அதேவேளை மேற்படி செயற்பாடுகளுக்காக துணையளிப்பதும் தவறாகும். அதேவேளை ஏதேனும் அலுவலை நிறைவேற்றித் தருவதற்கான வாக்குறுதியின் அடிப்படையில் இலஞ்சம் பெற்ற ஒரு அலுவலர் குறிப்பிட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாத போதிலும் ஏதேனும் அவாநிறைவைப் பெற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில் இலஞ்சம் பெறுதல் எனும் தவறுக்கு குற்றவாளி ஆவார்.

## இடைத்தரகர் மூலம் இலஞ்சம் பெறுதல்

ஆள் ஒருவர் அல்லது அவருடைய அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆளொருவர் நேராகவோ மறைமுகமாகவோ, முதற் கூறப்பட்ட ஆளுக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெவரேனும் ஆளுக்காகவாயினுஞ்சரி ஏதேனும் அவா நிறைவை வற்புறுத்திக் கேட்டால் அது ஆரம்ப நபரால் மேற்கொள்ளப்பட்ட தவறாக சட்டம் கருதுகின்றது. (89 ஆம் பிரிவு).

## இலஞ்சம் பற்றிய தவறுக்கான தண்டனைகள்

இத்தவறுகள் ஆனவை பிடியாணையின்றி கைதுசெய்யத்தக்க தவறுகள் என்பதோடு வழக்குத் தொடுத்தல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும். வழக்கு விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் 7 வருடகால மறியற்றண்டனை அல்லது ஐந்தாயிரம் ரூபா வரையிலான குற்றப்பணம் அல்லது அவை இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாதல் வேண்டும். அவற்றுக்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அவாநிறைவின் பெறுமதியை குற்றப்பணமாக செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம். அதேவேளை இத்தவறுக்குக் குற்றவாளியகும் ஒருவர் 7 வருடங்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கோ வேட்பாளராக முன்னிற்பதற்கோ தகுதியற்றவராக இருப்பார். அவர் மீண்டும் அரச சேவையில் இணைவதற்கும் தகுதியற்றவராவார்.

## அவாநிறைவு

அவாநிறைவு பெறப்படும்போது அல்லது வழங்கப்படும்போது இலஞ்சம் எனும் தவறானது அமையப்பெறுகின்றது.அவாநிறைவு என்பது இலஞ்சச் சட்டத்தின் 90 ஆம் பிரிவில் பின்வரும் வகையில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.

"அவாநிறைவு" என்பது -

i. பணத்தையும் அல்லது ஏதேனும் நன்கொடை, கடன், கட்டணம், வெகுமதி, தரகு, பெறுமதியான பிணை, அல்லது அசைவுள்ளதாயினுஞ்சரி அல்லது அசைவற்றதாயினுஞ்சரி ஏதேனும் விவரணத்தைக் கொண்ட ஆதனம் அல்லது ஆதனத்தின் அக்கறை என்பவற்றையும்,
ii. ஏதேனும் பதவி, தொழில், அல்லது ஒப்பந்தத்தையும்,
iii. (முழுமையாகவாயினுஞ்சரி, பகுதியளவிலாயினுஞ்சரி எத்தன்மைத்தான ஏதேனும் கடன், கடப்பாடு அல்லது வேறு பொறுப்பு தொடர்பில் ஏதேனும் கொடுப்பனவு, விடுவிப்பு, கொடுத்துத் தீர்த்தல் அல்லது ஒழித்தல்,
iv. ஓர் ஒழுக்காற்று அல்லது தண்டனைசார் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதினிலிருந்தும் அவை ஏலவே தொடரப்பட்டிருப்பினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி உறப்படும் அல்லது எதிர்நோக்கப்படும் ஏதேனும் தண்டம் அல்லது இயலாமையிலிருந்து பாதுகாப்பு உட்படவும், ஏதேனும் உரிமை அல்லது ஏதேனும் அலுவலகத் தத்துவம் அல்லது கடமையைப் பிரயோகித்தல் அல்லது பிரயோகிக்காது பொறுத்தல் உட்படவும் ஆன எத்தன்மைத்தானதுமான ஏதேனும் விவரணத்தினதான வேறு ஏதேனும் சேவை, சலுகை அல்லது அனுகூலம், அத்துடன்,
v. மேற்போந்த (அ),(ஆ),(இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் அவாநிறைவின் ஏதேனும் கொடைமுனைவு, பொறுப்பேற்பு அல்லது வாக்குறுதியை உள்ளடக்குவதாகும்.

இதன் பிரகாரம் இலஞ்சத்தின்போது பரிமாறுகின்ற "அவாநிறைவு" என்பதில் பௌதீக மற்றும் பௌதீகமல்லாதவைகளும் உள்ளடங்குகின்றன என்பது தெளிவாகின்றது. அண்மைக்கால வழக்குத் தீர்ப்புகளின் பிரகாரம் பாலியல் உறவும் அவாநிறைவாக கருதப்பட்டுள்ளது.

### இலஞ்சம் மற்றும் அன்பளிப்பு

இலஞ்சம் மற்றும் அன்பளிப்பு என்பவற்றுக்கு இடையில் தெளிவான வித்தியாசம் காணப்படுகின்றது. அன்பளிப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும்போதும் வழங்கும்போதும் அதில் எதுவிதமான தவறான நோக்கமும் கிடையாது. இருப்பினும் இலஞ்சம் வழங்கப்படும்போது நிதமும் தவறான நோக்கம் அதில் பொதிந்திருக்கும்.

### 1.2 முறையற்ற சொத்துக் குவிப்பு

சட்டத்தின் 23(1)அ பிரிவின் பிரகாரம் "அவரது அறியப்பட்ட வருமானத்தின் அல்லது வரவுகளின் வழிகளுக்குப் புறம்பாக வேறு வகையில் பணம் அல்லது ஆதனம் சேகரிக்கப்படுமானால் குறிப்பிட்ட நபர் அவற்றுக்கு எதிராக

விடயங்களை எண்பிக்கும்வரை குறிப்பிட்ட பணம் அல்லது ஆதனம் இலஞ்ச வழியில் சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

அதன் பிரகாரம் அத்தகைய முறையற்ற சொத்துக் குவிப்பு மற்றும் அத்தகைய சொத்துக்களை கொண்டிருத்தல் ஒரு தவறாக அமைவதோடு அத்தகைய குற்றத்தை புரிந்த ஆளொருவர் 07 வருட கால மறியற்றண்டனை மற்றும் ஐந்தாயிரம் குற்றப்பணம் என்பவற்றுக்கு ஆளாதல் வேண்டும். அதேவேளை குறிப்பிட்ட சொத்துக்களை அரசுடமையாக்குவதற்கான கட்டளையும் பிறப்பிக்கப்பட முடியும்.

## 2.3 ஊழல்

1954ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்ட 1994 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலஞ்ச, (திருத்தம்) சட்டத்தின் மூலம் இலங்கை சட்டத்திற்கு ஊழல் எனும் தவறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊழல் எனப்படுவது,

“அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை சாதகமான பயனை அல்லது அனுகூலத்தை அளிக்கின்ற முன்னத்துடன் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நட்டம் அரசாங்கத்திற்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஏற்படும் அல்லது தவறான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகமான பயன் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்னும் அறிவுடன்

i. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் பெற்றிருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற,
ii. அத்தகைய வேறு எவரேனும் பகிரங்க ஊழியரை, பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு எந்தச் செயலைச் செய்வதற்கு அவர் தத்துவம் கொண்டிருக்கின்றாரோ ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாது தவிர்க்குமாறு வேறு எவரேனும் பகிரங்க அலுவலரைத் தூண்டுகின்ற,
iii. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற,
iv. பகிரங்க ஊழியர் ஒருவராக அவரது பதவியின் பயனைக் கொண்டு ஏதேனும் முடிவு எடுப்பதில் பங்குபற்றுகின்ற,
v. பகிரங்க ஊழியர் ஒருவராக நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமல் தவிர்ப்பதற்கு அவரது பதவியை பயன்படுத்துமாறு வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற,

ஓர் அரச ஊழியர் ஊழல் எனும் தவறு தொடர்பில் தவாறளியாக வேண்டுமென்பதோடு....

ஊழல் எனும் தவறைப் புரிகின்ற ஆளொருவர் நீதவான் நீதிமன்றத்தில் அல்லது மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் தவறாளியாகும் பட்சத்தில் 10 வருடங்களை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

## பகிரங்க சேவையாளர்

இலஞ்சச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் பெறுதல் தொடர்பாகவும் ஊழல் தொடர்பாகவுமான தவறுகள் பகிரங்க சேவையாளர்களுக்கே சாட்டப்படுகின்றன. இலஞ்சச் சட்டத்தின் 90 ஆவது பிரிவு அரச சேவையாளரை பின்வருமாறு பொருள்கோடல் செய்துள்ளது.

"பகிரங்க சேவையாளர்" என்பது, அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரையும், அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவரையும், சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகரையும், குழுக்களின் பிரதித் தவிசாளரையும், பிரதியமைச்சர் ஒருவரையும், மாகாணமொன்றின் ஆளுநரையும், மாகாணமொன்றின் அமைச்சர் சபையின் அமைச்சர் ஒருவரையும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும், அரசின் அலுவலர், சேவையாள் அல்லது ஊழியர் ஒவ்வொருவரையும் அல்லது வேதனம் பெறுபவராயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி மாகாணசபையொன்றின், உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்தக் கம்பெனியில் 50 சதவீதத்திற்கும் மேலான பங்குகள் அரசாங்கத்தால் வைத்திருக்கப்படுகின்றனவோ அந்தக் கம்பெனி ஒன்றின் தவிசாளர், பணிப்பாளர், ஆளுநர், உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் எவரையும், மாகாண பகிரங்க சேவை உறுப்பினர் ஒருவரையும், ஏதேனும் நீதிமன்றத்தால் அல்லது வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த பகிரங்க அதிகார சபையால் முடிவொன்றுக்காக அல்லது அறிக்கைக்காக ஏதேனும் காரணம் அல்லது காரியம் எந்த ஆளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஜூரர் ஒவ்வொருவரையும் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஒவ்வொருவரையும் நடுத்தீர்ப்பாளர் ஒவ்வொருவரையும் அல்லது வேறு ஆளையும் உள்ளடக்கும்.

ஆயினும், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை கலைக்கப்பட்டு அவ்வதிகாரசபையின் அலுவல்களின் நிர்வாகம் எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த அதிகாரசபை கலைக்கப் படுவதற்கு நேர்முன்னர் இருந்தவரும் அத்தகைய கலைத்தலின் பின்னர் தொழிலில் தொடர்ந்திருப்பவருமான அதன் ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கத்திற்குப் பகிரங்க ஊழியர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

அதன் பிரகாரம் மேற்படி நபர்களும் இலஞ்சச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் ஊழியர்களும் இலஞ்சச் சட்டத்தின் கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

அதற்கு மேலதிகமாக சட்டங்களின் மூலம் அரச நிறுவனங்கள்

தாபிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சட்டங்களின் மூலம் குறித்த நிறுவனத்தின் ஊழியர்கள் இலஞ்சச் சட்டத்தின் பொருள்கோடலுக்கு அமைவான பகிரங்க சேவையாளர்கள் ஆவார்கள் என்பதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளன. உதாரணமாக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் பொருளின் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றாக கருதப்பட வேண்டும் என்பதோடு அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வகையிலேயே புரிந்து கொள்ளப்படுதல் வேண்டுமென"குறிப்பிட்டுள்ளது.

## 2. சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்

### 2.1 சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கான பொறுப்பு

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் இலங்கைக்குள்ளும் அதன் வெளியிலும் தமக்குள்ள சொத்துக்களையும் பொறுப்புகளையும் அரசுக்குப் பிரகடனம் செய்வதற்கான பொறுப்பினைக்கொண்ட நபர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் பகிரங்கச் சேவையாளர்கள் மட்டுமன்றி மக்கள் பிரதிநிதிகளும் குறிப்பிட்ட பதவியில் நியமிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதியில்,

1. தமது சகல சொத்துக்களையும் பொறுப்புகளையும்
2. தமது வாழ்க்கைத்துணையின் சகல சொத்துக்களையும் பொறுப்புகளையும்
3. பிள்ளைகளுக்கான சொத்துக்களையும் பொறுப்புகளையும் (திருமணமாகாதவர்களின்) உரிய மாதிரி படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

முதற் தடவையாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் உரிய பதவி வகிக்கப்படும் வரை ஒவ்வொரு வருடத்திலும் மார்ச் 31 ஆம் திகதியில் காணப்படுகின்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனம் செய்தல் வேண்டும். (1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம்).

ஒருவரின் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்கும் அடுத்தவரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்கும் இடையிலான வித்தியாசத்தைத் தெளிவுபடுத்துவதற்கான பொறுப்பு அவருக்கு உள்ளது.

## 2.2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுதல் பற்றிய தவறுகள்

- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படுதல் நியாயமான காரணமின்றி புறக்கணிக்கப்படுதல்,
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்தில் போலியான தகவல்கள் வழங்கப்படுதல்,
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனத்திற்குரியதாக மேலதிகத் தகவல்களை வழங்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நியாயமான காரணமின்றி அப்பணிப்புரையைப் புறக்கணித்தல்,
- சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளையொன்றைப் புறக்கணித்தல்,

தவறாகும் என்பதோடு நீதவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் மேற்கொள்ளப்படுகின்ற வழக்கு விசாரணையொன்றின் மூலம் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து ஆயிரம் ரூபாவினை விஞ்சாத குற்றப்பணம் அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத மறியற்றண்டனை அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

அதன் பிரகாரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட சொத்துகள் சம்பந்தமாக இச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் குற்றவாளியாவார்.

# நான்காம் அத்தியாயம்
## ஊழலை இல்லாதொழிக்கும் இலங்கையின் திட்டங்கள்

### 14. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம்.

இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2019 - 2023 நடைமுறைபடுத்தப்படுவதற்காக அரச நிறுவனங்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு இனங்காணப்படுதல்.

### 1. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக அமைந்த பின்னணி

i. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான பல காரணிகள் அடிப்படையாக அமைந்தன.

ii. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பது தொடர்பாக உள்நாட்டு ரீதியில் பல்வேறுபட்ட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக செய்யப்படுவதையும் அவற்றைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைகள் உள்ளடங்கிய தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்று எம்மிடம் இருக்கவில்லை. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிக்க வேண்டுமெனில் அரச துறையின் அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பாகவும் பொதுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய தேசியத்திட்டமொன்று இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

iii. இலங்கையானது ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தில் 2004 மார்ச் மாதம 15ஆம் தேதி ஒப்பமிட்டு 2004 மார்ச் 31ஆம் திகதி அதனை உறுதிப்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்காக போதிய சட்டப் பின்னணி மற்றும் தேசிய ரீதியான கொள்கைகளை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு

எதிரான சமவாயத்தின் 05ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக் குடியரசு கட்டப்பட்டுள்ளது.

iv. ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தின் தொழிற்பாடு தொடர்பாக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது மீளாய்வு அமர்வின்போது இலங்கையில் ஊழலுக்கு எதிராக தொழிற்படுவதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்று காணப்படாமை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

v. அதேவேளை திறந்த அரசாட்சிக் கூட்டு (Open Government Partnership) இன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள தேசியத் திட்டத்திலும் இலங்கையில் ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் தேவை வலியுறுதப்பட்டுள்ளது.

vi. GSP- வரிச் சலுகை இலங்கைக்கு வழங்கப்படும் போது ஐரோப்பிய ஒன்றியம் (European Commission) இலங்கையானது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போதிய நடவடிக்கைகள் மேற்கொள்கின்றதா என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்ததுடன் அதன்போது குறிப்பாக ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சமவாயத்துடன் இசைவாக்கம் அடைகின்றதா என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்தது. மேலும் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்று இருக்க வேண்டும் என்பது அவர்களால் வலியுறுத்தப்பட்ட விடயமாக அமைந்தது.

vii. சர்வதேச நாணய நிதியமும் (IMF) அதன் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கும்போது மேற்படி தேவைகள் தொடர்பாக வலியுறுத்தியுள்ளது.

viii. நிலைபேறான இலக்குகளின் 16(5)ஆம் இலக்கு யாதெனில் 2030 ஆம் ஆண்டளவில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழித்து நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதாகும். அதற்காக எம்மிடம் தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்று இருத்தல் வேண்டும்.

## 2. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம்

i. இத்தேவையை இனங்கண்டு 2017.10.11ஆம் திகதிய 731/2325/17 ஆம் இலக்க அமைச்சரவை நிருபத்தின் மூலம் ஊழலுக்கு எதிராக செயற்படுவதன் பொருட்டு தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை வகுப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ii. மேலும் மேற்படி செயற்பாட்டுத் திட்டத்தினை சம்பந்தப்பட்ட முகவராலயங்களின் ஆலோசனைகளைப் பெற்று ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்படுகின்ற வழிகாட்டல்களின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டுமென அமைச்சரவை மேலதிகமாகவும் தீர்மானித்திருந்தது.

## 3. தேசிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுதல்.

i. அதன் பிரகாரம் ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டல்களின் கீழ் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் முழு ஆதரவுடன் நாடு தழுவிய ரீதியில் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டன.

ii. அதன்போது பல்வேறுபட்ட துறைகள் உள்வாங்கப்படுகின்ற வகையில் அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய மக்கள் பிரதிநிதிகள், அரச துறை, மதத்தலைவர்கள், தனியார் துறை, கலைஞர்கள், சிவில் சமூகம், ஊடகங்கள், தொழில்வாண்மையாளர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட குழுக்களிடமிருந்து கருத்துகளும் முன்மொழிவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. குறிப்பாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக 4 அமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவ்வாறு நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சுமார் 15 இலட்சம் அரச ஊழியர்களைக் கொண்டமைந்த அரச சேவையில் மேற்கொள்ளப்பட்ட மாநாட்டினைப் போன்று அமைந்தன.

iii. நாடு பூராகவும் சென்று கருத்துக்களை ஒன்றுசேர்த்து நேர்மைத்திறன்மிகு தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தை முதலாகக் கொண்டு வரைபு செய்யப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டமானது இலங்கையின் சகல தரப்பினரினதும் கருத்துகளைப் பிரதிபலிக்கின்ற ஒரு ஆவணமாகும்.

iv. இவ்வகையில் சகல கருத்துகளும் ஒன்றுசேர்க்கப்பட்ட தேசியத் திட்டத்தின் இறுதி வரைவு நகலானது அரச மற்றும் ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்த தொழிற்பாட்டுக்குழு அல்லது நிறைவேற்றுக் குழு மூலம் பரிசீலிக்கப்பட்டது.

## 4. நேர்மைத்திறன்மிகு தேசமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான நோக்கத்தை முதலாகக் கொண்டு வரைவு செய்யப்பட்ட தேசிய செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்படுதல்.

நாடு தழுவிய ரீதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட திட்டமானது 2019 பெப்ருவரி 05 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி செயற்பாட்டுத் திட்டம் எதிர்வரும் ஐந்தாண்டுகளில் அதாவது, 2019 - 2023 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ள இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான பிரதான உபாயமார்க்கங்கள்.

i. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான இத்தேசிய செயற்பாட்டுத் திட்டம் நமது நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 04 பிரதான உபாயமார்க்கங்களை இனங்கண்டுள்ளன. அவையாவன,
   - தடுப்பு
   - சாதகமான மனோபாவங்களை விருத்தி செய்தல்
   - புலனாய்வு மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்தல்
   - சட்டங்கள் மற்றும் கொள்கைகள் அறிமுகம் செய்யப்படுதல்.

ii. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதில் மிகவும் தீர்க்கமான விடயங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட 04 நூல்கள் தேசிய செயற்பாட்டுத் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ளன.

iii. குறித்த 04 நூல்களாவன,
   a. அன்பளிப்பு விதிகள் உள்ளடங்கிய முன்மொழிவு வரைவு நகல்
   b. நலன்களுக்கு இடையிலான மோதல் பற்றிய விதிகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட முன்மொழிவு வரைவு நகல்
   c. அரச உத்தியோகத்தர்களுக்கான நேர்மைத்திறன் கையேடு
   d. இலஞ்சம், சோத்துக்கள், பொறுப்புகள், ஆணைக்குழுக்கள், தேர்தல் பிரச்சாரங்கள் மற்றும் குரல் எழுப்புவோர் சம்பந்தமான சட்ட வரைவு முன்மொழிவுகள்

v. தேசிய செயற்பாட்டுத் திட்டமும் மேற்படி 4 நூல்களும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 15 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

vi. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அத்துடன் வெளியிடப்பட்ட நூல்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வலைதளத்தில் (www.ciaboc.gov.lk) பதிவேற்றம் (Upload) செய்யப்பட்டுள்ளன.

## 6. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

### a. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கூட்டுப்பொறுப்பு


1. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதானது இந்நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான இன்றியமையாத

ஒரு காரணியாகும். அதற்காக அனைத்து தரப்பினர்களும் சகல அரச நிறுவனங்களும் பாரிய அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.


2. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதானது ஒட்டுமொத்த தேசத்திற்குமான கூட்டுப்பொறுப்பின் பெறுபேறேயொழிய அது வெறுமனே ஒரு நிறுவனத்துக்கு மட்டும் உரிய செயற்பொறுப்பல்ல. எதிர்வரும் 5 வருட காலப்பகுதியில் எமது இலக்காக அமைய வேண்டியது இந்த நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்காக கூட்டுணர்வுடன் செயற்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதாகும்.

ஒட்டுமொத்தமாக மேற்படி செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பன ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற நிபுணத்துவ குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு அது தேசிய நேர்மைத்திறன் பேரவை என பெயரிடப்பட்டுள்ளது.

## தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரித் திட்டம்.



## இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தையும் ஊழலுக்கு எதிரான நிறுவனசார் செயற்பாட்டுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுக்கான மாதிரிக் குறிப்பு




இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை அரச நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு.

i. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை இலங்கையின் அரச நிறுவனங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்கள் உட்பட சகல நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என சனாதிபதியின் செயலாளரினால் விநியோகிக்கப்பட்டுள்ள சனாதிபதி செயலக சுற்றறிக்கை இலக்கம் PS/ACD/01/2019 மற்றும் 2019.07.04 ஆம் திகதிய சுற்றறிக்கையின்

மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii. இத்தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் முதலாவது உபாயமார்க்கமாகிய தடுப்பு முறையியல்கள் மற்றும் இரண்டாவது உபாயமார்க்கமாகிய சாதகமான மனோபாவங்களை விருத்தி செய்தல் ஆகிய 02 உபாயமார்க்கங்களின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு காணப்படுகின்றது.

iii. முதலாவது உபாயமார்க்கமாகிய தடுப்பு முறையியல்களின் கீழ் அரச துறையில் இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்காக பல தடுப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அரச நிறுவனங்களில் நடைமுறைப்படுத்துவது நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும்.

iv. கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டிய அம்சங்களை பின்வரும் வகையில் எடுத்துக்காட்ட முடியும்.

- அரச நிறுவனங்களில் நேர்மைத்திறன்மிகு ஒரு உத்தியோகத்தரை நியமித்தல்.
- நிறுவனங்களில் ஊழல் தடுப்பு குழுவொன்றை நிறுவுதல்
- நிறுவனசார் ஊழல் தடுப்புத் திட்டமொன்றைத் தயாரித்தல்
- பிரஜைகள் சாசனங்களைத் தயாரித்தல் மற்றும் காட்சிப்படுத்துதல்

ஆகிய செயற்பாடுகள் அரச நிறுவனங்களில் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதோடு அதுதொடர்பாக மேற்படி சுற்றறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி செயற்பாடுகள் தொடர்பாக பாரியளவிலான புரிதலை தேசிய செயற்பாட்டுத் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ள நேர்மைத்திறன் கையேட்டினை கற்றாராய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பிரதான வகைகளுக்கு மேலதிகமாக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதும் நிறுவனத் தலைவர்களினதும் மேற்படி செயற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

- பகிரங்க சேவைகளை இயன்றளவு -அரச முறையில் வழங்குதல்
- அரச ஊழியர்களை நேர்மைத்திறன் உறுதிமொழிக்கு உட்படுத்துதல்
- நலன்களுக்கு இடையிலான மோதல் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல்.
- அன்பளிப்பு விதிகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல்.
- தாபன விதிக்கோவை உட்பட ஒழுக்கநெறிக் கோவைகள் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டல்.
- அரச உத்தியோகத்தரின் நேர்மைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் சாதகமான மனோபாவங்களை மேம்படுத்துதல் தொடர்பாக விழிப்பூட்டுதல்

c. தேசிய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதில் அடங்கியுள்ள தடுப்பு முறையியல்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்.

a. இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இந்த நாட்டிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்குத் தேவையான இன்றியமையாத ஒரு காரணியாகும். அதற்காக நாட்டிலுள்ள சுமார் 15 இலட்சம் அரச ஊழியர்களும் சகல அரச நிறுவனங்களும் பாரிய அர்ப்பணிப்புடன் செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயல்படுவதற்காக அரச உத்தியோகத்தர்களை உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களும் மேற்படி செயற்பாட்டுத் திட்டம் தொடர்பாகவும், அவை சம்பந்தமான சுற்றறிக்கைகள் தொடர்பாகவும், தடுப்பு வேலைத்திட்டம் தொடர்பாகவும் அறிவூட்டப்பட்டிருப்பது மிக முக்கியமாகும். அவ்வாறு உத்தியோகத்தர்கள் விழிப்பூட்டப்பட வேண்டும் என்பது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு அம்சமாகவும் இனங்காணப்பட்டுள்ளது. குறிப்பிட்ட விழிப்பூட்டல் ஆனது சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்கள் அல்லது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் அல்லது வேறொரு நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மட்டும் தனியாக மேற்கொள்ளக்கூடிய ஒரு பணியல்ல.

b. அதன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களை விழிப்பூட்டுவதற்காக பயிற்றுவிப்பாளர்கள் இருத்தல் வேண்டும். எனவே ஒட்டு மொத்த நாடு பூராகவும் பயிற்றுவிப்பாளர்களாகப் பணியாற்றுகின்ற சில உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்துகொள்வதற்கும், அதன் பின்னர் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்படுவதற்கும், அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஏனைய அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்கான பொறுப்பினை ஒப்படைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன.

c. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டமானது மாகாண மட்டத்தில் மேற்கொள்வதற்கான மூன்றுநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 09யும் நேர்கோட்டு அமைச்சுக்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றை இலக்காகக் கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்தையும் கொண்டமைந்துள்ளது.

# 15. நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான உத்தேச தேசிய நேர்மைத்திறன் திட்டமும் உத்தேச செயற்பாடுகளும்

## 1. மக்கள் பிரதிநிதிகளின் நேர்மைத்திறனை முன்னேற்றுதல்

A. நேர்மைத்திறன் உடன்படிக்கை/உறுதிமொழி (Integrity Pledge)

i. பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் மேதகு சனாதிபதியுடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
ii. பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகருடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
iii. மாகாண சபை உறுப்பினர்கள் கௌரவ ஆளுநருடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
iv. உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மாகாண முதலமைச்சருடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
v. உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்கள் தமது உள்ளூராட்சி நிறுவன தலைவருடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
vi. அமைச்சர்கள் குறிப்பிட்ட செயலாளர்களுடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
vii. குறிப்பிட்ட செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.
viii. அரச சேவையின் ஏனைய உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேர்மைத்திறன்மிகு உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் உறுதிமொழி வழங்குதல்.

குறிப்பிட்ட உடன்படிக்கையில்/உறுதி மொழியில் ஏனைய விடயங்களுக்கு மத்தியில் பின்வருவனவற்றை உள்ளடக்குவதற்கு விசேடமாக நடவடிக்கை எடுப்பது பொருத்தமாகும்.

- எதிர்பார்க்கப்படும் வெற்றிகரமான விளைபயன் இலக்குகள் யாவை என்பது
- நேர்மைத்திறனுக்கான அடிப்படைக் கோட்பாடுகள்
- நலன்களுக்கு இடையிலான தொடர்பு பற்றிய விழுமியங்கள்
- அன்பளிப்புப் பெறப்படுவதற்கு எதிரான கோட்பாடுகள்

- தமது சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமான அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்துவதற்கான கடப்பாடுகள்.

B. மக்கள் பிரதிநிதிகளுக்காக ஒழுக்கநெறிக் கோவை தயாரிக்கப்படுதல்

மக்கள் பிரதிநிதிகளுக்கான ஒழுக்கநெறிக் கோவையொன்றை சர்வதேச நியமங்களுடன் தயாரித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

அதன்போது பின்வரும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பாக தனித்தனியான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. பாராளுமன்ற உறுப்பினர்கள்
ii. மாகாண சபை உறுப்பினர்கள்
iii. உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள்

## 2. அரச சேவைக்கான நேர்மைத் திறன்மிகு வேலைத்திட்டம்

இங்கே கீழே தரப்பட்டுள்ள அரச துறைக்கான நேர்மைத்திறன்மிகு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சனாதிபதி செயலகத்தினால் விநியோகிகப்படுகின்ற சுற்றறிக்கைகள்.'.வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

A. நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர் அரச நிறுவனங்களில் நியமிக்கப்படுதல்.

### நியமனம்

i. அரச நிறுவனத்தைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தராக நியமிக்கப்படுதல் வேண்டும்.
ii. நிறுவனத் தலைவர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு நேர்மைதிறன்மிகு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவது தொடர்பாக பொறுப்பு பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

### பணி

i. நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர் தமது அரச நிறுவனத்தின் அன்றாடச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதோடு ஏதேனும் இலஞ்சம் அல்லது ஊழல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அவதானிக்கப்படும்போது அது தொடர்பாக நிறுவனத் தலைவரை விழிப்பூட்ட வேண்டும்.
ii. தமது அரச நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முறையியல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றைப் பரிசோதித்தல் மற்றும் குறிப்பிட்ட முறையியல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் தெளிவற்றதாகவும் சிக்கலானதாகவும் இருக்கும் பட்சத்தில் அவற்றைத் தெளிவானதும் எளிமையானதுமாக மீண்டும் தயாரித்துக்கொள்வதற்குத் தேவையான

நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

iii. தமது அரச நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முறையியல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் தொடர்பாக நிறுவனத்தின் சகல ஊழியர்களையும் விழிப்பூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

iv. தேவையான சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான வசதிகளை வழங்குவதற்காக வசதிபடுத்தும் உத்தியோகத்தர் ஒருவரை (Facilitating Officer) நிறுவனத் தலைவரின் வழிகாட்டலின் மீது நிறுவனத்திலிருந்து தெரிவு செய்வதற்கு நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தர் பொறுப்புபார்த்துக் கொள்ள வேண்டும்.

v. வசதிபடுத்தும் உத்தியோகத்தர் மூலம் தமது நிறுவனத்தில் சேவைகளைப் பெறுவதற்கு வருகின்ற மக்களுக்கு நிறுவனத்தின் அன்றாட செயன்முறை தொடர்பாகவும் நிறுவனத்திலிருந்து வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் விழிப்பூட்டல்களை வழங்குதல், ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

vi. தமது அரச நிறுவனத்திலிருந்து வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக பிரஜைகள் சாசனங்களை தயாரிப்பதற்கு முன்னின்று பணியாற்றுதல்.

vii. அவ்வாறு தயாரிக்கப்படுகின்ற பிரஜைகள் சாசனங்களை தெளிவாகத் தெரியும் வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

viii. பிரஜைகள் சாசனங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ix. நிறுவனத்தில் முறையான ஒழுக்கநெறிக் கோவையொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

x. ஊழல் தடுப்பு தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினால் குறித்துரைக்கப்படுகின்ற அன்பளிப்புகள் பற்றிய விதிகள் தொடர்பாக சகல ஊழியர்களும் இசைவாக்கமடைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

xi. ஊழல் தடுப்பு தேசிய செயற்பாட்டு திட்டத்தினால் குறித்துரைக்கப்படுகின்ற நலன்களுக்கு இடையிலான மோதல் பற்றிய விதிகள் தொடர்பாக சகல ஊழியர்களும் இசைவாக்கமடைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

xii. சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய சட்டத்திற்கு உரிய நிறுவனத்தின் சகல ஊழியர்களும் இசைவாக்கம் அடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

B. அரச நிறுவன மட்டத்தில் ஊழல் தடுப்புக் குழுக்களை நிறுவுதல் (Corruption Prevention Committees)

## தாபிக்கப்படுதல்

i. இக்குழுக்கள் பொது நிருவாக அமைச்சினால் நிதமும் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். ஏனைய அமைச்சுக்களில் அதற்கான கண்காணிப்புப் பொறிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

ii. நிறுவனத்தின் சகல பிரிவுகளும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் வகையில் இந்த குழுக்களுக்கு அங்கத்தவர்கள் நிறுவனத் தலைவர்களால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

## பணி

i. தமது நிறுவனத்தில் இடம்பெறுகின்ற மற்றும் இடம்பெறக்கூடிய இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கான வாய்ப்புகளை இல்லாதொழித்தல்.

ii. தமது நிறுவனத்தில் இடம்பெறுகின்ற மற்றும் இடம்பெறக்கூடிய இலஞ்சம் மற்றும் ஊழல்களுக்கான வாய்ப்புகளைத் தடுத்தல்.

iii. தமது நிறுவனத்திற்குத் தனித்துவமான ஊழல் தடுப்புத் திட்டமொன்றைத் தயாரித்தல்

iv. குழுவினால் தமது நிறுவனத்தில் ஊழலுக்கு எதிரான திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

v. ஊழல் தடுப்பினை நோக்கமாகக்கொண்டு பல்வகைப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

vi. தேவையான சந்தர்ப்பங்களில் நேர்மைத்திறன்மிகு உத்தியோகத்தருக்குத் தேவையான ஆதரவினை வழங்க வேண்டும்.

C. ஊழல் எதிர்ப்புத் திட்டமொன்றை தயாரிப்பதற்காக

சகல அரச நிறுவனங்களுக்கும் தமது நிறுவனத்திற்குத் தனித்துவமான ஊழல் எதிர்ப்பு திட்டமொன்றைத் தயாரிப்பதற்காகப் பணித்தல்

i. ஊழலுக்கு எதிரான திட்டம் நிறுவன மட்டத்தில் தயாரித்துக்கொள்ளப்படுவதற்காக தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினது தடுப்பு அலகு ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

ii. ஒவ்வொரு அமைச்சின் கீழுமுள்ள நிறுவனங்களில் ஊழலுக்கு எதிரான திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் நிதமும் கண்காணிக்க வேண்டும் என்பதோடு அதற்குத் தேவையான மேற்பார்வை பொறிமுறையொன்றையும் உருவாக்க வேண்டும்.

iii. பொது நிர்வாக அமைச்சு.்.மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்கு பொறுப்புப் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

iv. நிறுவனத்தில் தாபிக்கப்பட்டுள்ள ஊழல் தடுப்புக் குழுவானது நிறுவனத்தில் ஊழலுக்கு எதிரான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

D. பிரஜைகள் சாசனங்கள்

அரச நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள அறிவின்மை மற்றும் தெளிவின்மை அதிகரிக்கும்போது முறைகேடுகளுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். சகல அரச நிறுவனங்களுக்குமான பிரதானிகளும் தமது நிறுவனத்தில் ஊழல் அல்லது இலஞ்சம் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்பு காணப்படுகின்ற அலகுகள் யாவை என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அதற்குக் காரண காரணியாக அமைகின்ற பலவீனமான சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களையும் இற்றைப்படுத்துவதற்கும், பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க வகையிலும் வசதியான வகையிலும் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக,

i. சேவைகளை வழங்குகின்றபொழுது பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற அரச நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கும்போது பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறைகள், சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், தகைமைகள், அதற்காக எடுக்கப்படும் நேரம் மற்றும் ஒவ்வொரு கட்டத்திற்கும் அறவிடப்படும் கட்டணங்கள் என்பவற்றை மிகவும் எளிமையாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டு காட்சிப்படுத்துதல் மற்றும் அச்சிட்டுப் பகிரங்கப்படுத்துதல்.

ii. உரிய காலப்பகுதி கடந்துள்ளதுபோது அரச உத்தியோகத்தர் குறிப்பிட்ட சேவையை வழங்க முடியாதமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்தி மூன்று நாட்களுக்குள் எழுத்தின் வாயிலாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. அத்தகைய தீர்மானத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான தரப்பிற்கு மேன்முறையீட்டு சபைக்கு.்.அதிகாரிக்கு (அது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள) மேன்முறையீடு செய்வதற்கான உரிமை கிடைத்தல்.

iv. மேற்படி சபையானது குறிப்பட்ட அரச உத்தியோகத்தரின் தீர்மானத்தைப் பகுப்பாய்வு செய்து அது தவறாக இருக்கும் பட்சத்தில் அல்லது இயற்கை நீதிக்கு முரணாக உள்ள பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவருக்கு அது தொடர்பாக அறிவித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

E. அரச ஊழியர்களுக்காக ஒழுக்கநெறிக் கோவையொன்றைத் தயாரித்தல்.

அரச ஊழியர்களுக்காக ஒழுக்கநெறிக் கோவையொன்றைத் தயாரித்தல் மற்றும் தாபன விதிக்கோவையை சர்வதேச நியமங்களுக்கேற்ப இற்றைப்படுத்தல்.

அதன் போது பின்வரும் விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படும்.

i. நேர்மைத்திறன் பற்றிய அடிப்படை கோட்பாடுகள்
ii. நலன்களுக்கு இடையிலான தொடர்பு பற்றிய விழுமியங்கள்
iii. அன்பளிப்புப் பெறப்படுவதற்கு எதிரான கோட்பாடுகள்
iv. தமது சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்மான அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்துவதற்கான கடப்பாடுகள்.

F. நேர்மைத்திறன் உறுதிமொழி உள்ளடங்கிய இலச்சினை அறிமுகம் செய்யப்படுதல்.

i. தாம் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்ப்பதாகவும் ஏனையோர் இலஞ்சம் மற்றும் ஊழல் புரிவதை தாம் சகித்துக்கொள்ள மாட்டேன் எனவும் தெரிவிக்கின்ற உறுதிமொழி உள்ளடங்கிய இலச்சினையை இதற்காகப் பயன்படுத்துதல் வேண்டும்.
ii. அதனை சகல மக்கள் பிரதிநிதிகளும் அரச ஊழியர்களும் அணிந்திருப்பதற்கான பணிப்புரைகளை வழங்குதல்.

G. இலஞ்சமும் ஊழலும் அற்ற வலயங்களாக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களைப் பெயரிடுதல்.

i. இதன்போது மக்கள் நிதமும் உலாவுகின்ற இடங்களை இலக்காகக் கொண்டு “இலஞ்சமும் ஊழலும் அற்ற வலயம்” என்ற வாசகங்கள் காட்டப்படுகின்ற காட்சிப் பலகைகளை காட்சிப்படுத்த வேண்டும்.
ii. மேலும் இக்காட்சிப் பலகைகளை இலங்கைக்குள் பிரவேசிக்கின்ற சகல இடங்களிலும் காட்சிப்படுத்த வேண்டும்( உதாரணமாக - விமான நிலையம்).
iii. அரச ஊழியர்கள் யாவரும் அவற்றைத் தமது வீடுகளின் முன்னால் காட்சிப்படுத்த வேண்டும்.

H. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய தவறுகளை அறிக்கையிடுவதற்காக முறையியலொன்றை வகுத்தல்.

i. நேர்மைத்திறன் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுதல்

நேர்மைத் திறன் உடன்படிக்கை/உறுதிமொழிக்கு சகல அரச ஊழியர்களும் கட்டுப்பட்டுச் செயற்படுதல்.

## 3. நீதிபதிகளினதும் நீதிமன்ற உத்தியோகத்தர்களினதும் நேர்மைத்திறனை மேம்படுத்துதல்.

1. ஒழுக்கநெறிகளும் விதிகளும் அறிமுகப்படுத்தப்படுதல்
2. நலன்களுக்கு இடையிலான மோதல் பற்றிய விதிகள் அறிமுகப்படுத்தப்படுதல்
3. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
4. சர்வதேச சமவாயங்கள், சர்வதேச வெளியீடுகள், சாதகமான மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளைப் பின்பற்றுவதற்கு ஊக்குவித்தல்.

## 4. ஒட்டுமொத்த சமூகத்தினதும் இளைஞர்களினதும் சிறுவர்களினதும் நேர்மைத்திறனை மேம்படுத்துதல்

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான மிகவும் வினைத்திறன்வாய்ந்த சக்தி சமூகமாகும். எதிர்காலத்தில் இலஞ்சம் அல்லது ஊழலை முழுமையாக மறுதலிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்பும்போது நேர்மை மற்றும் நேர்மைத்திறன் பற்றிய விழுமியங்களை சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மத்தியில் மேம்படுத்துவது இன்றியமையாததாகும். பல்வேறுபட்ட வயதுக் குழுக்களைச் சேர்ந்த சிறுவர்களையும் இளைஞர்களையும் நோக்கமாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். பாடசாலை/ பல்கலைக்கழக கல்வியின் மூலம் நேர்மைத்திறனை பிரபல்யப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 4. தனியார் துறையின் நேர்மைத்திறனை மேம்படுத்துதல்.

i. ஒழுக்கநெறிகளும் விதிகளும் அறிமுகப்படுத்தப்படுதல்
ii. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
iii. தனியார் துறையில் இடம்பெறுகின்ற ஊழலுக்கு எதிராக சட்டங்களை வகுப்பதற்கு அரசாங்கம் கடப்பாடு கொண்டிருத்தல்.

## 5. விழிப்பூட்டல் மேற்கொள்வதற்கும் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்வதற்குமான செயலமர்வுகள்

நடப்புச் சட்டங்கள், ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள் மற்றும் முறையியல்கள் தொடர்பாக விழிப்பூட்டுவதற்கான செயலமர்வுகளை நிதமும் நடாத்துதல் மற்றும் காலத்துக்கு காலம் மாற்றமடைகின்ற மற்றும் சாதகமான முறையியல்களின் பிரகாரம் எமது சட்டங்களையும் முறைகளையும் இற்றைப்படுத்துவதற்காக சகல துறைகளினதும் பங்கேற்புடன் கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

i. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர்களுக்காக
ii. உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்காக
iii. அரச உத்தியோகத்தர்களுக்காக
iv. நீதிபதிகள் மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்களுக்காக
v. பொதுமக்களுக்காக
vi. தனியார் துறைக்காக
vii. இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்குமாக
viii. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக
ix. ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகத்திற்காக

## 7. முன்னேற்ற மதிப்பீடுக்கான நிபுணத்துவக் குழு நியமிக்கப்படுதல்

இத்தேசிய நேர்மைத்திறன் திட்டம் உரிய முறையில் நடைமுறைபடுத்தப்படுதல் தொடர்பாகவும் அதன் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காகவும் ஜனாதிபதியினால் நிபுணத்துவக் குழு தேவைக்கேற்ப நியமிக்கப்படும்.

# 16. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் பற்றிய சனாதிபதியின் செயலாளரது சுற்றறிக்கை

**2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் தமிழாக்கம்.**

**இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 2019-2023 தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், தேசிய நேர்மைத்தன்மை பற்றிய இணை கட்டமைப்பினை தயாரித்தல் மற்றும் அரச சேவையின் நேர்மைத்தன்மையை மேம்படுத்தல் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தல்**

**01. தேசிய செயற்பாட்டுத் திட்டம்**

1.1. 'இலங்கையில் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றை அங்கீகரிப்பதன் ஊடாக நல்லாட்சியை மேம்படுத்தல் 2019-2023' எனும் தலைப்பில் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் 2019.01.22ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அபஇ/19/0323/101/015ஆம் இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்திற்கு 2019 பெப்ரவரி 05ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அதன் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அதனூடாக நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றினை எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்குள் நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**02. தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

2.1. மேற்குறித்த அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக 2019 மார்ச் மாதம் 18ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் நாட்டில் அரச நிறுவனங்கள், அதிகாரசபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட சகல நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இத்தால் பணிப்புரை விடுக்கின்றேன்.

2.2. இந்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 04 பிரதான வழிமுறைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், விழுமியப் பண்புகளின் அடிப்படையிலான கல்வியும் சமூக பங்களிப்பும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களைப் பலப்படுத்தல், சட்டம் மற்றும் கொள்கை வகுப்பினை மறுசீரமைத்தல் ஆகியனவாகும். ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முதன்மை செயற்பாடு நேர்மைத்தன்மை பற்றிய வழிமுறைகளை ஏற்படுத்துதலாகும்.

**03. தேசிய நேர்மைத்தன்மை தொடர்பான திட்டம்**

3.1. 'தேசிய நேர்மைத்தன்மை பற்றிய இணை கட்டமைப்பினை தயாரித்தல் மற்றும் அரச சேவையின் நேர்மைத்தன்மையை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் 2019.02.18ஆம்

திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்பட்ட அபஇ/19/0667/101/033 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்திற்கு 2019 மார்ச் மாதம் 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அதனூடாக நேர்மைத்தன்மையை மேம்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

3.2. இதற்கமைய ஊழலை ஒழிப்பதற்காக அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் ஆகியன ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென, அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் மூலம் தேசிய நேர்மைத்தன்மை தொடர்பான திட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அரச நிறுவனங்களின் ஊடாகவும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

3.3. அரச நிறுவனங்களில் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் நேர்மைத்தன்மைமிக்க அதிகாரிகளின் செயற்பணிகள் ஆகியவற்றுடன் இணைந்ததாக நேர்மைத்தன்மைமிக்க செயற்பாடுகள் தொடர்பான கையேட்டினை தயாரித்தல்.

4. இதற்கமைய பின்வரும் செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றுமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

i. சகல நிறுவனங்களும் தத்தமது நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

ii. நிறுவனங்களில் ஊழல் எதிர்ப்பு குழுக்களை நிறுவுதல்.

iii. நிறுவனங்களில் ஊழல் எதிர்ப்பு அதிகாரிகளை பெயரிடுதல்.

iv. நிறுவனங்களில் உதவியளிக்கும் அதிகாரியொருவரை பெயரிடுதல்.

V நிறுவனங்களில் குடிமக்கள் சாசனத்தை தயாரித்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.

4.1. இது தொடர்பான மேலதிக தகவல்கள் இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அதனுடன் வெளியிடப்பட்டுள்ள நேர்மைத்தன்மைமிக்க செயற்பாடுகள் தொடர்பான கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறித்த ஆவணங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.ciaboc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

05. தேசிய செயற்பாட்டுத் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ள சன்மானங்கள் தொடர்பான நடைமுறை கையேடு மற்றும் பிணைப்புகளுக்கிடையிலான முரண்பாடுகள் பற்றிய நடைமுறை கையேடு ஆகியன தொடர்பில் அனைத்து அதிகாரிகளினதும் கவனம் செலுத்தப்பட்டு, அவ்விடயம் தொடர்பான தெளிவினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல நிறுவன பிரதானிகளுக்கும் பணிப்புரை விடுக்கின்றேன். குறித்த நடைமுறை கையேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றுநிரூபம் உரிய காலத்தில் வெளியிடப்படும்.

06. மேலும், நிறுவனங்களில் மேற்குறித்த தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உரிய காலத்தில் பாராட்டுவதற்கான நடைமுறையொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய நிறுவனங்கள் பாராட்டி கௌரவிக்கப்படும் எனவும் தெரிவிக்கின்றேன்.

07. மேற்குறித்த சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவனத் தலைவரினால் ஜனாதிபதி செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள 'இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியகத்திற்கு' இன்று முதல் மூன்று மாத காலத்திற்குள் அனுப்பிவைக்குமாறு பணிப்புரை விடுக்கின்றேன்.

உதய ஆர் செனெவிரத்ன<br>
ஜனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்

01. பிரதமரின் செயலாளர்
02. அமைச்சரவையின் செயலாளர்
03. கணக்காய்வாளர் நாயகம்
04. செயலாளர், பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு
05. செயலாளர், நிதி அமைச்சு
06. செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
07. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு

} தகவல் அறிவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்

# ஆறாம் அத்தியாயம்
## உங்கள் அறிவின் பொருட்டு மேலதிகமாகவும்

## 17. நிதமும் கேட்கப்படுகின்ற கேள்விகள்

### இலஞ்சம் என்றால் என்ன?

இலஞ்சம் என்பது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும்போது பகிரங்க சேவையாளருக்கு வழங்கப்படுகின்ற அல்லது பகிரங்க சேவையாளர் பரிந்து கேட்கின்ற எந்த வகையிலுமான அவாநிறைவு ஆகும்.

### அவாநிறைவு என்றால் என்ன?

அசைவுறும் அல்லது அசைவுறா ஆதனம், உளரீதியான திருப்தி, ஏதேனும் பதவி, தொழில், ஒப்பந்தம், ஏதேனும் வகையிலான செலுத்தல், சேவை, பாலியல் ரீதியான அனுகூலம் என்பன அவாநிறைவு என்பதற்குள் அடங்கும்.

### பகிரங்க சேவையாளர் என்பது யார்?

சம்பளம் பெற்றுக்கொண்டோ பெறாமலோ, அரச பதவி வகித்துக்கொண்டு அரசாங்கத்தின் பணிகளை நிறைவேற்றுகின்ற ஒருவர் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுவார்.

### இலஞ்சம் பெறுவதற்கு முயற்சிப்பது ஒரு தவறா?

ஆம்.

### இடைத்தரகர் மூலம் அவாநிறைவு கோரப்படுவது அல்லது ஏற்பது தவறா?

ஆம். ஆள் ஒருவர் அல்லது அவருடைய அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆளொருவர் நேராகவோ மறைமுகமாகவோ, முதற் கூறப்பட்ட ஆளுக்காகவாயினுஞ்சரி அல்லது வேறெவரேனும் ஆளுக்காகவாயினுஞ்சரி ஏதேனும் அவா நிறைவைக் கேட்டல் அல்லது ஏற்றல் தவறாகும்.

### சொத்துக் குவிப்பில் என்ன தவறுள்ளது?

ஆளொருவரின் அறியப்பட்ட வருமானத்தின் அல்லது வரவுகளின் வழிகளுக்குப் புறம்பாக வேறு வகையில் பணம் அல்லது ஆதனம் சேகரிக்கப்படுமானால் குறிப்பிட்ட நபர் அவற்றுக்கு எதிராக விடயங்களை எண்பிக்கும்வரை குறிப்பிட்ட பணம் அல்லது ஆதனம் இலஞ்ச வழியில் சேகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

### ஊழல் என்றால் என்ன?

பகிரங்க சேவையாளராக இருந்தவாறு அரசாங்கத்திற்கு தவறான அல்லது சட்டவிரோதமான நட்டத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தமக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு தவறான அல்லது சட்ட விரோதமான நன்மையை, சாதகமான பயனை அல்லது அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளல் இதன் மூலம் கருதப்படுகின்றது.

### தண்டனைகள் யாவை?

இலஞ்சத்திற்காக

- 7 வருடங்களுக்கு மேற்படாத கடூழிய மறியற்றண்டனை
- 5,000/- மேற்படாத குற்றப்பணம்
- அவாநிறைவின் பெறுமதி

### சொத்துக் குவிப்புக்காக

- மேற்படி தண்டனைகளுக்கு மேலதிகமாக இலஞ்சத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்குக் குறையாத குற்றப்பணம் அல்லது அத்தொகையின் மூன்று மடங்குக்கு மேற்படாத குற்றப்பணம்.
- கைப்பற்றிக்கொள்ளப்பட்ட ஆதனத்தை அரசுடமையாக்குதல்

### ஊழலுக்காக

- 10 வருடங்களுக்கு மேற்படாத மறியற்றண்டனை அல்லது ஒரு இலட்சத்திற்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது அவை இரண்டும்.

### வேறு விளைவுகள் உள்ளனவா?

- அரச சேவையிலிருந்து நீக்கப்படுதல்
- அரச சேவையின் பதவியொன்றுக்கு தகுதியீனமடைதல்
- 7 வருடங்களுக்கு பொதுத் தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கோ பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கோ முடியாது.
- 5 வருடங்களுக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பதற்கோ அல்லது உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கோ முடியாது.

### அரச ஊழியர்கள் தமது சொத்துக்களை வெளியிடுவதற்கு சட்டத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ளனரா?

ஆம். சில குறிப்பிட்ட சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் 30 ஆம் திகதியில் அவ்வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதியில் காணப்படுகின்ற சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த

வேண்டியது கட்டாயமாகும்.

1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுதல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் யாவை?

- பிரகடணங்களை வெளிப்படுத்தாமை
- போலியான தகவல்கள் வழங்கப்படுதல்
- வேண்டுமென்றே தகவல்களைப் புறக்கணித்தல்
- இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கோருகின்ற தகவல்களை வழங்குவதற்குத் தவறும் பட்சத்தில் நீதவான் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வழக்கு விசாரணையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் 1,000/- ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை அலல்து அது இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

பிரித்தெடுத்தல் -

இலஞ்ம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைதளம்

https://tamil.ciaboc.gov.lk/contact/faqs

## 18. பயிற்றுவிப்பாளர்களின் கற்றாராய்தலுக்கான வளப் பட்டியல்

### சட்டதிட்டங்கள்

1. அரசியலமைப்பு
2. 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்சச் சட்டம்
3. 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டம்
4. தண்டனைச் சட்டக்கோவை (15 ஆம் அத்தியாயம்)
5. 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம்
6. 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொதுச்சொத்து துஷ்பிரயோகச் சட்டம்
7. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்
8. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை அறிவிக்கும் சட்டம்
9. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்
10. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்
11. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்
12. 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம்
13. 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டம் (393 ஆம் அத்தியாயம் )
14. 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டம்
15. தாபன விதிக்கோவை
16. நிதிப் பிரமாணங்கள்
17. கொள்வனவு (பெறுகை) வழிகாட்டல்கள்

### சுற்றறிக்கைகள்

1. தேசிய செயற்பாட்டுத்திட்டம் பற்றிய சனாதிபதியின் செயலாளரது சுற்றறிக்கை

### இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் வெளியீடுகள்

1. இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான

தேசிய செயற்பாட்டுத் திட்டம்.
2. நேர்மைத்திறன் கையேடு
3. அன்பளிப்புகள் பற்றிய விதிகள்
4. நலன்களுக்கிடையிலான முரண்பாடு (நல முரண்)
5. சட்டத் திருத்தங்களுக்கான உத்தேசக் கொள்கைகள்
6. இலஞ்சம் மற்றும் ஊழலற்ற சௌபாக்கியமிகு இலங்கைக்காக

## அறிக்கைகள்

1. CIABOC Annual Report -2018
2. CORRUPTION PERCEPTIONS INDEX 2019
3. GLOBAL CORRUPTION BAROMETER 2019-SRI LANKA

## சர்வதேச சமவாயங்கள்

1. UNITED NATIONS CONVENTION AGAINST CORRUPTION
2. Jakarta Statement on Principles for Anti-Corruption Agencies

## தேசிய ஆவணங்கள்

1. திறந்த அரசாங்கக் கூட்டு - இலங்கையின் இரண்டாவது தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2019 - 2021
2. தேசிய நேர்மைத்திறன் திட்டம்

## குறுந் திரைப்படங்கள்

1. இலஞ்சம், நீங்கள் உங்களுக்கே செய்துகொள்ளும் நிந்தனையாகும்
2. நேர்மைத்திறன்மிகு உள்ளத்துடன் வீடு செல்வோம் (பாடல்)
3. ஹா ஹா ஹொதய் ஹொதய் (பாடல்)
4. இலஞ்சத்திற்கு அடிபணியாத அரச ஊழியர்
5. இலஞ்சம் வழங்காத நீங்கள்
6. இலஞ்சம் பெறும் கை தீப்பற்றி எரியும்
7. சாக்கடையானது புழுக்களின் செழிப்பிடமாகும்
8. இலஞ்சம் வாங்குவோர் பல பரம்பரைகளுக்கு நிந்தனை செய்யும் மிலேச்சர்கள்
9. ஊழலின் சங்கிலியை தகர்த்தெறிவோம்
10. நேர்மைத்திறன்மிகு தேசத்தை நோக்கி

## மேலதிக தகவல்களுக்கான இணைப்புக்கள்

1. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - https://www.ciaboc.gov.lk/
2. ஐக்கிய நாடுகளின்போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றிய நிறுவனம் - https://www.unodc.org/
3. அரசாங்க அச்சுத் திணைக்களம் (சட்டங்கள் மற்றும் வர்தமானிகளுக்காக) - http://www.documents.gov.lk/

4. சட்டங்கள்.ஃ.வழக்குத் தீர்ப்புகள்.ஃ.சர்வதேச சமவாயங்களுக்காக - https://www.lawnet.gov.lk/
5. Transparency International - www.transparency.org
6. Government Accountability Project- www.whistleblower.org
7. Hong Kong Independent Commission against Corruption - https://www.icac.org.hk/en
8. Anti-Corruption resource center - www.u4.no

"……………………..கூலிபெறாமல் இங்கு வேலை செய்யக்கூடாது" என்று எல்லோருக்கும் அறிவித்தான். ஒவ்வொரு வாயிலிலும் பதினாறு நூராயிரம் கஹபணமும், பலவிதமான உடைகளும், ஏராளமான அணிகளும், உணவு வகைகளும், பானங்களும், நறுமண மலர்களும், சர்க்கரை போன்றவைகளையும், வாயிலில் இடுவதற்கான ஐந்து வாசனைப் பொருட்களையும் வைக்குமாறு அரசன் கட்டளையிட்டான். "விரும்பிய அளவு வேலை செய்து இஷ்டம்போல் வேண்டியதை இதிலிருந்து அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்" என்ற அரசனுடைய உத்தரவுக்கிணங்க தொழிலாளர்கள் தமது கூலியைப் பெற்றுக்கொண்டனர்……." (மகாவம்சத்தின் முப்பதாம் அத்தியாயம்)

துட்டகைமுனு மாமன்னன் ஸ்வர்ணமாலி ஸ்தூபத்தை நிர்மாணிப்பதற்காக தமது உழைப்பினை வழங்கிய தொழிலாளர்களுக்கு கூலி செலுத்தியுள்ள விதமே மேற்படி பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தொழிலாளர்கள் தாம் ஆற்றிய பணிக்கான கூலியை தாமாகவே தீர்மானித்துள்ளனர். அவர்களால் தீர்மானிக்கப்பட்ட கூலிக்காக மன்னரினால் விகாரை வளாகத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் ஏனைய பொருட்களை அவர்கள் தாமாகவே பெற்றுக்கொண்டுள்ளனர். ஸ்தூபத்தின் நிர்மாணப் பணிகள் முடியும் வரை இச்சுயமதிப்பீடும் கூலியும் பெற்றுக்கொள்ளப்படுவது இடம்பெற்றுள்ளன.

அத்தகைய செயன்முறையொன்றை இடையறாது பேணிச் செல்லும் அளவிற்கு அப்போதைய இலங்கையர்கள் நேர்மைத்திறன்மிக்கதாக பணியாற்றியுள்ளனர் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு ஆனது அக்காலத்தில் உயிர்வாழ்ந்த மனிதர்களின் நேர்மையின் மூலம் உற்சாகம் பெற்று விரிவான கலந்துரையாடலின் ஊடாக ஊழலை இல்லாதொழிப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு பிரதான அம்சமாகிய **"விழுமியம்சார் கல்வி மற்றும் சமுதாயத்தை இணைத்தல்"** பற்றிய நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத் தொடரின் பொருட்டு மூன்று கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவையாவன,

1. **மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை** – நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டத் தொடரின் பயிற்றுவிப்பாளர்கள், வளவாளர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் என்போருக்கான வழிகாட்டல்கள்.

2. **வளக் கையேடு** - நேர்மைத்திறன்மிகு பயிற்றுவிப்பாளர்களின் விடயசார் அறிவினை மேம்படுத்துவதற்கான விடயப்பொருள்கள்.

3. **ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டல் கோவை** – ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கான வழிகாட்டல்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பயிற்சிக் கருவிகள்.

CIABOC

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

9 786245 040162